கிறிஸ்தவம்

தரம்

8

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

முதலாம் பதிப்பு - 2016

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
....
.... அச்சகத்தினால்
அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.

கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

சுதந்திரக் கல்வியைச் சகல விதத்திலும் பாதுகாப்பதே எமது எதிர்பார்ப்பாகும். உலகில் சுதந்திரக் கல்வியை வழங்கும் சொற்ப நாடுகள் மத்தியில் இலங்கை முன்னிலை வகிக்கும் நாடாக இருப்பது ஒரு பாக்கியமாகும். எனவே முறையான கல்வியைப் பெறும் எமது நாட்டின் சகல சிறார்களுக்கும் உரிய விடயதானங்களை முறையாகப் பெற்றுக்கொடுப்பதை நோக்காகக்கொண்டு இலவசப் பாடநூல்களை விநியோகிப்பதானது ஒரு முதல்நிலைச் செயற்பாடாகும். நீங்கள் அவ்வுரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான அதிர்ஷ்டம் பெற்ற மாணவராவீர்கள்.

அறிவு நூற்றாண்டை நோக்கி அடியெடுத்துவைத்திருக்கும் இவ் யுகத்தில் இலங்கை உலகின் ஏனைய நாடுகளுடன் சகல துறைகளிலும் முன்னேறிச் செல்ல வேண்டும். இப்பயணத்தில் அறிவில் இற்றைப்படுத்தப்பட்ட உங்களைப் போன்ற ஒரு மாணவர் சமூகம் எமது தாய் நாட்டிற்குப் போன்றே முழு உலகிற்கும் பொருந்தும் விதமாக, பூரணமிக்க அறிவைக் கொண்ட ஒரு சமூகமாகத் திகழ வேண்டுமென்பதே எமது ஒரே எதிர்பார்ப்பாகும். சுமார் நான்கு மில்லியன் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடநூல்களை விநியோகிப்பதற்காக அரசாங்கம் பாரியளவு நிதியைச் செலவிடுகின்றது. இங்கு உங்கள் கடமையும் பொறுப்பும் யாதெனில் இந்நூலைப் பாதுகாப்பாகப் பயன்படுத்திக் குறித்த அறிவை விருத்தி செய்துகொண்டு முன்னோக்கிச் செல்வதுடன் மேலதிக நூல்களை வாசிப்பதற்காக உங்களை ஊக்குவித்துக் கொள்வதுமாகும். கற்றலுக்காகக் கற்க நீங்கள் தயாராக வேண்டும். இதன் மூலம் நாட்டுக்கும் காலத்துக்கும் பயன்மிக்கதொரு பிரஜையாகவதற்கு அவசியமான பலமானதொரு அடித்தளத்தைப் பெற்றுக்கொள்வீர்கள் என்ற மேன்மையான எதிர்பார்ப்புடன் இந்நூலை உங்களுக்கு வழங்குகின்றேன்.

அகில விராஜ் காரியவசம்
கல்வி அமைச்சர்

முன்னுரை

அறிவு, திறன், ஒழுக்க விழுமியங்கள், தன்நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளும் கற்றல் செயற்பாடு கல்வி என அறியப்படுகின்றது. என்றும் போல முறையான கற்றலொன்று ஆரம்பமாவது பாடசாலைக் கல்வி மூலமாகவே ஆகும். நாட்டிற்குச் செயற்றிறன் மிக்க எதிர்காலப்பிரசையொருவரை உருவாக்குவதற்கு அவசியமான ஆரம்ப அத்திபாரம் பாடசாலை மூலமே இடப்படுகின்றது என்பதில் சந்தேகமில்லை. இந்தவகையில் சமூகம் ஏற்றுக்கொள்ளும் சிறந்த பிரசைகளை நாட்டுக்கு வழங்கும் நோக்கை முன்வைத்தே இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

பாடசாலைப் பாடத்திட்டம் காலத்திற்குக்காலம் மாற்றப்பட்டு அதற்கிணங்க புதிய பாடநூல்கள் உருவாக்கப்பட்டு உங்களுக்கு வழங்கப்படுகின்றன. இதன் நோக்கம் நிகழ்காலத்தில் காணப்படும் அறிவை உங்களுக்கு வழங்கி வளர்ச்சியடைந்த விஞ்ஞானத் தொழினுட்ப அறிவுடன் கூடிய எதிர்கால உலகிற்கு உங்களைத் தயார்படுத்துவதாகும். இதன் நிமித்தம் கடந்த ஆண்டு தரம் 1, தரம் 7, தரம் 11 ஆகிய தரங்களுக்குப் புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இவ்வாண்டு தரம் 2, தரம் 8 ஆகியவற்றிற்குப் புதிய நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இச்செயற்பாடு தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் இப்பாடநூலின் மூலம் முழுமையான பிரசையொருவராகும் அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான உறுதுணை உங்களுக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கின்றேன்.

இந்நூலை வெளியிடுவதில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுட் பட அனைவருக்கும் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

டபிள்யூ. டீ. பத்மினி நாளிகா
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2016.05.12

கண்காணிப்பும் மேற்பார்வையும்	:	**திருமதி. டபிள்யூ. டீ. பத்மினி நாளிகா** கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
வழிகாட்டல்	:	**திருமதி. டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி** கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி) கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
இணைப்பாக்கம்	:	**திருமதி. ஆர். டீ. விஜேவிக்ரம** பிரதி ஆணையாளர் கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
	:	**திரு. அ. ஞானேஸ்வரன்** அபிவிருத்தி உதவியாளர் கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
ஆலோசனை	:	**வணக்கத்துக்குரிய கீர்த்திசிறி பர்னாந்து** குரு முதல்வர் (நுவரெலியா) இலங்கை திருச்சபை.
பதிப்பாசிரியர் குழு	:	**அருட்பணி. சி. டபிள்யூ. சி. பால்ராஜ்** அதிபர் பரி. தோமஸ் கல்லூரி, பண்டாரவளை.
	:	**எம். ஹேமசந்திர பெரெரா** உதவி கல்வி பணிப்பாளர் கிறிஸ்தவம் (ஓய்வு பெற்ற) கல்வி அமைச்சு.
	:	**அருட்பணி. மிகிரி டி சில்வா சல்காது** செயலாளர், கிறிஸ்தவ கல்வி மன்றம் தேசிய கிறிஸ்தவ மன்றம், கொழும்பு.
எழுத்தாளர் குழு	:	**திருமதி. டி. குளோரி எப்சிபா** ஆசிரியர் கம்பளை இந்து கல்லூரி, கம்பளை.

: **திருமதி. எம். பி. செல்வநிதி பெரேரா**
ஆசிரியர் (ஓய்வு பெற்ற)

: **திருமதி. நிலந்தி தீபா டி சில்வா**
ஆசிரியர்
மெதடிஸ்த உயர் கல்லூரி
புவக் அரம்ப, மொரட்டுவ.

: **திருமதி. எம். ரதீகா சமந்தி மென்டிஸ்**
ஆசிரியர்
தூய தோமையர் கல்லூரி
கல்கிசை.

: **திருமதி. எம். ரேணுகா தமயந்தி**
ஆசிரியர்
மாவதகம மத்திய ம.வி
மாவதகம

: **திருமதி. நிலூகா சாமினி உடுமுல்ல**
ஆசிரியர்
கிங்ஸ்வுட் கல்லூரி
கண்டி.

மொழிப் பதிப்பாசிரியர் : **திருமதி. ச. அற்புதரூபன்**
ஆசிரியர்
கொ/குமர உதயம் தமிழ் வித்தியாலயம்
கிருலப்பனை.

சரவை பார்ப்பு : **திரு. க. மகாவலிராயன்**
அபிவிருத்தி உதவியாளர்
கல்வி அமைச்சு
இசுருபாய.

கணினி வடிவமைப்பு : **செல்வி. நாகரட்ணம் சந்திரப்பிரியா**
கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

பொருளடக்கம்

1 PhÄ Î ß \õ¯¼À E ¸ ÁõUP¨£mh ©Û uß

தொடக்கநூல் 1: 26 - 27, 2: 9

புதிய வருடம்! புதிய வகுப்பு!!

எட்டாம் தரத்திற்கு உயர்த்தப்பட்ட மாணவர்கள் புதிய வருடத்தில் கிறிஸ்தவமறை பாடத்தைக் கற்கப் போகும் முதல் நாளான இன்று உங்கள் அனைவருக்கும் காலை வணக்கமும் புதுவருட வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

இவ்வாறு வாழ்த்துக் கூறிக்கொண்டே ஆசிரியை வகுப்புக்குள் வந்தார். பிள்ளைகளும் ஆசிரியைக்கு வாழ்த்துக் கூறினார்கள்.

ஆசிரியர் : இன்று பாடத்தை ஆரம்பிப்பதற்கு முன்பதாக நான் உங்களிடம் கேள்விகள் கேட்பேன். நீங்கள் நன்றாகச் சிந்தித்துப் பதில் கூறுங்கள். கேள்வி என்னவென்றால் இவ்வுலகில் நீங்கள் காணும் உன்னத படைப்பு என்ன?

பிரவீன் : பல படைப்புக்கள் என் நினைவில் வருகின்றன கணினி, விமானம், நீர்மூழ்கிக் கப்பல் போன்ற படைப்புக்கள்...

தீபன் : ‘‘உலக அதிசயங்கள் ஏழு’’ எனப் பெயரிடப்பட்ட படைப்புகள் தான் நான் அறிந்த அளவில் உலகில் காணப்படும் விஷேட படைப்புகளாகும்

ஏனைய மாணவர்கள் : ஏன் தொலைபேசி, ரொபோ இயந்திரம்.

ஆசிரியர் : நல்லது! மாலா என்ன பெரிய யோசனை?

மாலா : இப்போது குறிப்பிட்ட அனைத்துமே உயர்ந்த படைப்புக்கள் தான். ஆனால் அவை அனைத்தையும் உருவாக்குவதற்கு மூலகாரணமானவன் மனிதன் அல்லவா? எனவே நான் எண்ணுகிறேன் இந்த உலகத்திலே காணப்படும் உன்னத படைப்பு மனிதன்தான்.

ஆசிரியர் : மிகவும் நல்லது! மாலாவின் பதில் சரியானது. இந்த உலகின் உன்னத படைப்புத் தான் மனிதன். அப்படியானால் மனிதன் யாரால் உருவாக்கப்பட்டான் என்று உங்களால் கூறமுடியுமா?

மாலா : மனிதன் கடவுளால் உருவாக்கப்பட்டான்.

ஆசிரியர் : மிகவும் சரி. நாம் திருவிவிலியத்தில் மேலும் அதைப்பற்றி வாசித்துப் பார்ப்போம்.

> அப்பொழுது கடவுள் ''மானிடரை நம் உருவிலும் நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும் வானத்துப் பறவைகளையும் கால் நடைகளையும் மண்ணுலகு முழுவதையும் நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்''என்றார்.
>
> **தொடக்க நூல் 1:26**

இவ்வாறு நாம் கடவுளால் படைக்கப்பட்டோம் என்பதை திருவிவிலியம் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. படைப்பிலே உயிர் உள்ளதும் உயிர் அற்றதுமான அனைத்தையும் படைத்த படைப்பாளர் கடவுளே ஆவார். கடவுளின் இப்படைப்புக்கள் அனைத்திலும் விசேட படைப்பான மனிதன், கடவுளின் மூலமாக உன்னத இடத்தைப் பெற்றுள்ளான். ஏனெனில் தம் உருவிலும் தம் சாயலிலும் கடவுளுக்குச் சமமாக மனிதனைக் கடவுள் உருவாக்கினார்.

கடவுளின் படைப்பில் மனிதனுக்கு உன்னத இடத்தைக் கொடுத்தது ஏன்? அது அவர் எம்மீது காண்பித்த அளவில்லா அன்பினால் அல்லவா?

ஆம், அவரின் சாயலிலும் உருவிலும் படைக்கப்பட்ட நாம், கடவுள் எம்மில் கொண்டுள்ள அன்பின் ஆழத்தை அறிந்துகொள்ள வேண்டும்.

எம் மீது எல்லையில்லா அன்பு செய்யும் கடவுளுக்கு நாமும் அளவில்லா அன்பு செய்வது எமது கடமையும் பொறுப்புமாகும்.

கடவுள் மீது அன்பு செய்வது எப்படி? கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சிப்பதன் மூலமாகும்.

கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு எம்மால் என்ன செய்ய முடியும் என்பதைப் பார்ப்போம். அதற்காக நாம்,

- எம்மை படைத்த அன்பு நிறைந்த இறை தந்தையிடம் முழு விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் தரித்திருப்போம்.

- இறை படைப்பை ஆளுகை செய்யும் பொறுப்பு மனிதனிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பதனால் நாம் இறை படைப்பைப் பாதுகாத்து விருத்தி செய்யும் பொறுப்பாளர்களாக செயற்படுவோம்.

- இறை படைப்புகளில் ஒப்பற்ற பெறுமதியை மனிதனுக்கு உரிமையாகக் கொடுத்தமையால் நாம் எமது வாழ்வின் பெறுமதியை விளங்கிக்கொள்வோம்.

- இறை குணாதிசயங்களுடன் எம் வாழ்வை பாதுகாத்துக் கொள்வோம்.

- உடல், உள, ஆன்மீக ரீதியில் எங்களுக்கு கிடைத்த சுதந்திரத்தை நல்ல முறையில் பயன்படுத்துவோம்.

- இறை அன்பை எமது வாழ்விற்கு முன்மாதிரியாகக் கொண்டு, பிறர் மத்தியில் அதை வெளிப்படுத்துவோம்.

மனிதர் மேல் கொண்ட அளவில்லா அன்பினால் தமது சாயலிலும் தமது உருவிலும் படைத்து மனிதனுக்கு உயர்ந்த பெறுமதியான நிலையைக் கொடுத்த கடவுள், ''அவர்கள் கடல் மீன்களையும் வானத்துப் பறவைகளையும் கால்நடைகளையும் மண்ணுலகு முழுவதையும் நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்'' என கட்டளையிட்டு, படைப்பு அனைத்தையும் மனிதனிடம் ஒப்படைத்தார். மேலும் அனைத்து செல்வங்களும் நிறைந்து பரிபூரணமாக உருவாக்கப்பட்ட ஏதேன் தோட்டத்தை பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பை மனிதனுக்கு அளித்ததை திருமறை மூலமாக அறிந்து கொள்ளலாம்.

ஆண்டவராகிய கடவுள் கண்ணுக்கு அழகானதும் உண்பதற்கு சுவையானதுமான எல்லா வகை மரங்களையும் தோட்டத்தின் நடுவில் வாழ்வின் மரத்தையும் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தையும் மண்ணிலிருந்து வளரச் செய்தார்.

தொடக்கநூல் 2:9

இவ்வாறு மனிதன் திருப்தியாய் வாழ்வதற்கு கண்ணுக்கு அழகான சூழலையும் உண்பதற்கு சுவையான எல்லா வகை மரங்களையும் வளரச் செய்தார்.

இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான கருத்து யாதெனில், மனிதன் படைப்பின் பொறுப்பாளரும் கடவுள் படைப்பின் உரிமையாளரும் ஆவார். மனிதன் படைப்பின் உரிமையாளன் அல்ல. கடவுள் மனிதன் வாழ்வதற்காக தேவையான அனைத்து செல்வங்களையும் படைப்பினூடாக உருவாக்கிக் கொடுத்து அதை நல்ல முறையில் அனுபவித்து செல்லக் கூடிய பொறுப்பை மனிதனிடம் ஒப்படைத்தார்.

அன்று இறை படைப்பின் கொடைகளை அனுபவித்து வாழ்ந்தவர்களைப் போன்று இன்று நாமும் இறைபடைப்பின் கொடைகளை அனுபவித்து வாழ்ந்து எமக்குப் பின்வரும் சந்ததியினருக்கு இவைகளை ஒப்படைக்கக் கூடியதாக செயல்படுவோம்.

எனவே, கடவுள் தந்த இயற்கை வளங்களை வீண்விரயம் செய்யாது அவற்றை விருத்தி செய்து பயன்படுத்துவது எமது கடமையும் பொறுப்புமாகும்.

இறை கொடைகளைப் பாதுகாக்கும் பொறுப்பாளரான எமது கடமைகளைப் பற்றி மீண்டும் மீண்டும் சிந்தித்துப்பார்க்க வேண்டும். மனிதர் சுயநலமுடன் செயற்படுவதனால் வளங்கள் அழிக்கப்படுகின்றன. இறைபடைப்பானது அனை வருக்கும் பொதுவானது. ஆனால் இன்று உலகில் ஒரு பகுதியினர் ஊட்டக் குறைவாலும் பட்டினியாலும் இறக்கின்றனர். ஏனைய பகுதியினர் பேரளவில் உண்டு மகிழ்ந்திருக்கின்றனர். கடவுள் இந்நிலையை விரும்புவதில்லை. இருக்கின்ற வளங்களை நியாயமாகப் பகிர்ந்து அனைவரும் பயனடைவதற்கான வழிமுறைகளை மனிதன் பின்பற்ற வேண்டும்.

ö\ ¯Ø£õk

''மனிதன் இறை படைப்பின் பொறுப்பாளனே அன்றி உரிமையாளன் அல்ல ''

1. இறை படைப்பின் உரிமையாளன் என எண்ணி செயல்படும்போது மனிதனால் இறைபடைப்பிற்கு ஏற்படும் தீமைகள் மூன்றை எழுதுக.
2. இறை படைப்பிலே உமது வாழ்வு பெறுமதியானது என்பதை எவ்வாறு உணர்வீர்கள்?

2 A ß ¦ h ß £õ x PõÁ À

தொடக்கநூல் 3:1-13, 3:21

இறைவன் மனிதரில் வைத்துள்ள அன்பினிமித்தம் தமது சாயலில் மனிதரைப் படைத்தார். இறைவன் மனிதரில் வைத்துள்ள நம்பிக்கை மற்றும் சுதந்திரத்தை மனிதர் பாதுகாப்பது எவ்வாறு என்பதை இப்பாடத்தில் ஆராய் வோம்.

v ¸ Â Â ¼ ¯ G k z x UPõm h ÀPÒ

ஆண்டவராகிய கடவுள் கிழக்கில் ஏதேனில் ஒரு தோட்டம் அமைத்துத் தாம் உருவாக்கிய மனிதனை அங்கே வைத்தார். ஆண்டவராகிய கடவுள் கண்ணுக்கு அழகானதும் உண்பதற்கு சுவையானதுமான எல்லாவகை மரங்களையும் தோட்டத்தின் நடுவில் வாழ்வின் மரத்தையும் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தையும் மண்ணிலிருந்து வளரச் செய்தார்.

(தொடக்கநூல் 2:8 - 9)

ஆண்டவராகிய கடவுள் மனிதனிடம், ''தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம். ஆனால் நன்மை, தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே; ஏனெனில் அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்'' என்று கட்டளை இட்டுச் சொன்னார்.

(தொடக்கநூல் 2:16 - 17)

உலக படைப்பு பற்றிய அறிக்கை திருமறையில் மீட்பின் வரலாற்றில் பல அடையா ளங்கள் மூலம் நன்கு விளக்கப்பட்டுள்ளது. சிக்கலான படைப்பின் செயற்பாடுகளை அக்காலத்து மக்களுக்கு விளங்கப்படுத்தவும், அவர்கள் விளங்கிக்கொள்ளவும் இலகுவாக இருக்குமாறு இவ்வாறு அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கு குறிப்பிடப்படும் ''இனி அவன் என்றென்றும் வாழ்வதற்காக வாழ்வின் மரத்தை

வைத்தார்.'' (தொடக்கநூல் 3:22) ''நன்மை - தீமை அறியும் மரம்'' என்பது இறை விருப்பத்தை அடையாளப்படுத்துகிறது. நன்மை தீமைகளை பகுத்தறியும் சுதந்திரம் இறைவனால் மனிதருக்கு வழங்கப்பட்டது.

இறைவன் நன்மை - தீமைகளை எம்முன் வைத்திருக்கிறார். ஆனால் அதனை தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் மனிதருக்கு உரித்தானது.

நன்மை - தீமை இவற்றுள் மனிதன் எதைத் தெரிவு செய்தான்?

இறைபடைப்பில் அனைத்து விலங்குகளையும் விட பாம்பு உபாயம் செய்வதில் திறமை வாய்ந்தது. அது பெண்ணிடம் ''கடவுள் உங்களிடம் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலிருந்தும் உண்ணக்கூடாது என்றது உண்மையா? என்று கேட்டது. பெண், பாம்பிடம் ''தோட்டத்தில் இருக்கும் மரங்களின் பழங்களை நாங்கள் உண்ணலாம். ஆனால் தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை மட்டும் நீங்கள் உண்ணக்கூடாது. அதைத் தொடவும் கூடாது. மீறினால் நீங்கள் சாவீர்கள் என்று கடவுள் சொன்னார்''. என்றாள்.

பாம்பு பெண்ணிடம், ''நீங்கள் சாகவே மாட்டீர்கள்; ஏனெனில் நீங்கள் அதிலிருந்து உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும் நீங்கள் கடவுளைப்போல் நன்மை தீமையை அறிவீர்கள் என்பது கடவுளுக்குத் தெரியும்'' என்றது.

அந்த மரம் உண்பதற்குச் சுவையானதாகவும் கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும் அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததைக் கண்டு பெண் பழத்தைப் பறித்து உண்டாள். அதைத் தன்னுடனிருந்த தன் கணவனுக்கும் கொடுத்தாள். அவனும் உண்டான். அப்பொழுது அவர்கள் இருவரின் கண்களும் திறக்கப்பட்டன. அவர்கள் தாங்கள் ஆடையின்றி இருப்பதை அறிந்தனர். ஆகவே அத்தி இலைகளைத் தைத்துத் தங்களுக்கு ஆடைகளைச் செய்து கொண்டனர்.

மென்காற்று வீசிய பொழுதினிலே தோட்டத்தில் ஆண்டவராகிய கடவுள் உலவிக் கொண்டிருந்த ஓசை கேட்டு, மனிதனும் அவன் மனைவியும் ஆண்டவராகிய கடவுளின் திருமுன்னிலிருந்து விலகி, தோட்டத்தின் மரங்களுக்கு இடையே ஒளிந்து கொண்டனர்.

ஆண்டவராகிய கடவுள் மனிதனைக் கூப்பிட்டு ''நீ எங்கே இருக்கின்றாய்? என்று கேட்டார்.'' உம் குரல் ஒலியை நான் தோட்டத்தில் கேட்டேன். ஆனால் எனக்கு அச்சமாக இருந்தது. ஏனெனில், நான் ஆடையின்றி இருந்தேன். எனவே நான் ஒளிந்து கொண்டேன்'' என்றான் மனிதன். ''நீ ஆடையின்றி இருக்கின்றாய்? என்று உனக்குச் சொன்னது யார்? நீ உண்ணக் கூடாது என்று நான் விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டாயோ?'' என்றார். அப்பொழுது அவன் ''என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண், மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள். நானும் உண்டேன்.'' என்றான். ஆண்டவராகிய கடவுள், ''நீ ஏன் இவ்வாறு செய்தாய்?'' என்று பெண்ணைக் கேட்க பெண்,'' பாம்பு என்னை ஏமாற்றியது. நானும் உண்டேன்''. என்றார்.

(தொடக்கநூல் 3:1-13)

இங்கு 'பாம்பு' என்பது தீமையும் உண்ணக்கூடாத மரத்தின் கனி பாவத்தையும் அடையாளப்படுத்துகின்றன. கடவுளுக்குக் கீழ்படியாதிருக்கச் செய்விக்கும் பாம்பு என்னும் தீமை உபாயம் செய்வதில் திறமையானது. இறைவிருப்புக்கு மேலாக தனது விருப்பத்தை மனிதரில் நிறைவேற்றியது. நன்மை - தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தின் கனியை உண்ணக் கூடாது என மனிதன் அறிந்திருந்தான். இருப்பினும் மனிதன் தன்னை நேசித்த இறைவனைவிட தீமை எனும் பாம்பில் நம்பிக்கை வைத்தான். ஆண்டவர் வழங்கிய சுதந்திரத்தை நன்மைக்கே அன்றி தீமைக்காகப் பாவித்தான். இறைவனுக்குக் கீழ்படிந்து வாழ்வதற்குப் பதிலாக அவருடன் சமமாக வாழ ஆசைப்பட்டான்.

அநேக வேளைகளில் பாவ வாழ்வு நல்லது எனத் தோன்றுகிறது. அதில் மிகத் திருப்தி கிடைக்கின்றது போலத் தோன்றலாம். எனவே பலவீனமான மனிதனைத் தன்பக்கமாக்குவதில் பாவம் வெற்றியடைகின்றது. இதனால் பாவம் எனும் போர்வையில் மனிதன் இறைவிருப்பத்தை விட்டு விலகினான். அறிந்து செய்யும் பாவச் செயலால் இறைவனை நோக்கிப் பார்க்கும் திறன் மனிதனை விட்டுச் செல்கின்றது. இதனால் அவர்கள் ஆண்டவரின் திருமுன்னிலையிலிருந்து ஓடி ஒளிந்துகொள்ள முயற்சித்தனர். ''என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண், கனியை எனக்குக் கொடுத்தாள்; நானும் புசித்தேன்''. என்றான். ''பாம்பு என்னை ஏமாற்றியது. நானும் உண்டேன்'' என பெண் மறுமொழி அளித்தாள். பாவம் செய்த எவரும் அதனைப் பிறர் மீது சுமத்துவதை கடவுள் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

இவ்வாறு மனிதரின் பாவத்தின் விளைவால் இறைசாயலை இழந்து, நிலைவாழ்வு என்பன அற்றுப் போயின. அவனுக்கு மரணம் உரித்தானது.

பாவத்தின் சம்பளம் மரணம் என்றால் என்ன?

ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசி களின் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்.

(தொடக்கநூல் 2:7)

இவ்வாறு இறைவனின் உயிர் மூச்சால் நிரம்பிய மனிதன் இறைவனுடன் வாழும் நிலைவாழ்வைப் பெற்றான். ஆனால் அவன் இறைவனை விட்டுப் பாவத்தை தெரிவு செய்து தனக்கு உரித்தான நிலைவாழ்வை இழந்தான். அதனால் அவன் ஆன்மீக ரீதியில் மரணத்தை அடைந்தான். மண்ணால் உண்டாக்கப்பட்ட மனிதன் சரீர ரீதியில் மரணித்து மண்ணுக்கே திரும்புகின்றான்.

இறைவனை மறுத்து, நிலைவாழ்வை இழந்து ஆத்மீக மரணத்தைத் தழுவிக்கொண்ட மனிதன், உடல் ரீதியிலான மரணம் நிகழும் வரையில் துன்பப்படும் நிலையை அடைந்தான்.

அதாவது தனது போசணைக்குத் தேவையான உணவுக்காக மண்ணில் உழைத்து வாழவேண்டும். முட்செடியையும் முட்புதரையும் அது முளைப்பிக்கும் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உணவு தேட வேண்டும் எனக் கூறினார்.

பெண்ணானவள் மகப்பேற்றினால் வேதனைக்கு உட்படுத்தப்பட்டாள். இவ்வாறு மனிதன் தானாகத் தேடிய பாவத்தால் இறைவனை விட்டு விலகி என்றும் துன்பம் அனுபவிக்கும் நிலையில் தூர விலக்கி வைக்க இறைவன் விரும்பவில்லை.

கடும் உழைப்பும், வேதனையும் இக்கதையில் பாவத்தின் விளைவை அடையாளப் படுத்துகின்றது.

''ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கும் அவன் மனைவிக்கும் தோல் ஆடைகள் செய்து அவர்களை அணியச் செய்தார்''.

தொடக்க நூல் 3:21

கடவுளுக்குக் கீழ்ப்படியாமல் செய்த பாவத்தின் விளைவாக தான் ஆடையின்றி இருந்தேன் என்றதால் ஒளிந்து கொண்டேன் என்று கூறிய மனிதனையும் கடவுள் நேசித்தார். அத்தி இலையால் உடலை மறைத்திருந்தவனுக்கு இலைகளுக்குப் பதிலாக தோலினால் ஆடை அணிவித்து பாதுகாப்பை உறுதிப்படுத்தினார். இது இறைவன் மனிதரில் காட்டிய அளவற்ற அன்பை உறுதிப்படுத்தும் அடையாளமாயிருந்தது.

ö\¯Ø£õk

1. ‘‘ஆண்டவராகிய கடவுளை மறுத்து பாவத்தைத் தெரிந்து கொண்டமையால் மனிதனுக்கு மரணம் உரித்தானது.’’ இதனை உங்களது மொழிநடையில் விளக்குக.

3 A Í ÂÀ»õ CøÓ¯ ß¦

விடுதலைப்பயணம் 3: 7-10, 13: 21, 16: 11 - 14, 17: 1- 7

இறைவன் கொடுத்த சுதந்திரத்தை கவனத்திற் கொள்ளாது மனிதன் பாவத்தைத் தழுவிக் கொண்டான். இந்நிலையில் அன்பு நிறைந்த கடவுள், மனிதன் மீது கொண்ட அளவில்லாத அன்பின் நிமித்தம் அடிமைத்தனத்தில் வாழ்ந்த மக்களை மீட்டுக் கொள்வதற்காக எடுத்த முயற்சியை நாம் இங்கு பார்ப்போம்.

பழைய ஏற்பாட்டில் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள் நானூற்று முப்பது (430) வருடங்களாக எகிப்திலே பார்வோன் அரச பரம்பரையினரால் அடிமைகளாக்கப்பட்டனர். இங்கு இவர்கள் பல்கிப்பெருகி எகிப்தியரின் தொகையைவிட விரைவாக அதிகரித்தனர். இந்த நிலை தனது நாட்டின் வருங்காலப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதைக் கண்ட எகிப்திய அரசன் கலக்கமடைந்தான். அதன் விளைவாக அவன் அம்மக்களை கடும் வேலையால் ஒடுக்கினான். அடிமை வேலை வாங்கும் அதிகாரிகள் இஸ்ரயேல் மக்களைக் கொடுமைப்படுத்தி வேலை வாங்கினர். இவ்வாறு அடிமைத்தனத்தினால் அவர்கள் தாங்க முடியாத துன்பத்துக்குள்ளாகினர்.



உரு 3.1 அடிமைகளாக துன்புறும் இஸ்ரேயல் மக்கள்

இருப்பினும் இவ்வாறான நிலையிலும் இஸ்ரயேல் மக்கள் தொடர்ந்தும் பெருகிக் கொண்டே சென்றனர். இதனால் பார்வோன் அரசன் எகிப்திய மருத்துவப் பெண்களை அழைத்து, இஸ்ரயேலருக்கு ஆண் பிள்ளைகள் பிறக்கும் போதே அப்பிள்ளைகளைக் கொன்று போடும்படி கூறினார். கடவுளுக்கு பயந்தபடியால் அவர்கள் ஆண்

பிள்ளைகளைக் கொன்றுபோடவில்லை. எனவே பார்வோன் இஸ்ரயேலர் அனை வருக்கும் பிறக்கும் ஆண்பிள்ளைகளை நைல்நதியில் எறிந்து விடுமாறு ஆணை இட்டான்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் பார்வோனின் மகளின் மூலமாக குழந்தை மோசே காப்பாற்றப்பட்டு அரச மாளிகையில் வளர்க்கப்பட்டார். இஸ்ரயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு அவர்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுப் பதற்காக மோசேயைத் தெரிவுசெய்தார்.


வாசிப்போம்
திருவிவிலியம்
விடுதலைப்பயணம்
3:7.10

''எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன். அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன். அவர்களின் துயரங்களை நான் அறிவேன்''. எனவே இஸ்ரயேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எகிப்திலிருந்து வெளியேற்றி தேனும் பாலும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு அவர்களை வழிநடத்திச் செல்வதற்கு கடவுள் மோசேயைத் தெரிவு செய்த முறையைத் திருமறையில் காண்கின்றோம்.

எவ்வாறாயினும் இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து வெளியேற்றி வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிச் செல்லும் பயணமானது சிறிதும் இலகுவான செயலாக இருக்க வில்லை. தம் மந்தைகளோடு திரளான மக்கள் கூட்டம் கூட்டமாக நாற்பது (40) வருடங்களாக பாலைநிலம் வழியாக நெடும் தூரம் பயணம் செய்தபோது அம்மக்கள் அனுபவித்த துன்பங்கள் அநேகமாகும். ஆனால் அனைத்தையும் அறிந்த கடவுள் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பையும் உணவையும் அளித்து வழிநடத்திச் சென்றதை விரிவாகப் பார்ப்போம்.

ஆண்டவர் பகலில் அவர்களை வழிநடத்த மேகத்தூணிலும், இரவில் ஒளிகாட்ட நெருப்புத் தூணிலும் இருந்தார். பகலிலும், இரவிலும் அவர்கள் பயணம் செய்வதற்காக அவர் அவர்கள் முன் சென்று கொண்டிருந்தார்.

விடுதலைப்பயணம் 13: 21



உரு 3.2 வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி சென்ற வழி

இவ்வாறு இரவு பகல் எனப்பாராது கடவுளின் நிரந்தரமான பாதுகாப்பும் வழிகாட்டலும் இஸ்ரயேல் மக்களோடு இருந்தது. இச்சம்பவத்தை நாம் திரு மறையில் விடுதலைப்பயண நூலில் காண்கின்றோம். மேலும் எகிப்திய பார்வோனின் படைகள் இஸ்ரயேல் மக்களைப் பின்தொடர்ந்து வரும்போது செங்கடலை இரண்டாகப் பிரித்து அவர்களுக்குப் பாதுகாப்பளித்த சம்பவம் கிறிஸ்தவ பிள்ளைகள் அனைவரும் அறிந்ததும் மக்கள் மத்தியில் பிரபல்யமான புதுமைக் கதையுமாகும். **(விடுதலைப்பயணம் 14 :15 -31)**

எகிப்தில் அனுபவித்த அடிமைத்தனத்தில் இருந்து மீண்டு பாலைநிலப் பயணத்தில் கஷ்டம் துன்பம் பிரச்சனைகள் வந்தபோது அவர்கள் மோசேக்கும் கடவுளுக்கும் எதிராக முறுமுறுத்தார்கள். ஒருமுறை பாலைநிலத்தில் உணவு பற்றிய பிரச்சனை உருவான போதும் மோசேக்கு எதிராக முறுமுறுக்கத் தொடங்கினார்கள்.

அவர்கள் மோசேக்கு எதிராக பேசியது.

இஸ்ரயேல் மக்கள் அவர்களை நோக்கி ''இறைச்சிப் பாத்திரத்தின் அருகில் அமர்ந்து அப்பம் உண்டு நிறைவடைந்து எகிப்து நாட்டிலேயே ஆண்டவர் கையால் நாங்கள் இறந்திருந்தால் எத்துணை நலமாய் இருந்திருக்கும்! ஆனால் இந்தச் சபையினர் அனைவரும் பசியால் மாண்டு போகவோ இப்பாலை நிலத்துக்குள் நீங்கள் எங்களைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறீர்கள்'' என்றனர்.

(விடுதலைப்பயணம் 16 :3)

அப்போது கடவுள் மோசேயுடன் பேசி

நான் உங்களுக்காக வானத்திலிருந்து அப்பத்தைப் பொழிவேன். மக்கள் போய்த் தேவையானதை அன்றன்று சேகரித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு என் கட்டளைப்படி நடப்பார்களா இல்லையா என்பதை சோதித்து அறியப் போகிறேன். ஆனால் ஆறாம் நாளில் நாள்தோறும் அவர்கள் சேகரித்து வந்ததைவிட இருமடங்கு சேகரித்துத் தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்றார்.

விடுதலைப்பயணம் 16: 4 - 5


அப்போது மோசே இஸ்ரேயல் மக்கள் எல்லோரையும் நோக்கி

நீங்கள் எகிப்து நாட்டினின்று உங்களை வெளியேறச் செய்தவர் கடவுள் என்பதை இன்று மாலையில் உணர்ந்து கொள்ளப் போகிறீர்கள். காலையில் நீங்கள் கடவுளின் மாட்சியைக் காண்பீர்கள். ஏனெனில் கடவுளுக்கு எதிரான உங்கள் முறையீடுகளை அவர் கேட்டுள்ளார்

விடுதலைப்பயணம் 16: 6 -7

அதன் பின் மாலையில் காடைகள் பறந்து வந்து கூடாரங்களை மூடிக்கொண்டன காலையில் பனிப்படலம் கூடாரத்தைச் சுற்றி படிந்திருந்தது. பனிப்படலம் மறைந்த போது பாலை நிலப்பரப்பின் மேல் மென்மையான தட்டையான மெல்லிய உறைபனி போன்ற சிறிய பொருள் காணப்பட்டது. இஸ்ரயேல் மக்கள் அதனை ''மன்னா'' எனப் பெயரிட்டனர். அது கொத்தமல்லி போன்று வெண்ணிறமாயும் தேன் கலந்து ஆக்கிய பணியாரம் போன்று சுவையாகவும் இருந்தது. **விடுதலைப்பயணம் 16: 31**

PhÄÒ öPõkzu E n Ä



உரு 3.3 மன்னா



உரு 3.4 காடைகள்

இஸ்ரயேல் மக்கள் கானான் நாட்டு எல்லைக்குள் சென்றடையும் வரை கடவுள் தந்த கொடையாக அவ்வுணவை உண்டனர். இவ்வாறு நாற்பது ஆண்டுகளாகக் கடவுள் இஸ்ரயேல் மக்களைப் போஷித்தார்.

மேலும் இப்பயணத்தில் ஓர் இடத்தில் குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்காதபோது மக்கள் தங்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டுமெனக் கேட்டு மோசேக்கு எதிராக வாதாடி கடவுளின் வல்லமையைச் சோதிக்க முற்பட்டபோது கடவுள் தமது வல்லமையைக் காண்பித்து தண்ணீரைப் பெற்றுக் கொடுத்த முறையை ஆராய்ந்து பார்ப்போம்.

விடுதலைப்பயணம்
17: 1-7



உரு 3.7 ஒரேபில் உள்ள பாறையின் தண்ணீர்

இஸ்ரயேல் மக்கள் இறைவனின் பாதுகாப்பின் கீழ் செங்கடலைக் கடந்து சென்றனர். அங்கு தண்ணீர் எதுவுமே தென்படவில்லை பின்னர் அருகில் உள்ள மாரா என்ற இடத்திற்கு சென்றனர். அங்கிருந்த தண்ணீரை அவர்களால் பருக இயலவில்லை. அது கசப்பாக இருந்தது. அப்போது கடவுள் மூலமாக காண்பிக்கப்பட்ட ஒரு மரத்துண்டை தண்ணீரில் எறிய தண்ணீரும் சுவை பெற்றது என்பதை திருமறையில் காண்கின்றோம்.

விடுதலைப்பயணம் 15: 22 - 27

இவ்வாறு எகிப்தின் அடிமைத்தனத்தின் கொடிய துன்பங்களை அனுபவித்த இஸ்ரயேல் மக்கள் மோசேயின் மூலமாக பார்வோனிடமிருந்து விடுதலையைப் பெற்று கடந்து வந்த நீண்ட பயணத்தில் கடவுள் இம் மக்களுக்குத் தேவையான பாதுகாப்பளித்து அவர்களைப் போஷித்து வழிநடத்திய சில சந்தர்ப்பங்களை இதுவரை பார்த்தோம்.

இந் நிகழ்வினூடாக நாம் பெறும் பொதுக் கருத்துகளாவன, விருப்பமில்லா அடிமை

வாழ்விலிருந்து விடுதலையைப் பெற்று சுதந்திரமாக வாழ்வதற்கும், செழிப்பான நாட்டை உரிமையாக்கிக் கொள்வதற்கும் சென்ற பயணத்தில் தற்காலிக துன்பங்களை அனுபவிக்க அவர்கள் விரும்பவில்லை.

உணவிற்காக முறுமுறுத்த சம்பவத்தின் மூலம் (வி.ப.16:3) இது தெளிவாகின்றது. இவ்வாறு கடவுளுக்கும் மோசேக்கும் எதிராக மக்கள் முறுமுறுத்த போதும் அன்பு நிறைந்த கடவுள் மனிதர் மீது கொண்ட அன்பை விட்டுவிலகாது அவரின் வல்லமையான காரியங்களை அனுபவிக்கச் செய்து இடைவிடாது பாதுகாத்து வழிநடத்தினார்.

இன்றைய காலகட்டத்தில் அடிமை வியாபாரநிலை உலகில் எங்கும் இல்லை. ஆனால் மனிதன் பல விதமான அடிமைத்தனத்திற்குள் சிறைப்பட்டிருப்பதைக் காண்கிறோம். உதாரணமாக மக்கள் அறிந்தோ அறியாமலோ பணம், செல்வம், பெயர், புகழ், இலஞ்சம் போன்ற அவசியமற்ற காரியங்களில் நாட்டம் கொள்கின்றனர். எனவே இவைகளும் ஒருவகையான அடிமைத்தனமாகும். முன்பு இருந்த அடிமை வாழ்வு முறையானது மனிதர்களிடையே பலவந்தமாக நிகழ்ந்து வந்தது. இப்போது தானாகவே மேற்குறிப்பிட்டது போன்று அடிமை நிலைக்கு தன்னை ஆளாக்கிக் கொள்கின்றான்.

இவ்வனைத்து அடிமைத்தனத்திலிருந்து எம்மை மீட்டுக் கொள்வதற்கு அன்பு நிறைந்த கடவுள் ஆவலோடு காத்திருக்கின்றார். தற்காலிகமான சந்தோஷத்திற்காக நாம் ஏற்படுத்திக் கொண்ட அடிமை நிலைகளை விட்டு கடவுளின் விருப்பத்திற்கு ஏற்றவாறு எம்மை அர்ப்பணிக்க ஆயத்தமானால் அன்பு நிறைந்த கடவுள் எமது எல்லா விதமான அடிமைத்தனத்திலும் இருந்து மீட்டு, எமது வாழ்விற்கு விடுதலையளிக்க அன்போடு காத்திருக்கிறார்.

ö\¯Ø£õk

1. மனிதன் கடவுளை நிராகரித்தாலும் அன்பு நிறைந்த கடவுள் மனிதன் மீது கொண்ட அன்பை விட்டு விலகமாட்டார். என்பதை இப்பாடத்தின் உதாரணங்களோடு சுருக்கமாக விளக்குக.

2. நீர் வாழும் சமுதாயத்தில் சிறுவர்கள் அநாவசியமாக அடிமைத் தனத்தில் ஈடுபடுவதின் காரணத்தை கலந்துரையாடுங்கள்.

4 CøÓÁÛß •Êø©¯õÚ Aß¦

யோவான் 3 :16, 10 : 11 - 18 - திருப்பாடல் 103: 13 - 17, 136: 1 - 9

அன்பு நிறைந்த கடவுளை நாம் அனுபவிக்கின்றோம். கடவுள் மனுவுரு ஏற்று இயேசுவின் மூலம் 'நல்லாயனாக' செயற்பட்டதை நாம் இப் பாடத்தில் ஆராய்வோம்.

எமது வாழ்வைத் தீமையிலிருந்து மீட்டு நல்வாழ்வு வாழ்வதற்கும் இறையரசின் நிலை வாழ்வை எமக்கு உரிமையாக்கித் தருவதற்காகவும் கடவுள் மனித உருவில் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார் என்பதை திருமறையில் அறிந்துகொள் கிறோம்.

"தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும். அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். யோவான்:**3:16.**

கிறிஸ்தவ பாடநூல்களில் மட்டுமன்றி அநேக கிறிஸ்தவ இல்லங்களில் தோள் மீது ஆட்டுக்குட்டியை அணைத்துக் கொண்டிருக்கும் நல்லாயனின் படம் போடப் பட்டிருப்பதை நீங்கள் அவதானித்து இருப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆடுகள், ஆடுகள் மேய்ப்பவர் என்ற கருத்து கிறிஸ்தவ கலாசாரத்துடன் மிகவும் நெருங்கியிருப்பதை நாம் காணலாம்.



உரு 4.1 பசும்புல்வெளியிலும் அமைதியான நீர் நிலையிலும் தம் மந்தையைப் போஷிக்கும் நல்லாயன்



உரு 4. 2 முட்புதரில் சிக்குண்டு வழிதவறிய ஆடுகளை மீட்கும் ஆயன்

முன்பு ஆடுகளின் ஆயனாக வாழ்ந்த அனுபவத்தினூடாக தாவீது அரசன் தமது திருப்பாடலில் குறிப்பிடுவதைப் போன்று நல்லாயன் தம்மந்தைகளை பசும்புல் வெளியிலும் அமைதியான நீர்நிலைகளிலும் அழைத்துச் சென்று இளைப்பாறச் செய்து தம்மந்தைகளைப் போஷிக்கின்றார். ஆயரின் கையில் உள்ள கோலும் நெடுங்கழியும் ஆடுகளை விழுங்க வரும் ஓநாய்களிடமிருந்து விலக்கி அவைகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காகும். கோலின் ஓரத்தில் காணப்படும் வளைந்த கொக்கி வழிதவறிச் செல்லும் ஆடுகளை மீட்பதற்கும், முட்புதரில் சிக்குண்ட ஆடுகளை மீட்டு எடுப்பதற்கும் பயன்படும். மேலும் ஆயன் காயமடைந்த ஆடுகளைச் சுகப்படுத்தி இரவு பகலாகத் தம்மந்தைகளை நடத்திச் செல்வது அவனின் கடமையாகும்.



உரு 4. 2 தனது வாழ்வையும் பொருட்படுத்தாது வழிதவறிய ஆட்டைத் தேடும் ஆயன்

நூறு ஆடுகள் உள்ள மந்தையில் ஒரு ஆடு காணாமற் போனாலும் அதைத்தேடிக் கண்டுபிடிப்பது நல்லாயனின் செயலாகும். தொன்னூற்றொன்பது ஆடுகள் மந்தையில் இருக்கின்றதே என்று காணாமற் போன ஆட்டைத் தேடாமல், அந்த ஆட்டை ஆபத்தில் விட்டுவிடுபவர் நல்லாயன் அல்ல.

இவ்வாறு இயேசுவும் நல்லாயனின் பண்புகளை ஏற்று அனைத்து மனித இனத்திற்காக அன்பு நிறைந்த உள்ளத்தோடு தம்மை அர்ப்பணித்ததைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போம்.

அவர் கூறியதாவது

''நல்ல ஆயன் நானே நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார். கூலிக்கு மேய்ப்பவர்கள் ஓநாய் வருவதைக்கண்டு ஆடுகளை விட்டுவிட்டு ஓடிப்போவார். ஏனெனில் அவர்கள் ஆயரும் அல்ல; ஆடுகள் அவர்களுக்குச் சொந்தமும் அல்ல ஓநாய்கள் ஆடுகளைப் பற்றி இழுத்துக் கொண்டு போய் மந்தையைச் சிதறடிக்கும். கூலிக்கு மேய்ப்பவருக்கு ஆடுகளைப் பற்றி கவலை இல்லை. நல்ல ஆயன் நானே நான் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன். என் ஆடுகளும் என்னை அறிந்து இருக்கின்றன''.

யோவான்:10:11-14.

நாம் அநேகமாக காண்பது ஆயனானவன் எப்போதும் ஆடுகளின் பின்னால் செல்வான். மந்தையை விட்டு விலகிச் செல்லும் ஆடுகளைத் தன் கையிலுள்ள கோலையும் நெடும்கழியையும் பயன்படுத்தி வழி நடத்துவார். ஆனால் மந்தைகளின் ஆயனின் செயலானது மந்தைக்கு பின்னால் செல்லாது மந்தைக்கு வழிகாட்டியாய் மந்தையின் முன்னால் செல்லவேண்டும்.



உரு 4.4 ஆயனைப் பின்பற்றி செல்லும் மந்தைகள்



உரு 4.5 கொட்டிலை நோக்கிச் சென்ற மந்தைகள்

தம் ஆயனின் உருவத்தையும் அவரின் குரலையும் நன்றாக அறிந்த ஆடுகள் ஆயனைத் தொடர்ந்து பின் செல்லும். ஆயனும் தன் ஆடுகளைத் தனித்தனியாக நன்றாக அறிந்து கொண்டு ஒவ்வொன்றினதும் தேவைகளைச் சரியான முறையில் கவனித்துக் கொள்வர். தேவை ஏற்படும்போது வலிமையற்ற ஆடுகளை தூக்கிச் சென்று அதற்கேற்ற இடத்தில் வைத்துப் பாதுகாப்பார். மந்தையை விட்டு விலகிச்சென்று முட் புதர்களில் சிக்குண்டு காயங்களை ஏற்படுத்திக் கொண்ட ஆடுகளைக் கவனமாக மீட்டுக்கொண்டு அதன் காயங்களை குணமாக்குவார்.

இவ்வாறு எமக்காக நல்லாயரான இயேசுவை அன்பு நிறைந்த கடவுள் இவ்வுலகிற்குள் அனுப்பினார். ஆயனுக்குத் தம் மந்தையில் உள்ள அனைத்து ஆடுகளைப் போல், இயேசுவுக்கும் நாம் அனைவருமே பெறுமதியானவர்கள். அவர் ஒவ்வொருவரின் பெயர்களையும் அறிந்திருக்கிறார். எமது தேவைகளையும் பெலவீனங்களையும் நன்றாக அறிந்திருக்கிறார். நாம் என்ன நிலையில் இருந்தாலும் இயேசுவின் முன்னால் நாம் அனைவரும் சமமானவர்கள். அனைவரையுமே அவர் ஒரே தன்மையுடன் நோக்குகின்றார்.

இயேசு எம்மை அழைத்துச் செல்லும் மேய்ச்சல் நிலமானது இறையரசேயாகும். அவரின் போதனைகள் மூலமாகவும், முன்மாதிரியான வாழ்க்கை மூலமும் இறையரசை நோக்கிச் செல்லும் விடுதலையின் வழியை எமக்குக் காண்பித்தார். எம்மால் செய்யக்கூடியது யாதெனில் விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் இயேசு என்னும் நல்லாயனை நோக்கிப் பார்த்து அவரைப் பின் தொடர்ந்து செல்லவேண்டும். அப்போது எமது வாழ்விற்குத் தேவையான சரீரப்பிரகாரமான காரியங்களையும், ஆவி ஆன்மாவையும் போஷித்து சரியான முறையில் கடவுள் வழி நடத்துவார்.

மேலும் இயேசுவின் பாதுகாப்பின் கீழ் பயணம் செய்யும்போது ஏற்படும் துன்பங்களுக்கோ தீமையான சக்திகளுக்கோ பயப்பட வேண்டியதில்லை. நல்லாயன் தன் வாழ்வை ஈடாக வைத்து ஓநாய்களிடம் இருந்து தம் மந்தைகளைப் பாதுகாப்பது போன்று சகல தீமையான சக்திகளையும் விலக்கி மீட்டு எம்மைப் பாதுகாப்பதற்கு இயேசு வல்லமை நிறைந்தவரும் அன்பு நிறைந்தவருமாய் இருக்கிறார்.

அறிந்து கொள்வோம்.

இயேசுவின் மந்தையிலிருந்து விலகிச் செல்வதற்குக் காரணமான சமுதாயத்தில் நிலவும் தீயசக்திகள் எவையென வகுப்பில் கலந்துரையாடி அறிந்து கொள்வோம்.

கவனித்துப் பார்ப்போம்

தமது மந்தைக்காக நல்லாயன் அளவில்லா அன்புடன் செயற்படுகிறார்.
இயேசு நல்லாயனாக செயற்படுவது அவரை விசுவாசிக்கிறவர்களுக்கு மட்டுமா?
திருமறையில் அதைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போம்.

''இக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்குண்டு நான் அவற்றையும் நடத்திச் செல்ல வேண்டும் அவையும் எனது குரலுக்கு செவி சாய்க்கும் '' அப்போது ஒரே மந்தையும் ஒரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும். யோவான்:**10:16.**

இயேசுவின் மந்தைக் கூட்டத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களான நாம் ஆசீர்வதிக்கப்பட்ட பிரிவினர் என விசுவாசிப்போம். அவ்வாறே அவரின் விருப்பப்படி அவரின் மந்தையைச் சேராதவைகளும் இந்த ஆசீர்வதிக்கப்பட்ட மந்தையில் சேர்க்கப் பட்டுள்ளன. முடிவிலே இயேசுவின் மூலமாக ஒரே மந்தையாக உலகில் உள்ள அனைவரும் ஒன்று சேர்க்கப்படுவர்.

எவ்வாறு அதைச் செய்யமுடியும்?

நல்லாயனின் செயலை தமது வாழ்வின் முன்மாதிரியில் நிறைவு செய்த இயேசு, சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக தமது மேய்ப்புப் பணியை தன் சீடர்களிடம் ஒப்படைத்தார். எனவே தற்போது இயேசுவின் சீடர்களான எமக்கும் அந்த மேய்ப்புப் பணி ஒப்படைக்கப்பட்டது.

> ''ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் - என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்கு கொடுக்கிறேன் நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் நீங்கள் ஒருவர் மற்றவருக்கு செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்''
>
> **யோவான்:13:34-35**

இயேசுவின் அன்பில் நிறைந்து அவரின் போதனை மூலம் முன்மாதிரியான நல்லாயராக இயேசுவின் சீடராக நாம் செயற்பட வேண்டும். இப்போதும் அவரின் மந்தையைச் சேராத மக்களை இயேசுவின் மந்தைக்குள் கொண்டு வருவதற்கு இயேசு எம்மீது காட்டிய அன்பை அவ்வாறே நாம் பிறரிடம் காண்பிக்க வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம், பிறர் இயேசுவை அறிந்து கொள்ளும் வண்ணமாக எமது வாழ்வை நல்வாழ்வாக நடத்துவதை அவர் விரும்புகின்றார்.

இயேசு எம்மீது காண்பிக்கும் அன்பு எவ்வாறானது?

> ''தந்தை என்மீது அன்பு செலுத்துகிறார் ஏனெனில் நான் என் உயிரைக் கொடுக்கிறேன். அதை மீண்டும் பெற்றுக் கொள்ளவே கொடுக்கிறேன். என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கிறேன். உயிரைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு. அதை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் அதிகாரம் உண்டு. என் தந்தையின் கட்டளைப்படியே நான் இப்படிச் செய்கிறேன்.
>
> **யோவான்:10:17-18.**

இவ்வாறு எவ்வித தயக்கமுமின்றி இயேசு தாமாகவே விரும்பி எமக்காக தம் உயிரை அர்ப்பணித்தது மனிதர்களாகிய எம்மீது கொண்ட அளவில்லா அன்பினாலாகும்.

மண்ணினால் உருவாக்கப்பட்டு கடவுளின் உயிர்மூச்சைப் பெற்று உருவான மனிதன் பாவத்தைத் தெரிவு செய்துகொண்டதால் நிலைவாழ்வைத் தானாகவே அழித்துக்கொண்டான். ஆனாலும் கடவுள் இயேசுவின் மூலமாக இவ்வுலகில் வந்து, தமது விருப்பத்தின்படியே, எமக்காகத் தம்மைப் பலியாக்கி, நிலைவாழ்வை எமக்கு மீண்டும் பெற்றுத் தந்தார்.

அறிந்துகொள்வோம்
திருவிவிலியம்
திருப்பாடல் 103:13-17
திருப்பாடல் 136:1-9

இயேசுவில் வெளிப்படுத்தப்பட்ட இம்முழுமையான இறை அன்பு குறித்து திருப்பாடல்கள் முன்வைக்கும் சில கருத்துக்கள் பின்வருமாறு:

மனித வாழ்வு நிலையற்றது எனினும், மனிதருக்கான இறை அன்பு நிலையானது, அடுத்துவரும் சந்ததியினருக்கும் உரியது. இறைவனின் இவ்வன்பை நாம் அனுபவிப்பதற்கு, நாம் இறைவனுக்குப் பயந்து வாழ வேண்டும்.

அவர் நல்லவர்
அவரின் பேரன்பு என்றுமுள்ளது.

ö\¯Ø£õk

1. நல்லாயரின் குணாதிசயங்களை அட்டவணைப்படுத்துக.
2. அதில் ஒவ்வொரு குணமும் அன்பான இயேசுவின் குணத்தோடு தொடர்புபடுத்துக.

5 ^hzxÁ AøÇ¨¦

லூக்கா 5 :1-11, 27: 32, 6: 12 - 16

இயேசுவின் போதனைகளையும் வாழ்வின் முன்மாதிரி களையும் பின்பற்றிய பலர் அவருடைய சீடர்களாக நியமிக்கப்பட்டனர். இயேசு தமது பணியைச் சிறப்புடன் செய்வதற்காக பன்னிருவரைத் தெரிவுசெய்தார். அவர் களைத் தெரிவுசெய்த முறைகள் மற்றும் செயற்பாடுகள் மூலமாக இயேசுவின் பணிக்கு பங்களிப்பு வழங்க எமது வாழ்வை எவ்வாறு அமைக்கலாம் என்பதை இப்பாடத்தில் கற்போம்.

அந்தோனி மாமாவின் படகு வழக்கம்போல கடற்கரையில் நிறுத்தி இருந்தது. வழமைபோல திருவிவிலியத்தைக் கற்பதற்காக வனஜா அக்காவும் சில பிள்ளைகளும் படகினுள் அமர்ந்தனர். கடந்த நாட்களைப் போன்று அல்ல, வனஜா அக்காவின் கைகளில் திருவிவிலியமும் சில வாழ்த்து மடல்களும் இருந்தன. வனஜா அக்கா மாலை வணக்கம் கூற மாணவரும் வணக்கம் தெரிவித்தனர். சுமுது அக்கா ஒரு மடலை மாணவரின் முன் காட்சிப்படுத்தினார்.

அதில் **''இறை அழைப்பு''** என அதில் எழுதப்பட்டிருந்தது.

இறையழைப்பு என்றால் என்ன? இறை பணியில் விசேட பொறுப்பிற்காக இறைவன் தெரிவு செய்தல் இறையழைப்பு எனப்படும். இன்று நாம் விசேட அழைப்பு கிடைத்த சிலரைப் பற்றி ஆராய்வோம்.

வாசிப்போம்
லூக்கா 5:1-11



உரு 5.1 முதல் சீடர்களை அழைத்தல்

இடம் : கெனசரேத்து ஏரிக்கரை எனப்படும் கலிலேயாக் கடல்

சந்தர்ப்பம் : இயேசு சீமோனுடைய படகில் ஏறிப் போதித்த வேளை

பின்னணி : சீமோனும் சில மீனவரும் இரவு முழுவதும் பாடுபட்டு உழைத்தும் ஒரு மீனும் பிடிபடாதிருத்தல்

இயேசுவின் வேண்டுகோள் : ஆழத்திற்குத் தள்ளிக்கொண்டு போய் மீன்பிடிக்க உங்கள் வலை களைப் போடுங்கள்

பதில் : இயேசுவின் சொற்படி கீழ்ப்படிந்து வலைகளைப் போடுதல்

அனுபவம் : வலைகள் கிழியுமட்டும் மீன்கள் பிடித்தல்

சீமோன் பேதுருவின் அடுத்த படிமுறை : இயேசுவின் கால்களில் விழுந்து தனது பாவத்தை அவரிடம் அறிக்கை செய்தல்

இயேசுவின் மறுமொழி : ''இது முதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்.'' என்று கூறி, பணிக்காக சீமோனை அழைத்தார்.

''மேற்படி விசேட அழைப்பு மூலமாக எமக்குக் கிடைக்கும் முன்மாதிரி என்ன?'' என வனஜா அக்கா வினவினார்.

''எமது வாழ்வில் எவ் வேளையிலும் இறையழைப்புக் கிடைக்கலாம்''. என சதீஷ் கூறினான். இறையழைப்புக்குக் கீழ்படிதல் எமது கடமை என சுபாஷ் கூறினான்.

சில வேளைகளில் புதுமைகளைக் காணும் அனுபவம் போன்று எதிர்பார்ப்புகள் அற்ற வேளையிலும் இறையழைப்பு கிடைக்கலாம் என சாந்தி கூறினாள்.

எமது தீய செயல்களுக்காக மனம் வருந்தி இறையழைப்புக்கு மாறுத்தரம் அளித்தல் நல்லது என கீதா பதிலுரைத்தாள்.

ஆம்! உங்களது கருத்துக்கள் சிறப்பானது. ''இயேசுவின் புனிதத்தின் முன்னிலையில் எமது பெறுமதியற்ற தன்மையை அறிந்து, அனைத்தையும் விட்டு இறையழைப்புக்கு மாறுத்தரம் காட்ட வேண்டும்''. என்ற தனது கருத்தை கூறி முடித்தார் வனஜா அக்கா. நல்லது இறையழைப்பைப் பெற்ற இன்னுமொருவரை ஆராய்வோம்.

வாசிப்போம்
லூக்கா 5:27-32

லேவி எனும் மத்தேயுவை அழைத்தல்

இடம் : சுங்கச் சாவடி

தொழில் : வரி தண்டுபவர்

இயேசு கூறியது : ''என்னைப் பின்பற்றி வா''

லேவியின்
மாறுத்தரம் : அனைத்தையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றி செல்லல்

லேவியின் பிரதிச்
செயல் : அவனது வீட்டில் பெரிய விருந்து அளித்தல்

இயேசுவுக்கு எதிரான
சோதனை : வரிதண்டுபவர்களுடனும் பாவிகளுடனும் உண்கின்றார்.

இயேசுவின்
மறுமொழி : ''நோயற்றவர்க்கு அல்ல நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை.

நேர்மையாளர்களை அல்ல. பாவிகளையே மனம்மாற அழைக்க வந்தேன்'' என்றார்.

''லேவியின் அழைப்பில் நீங்கள் எதனை அறிந்து கொண்டீர்கள், என வனஜா அக்கா வினவினார்.
நாம் தவறு செய்து இறைவனை விட்டு விலகினாலும் மன்னிப்புப் பெற்று இறையழைப்பைப் பெறும் வாய்ப்பு உண்டு என சாந்தி கூறினாள்.
இயேசுவின் அழைப்பானது தமது தவறுகளுக்காக மனம் வருந்துபவர்களுக்குக் கிடைக்கின்றது என சதீஷ் கூறினான்.
இயேசு நேர்மையானவரை மாத்திரம் அல்ல எம்மைப் போன்ற பாவிகளையும் அழைக்கின்றார் என சுபாஷினி கூறினாள். இறையழைப்புக்கு உடனடிப் பதில் கொடுக்க வேண்டும் என சுபாஷ் பதிலுரைத்தான்.
இறையழைப்புப் பொதுவானது. அழைப்பின் நன்மையை நாம் மட்டும் பயன்படுத்தாது பிறரும் பெற செயற்பட வேண்டும் என வனஜா அக்கா கூறினார்.

இயேசு கலிலேயாக் கடல் எனும் கெனசரேத்து ஏரிக்கரையில் சீமோன், அந்திரேயா, யாக்கோபு, யோவான் என்பவர்களையும் சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்த லேவி எனும் மத்தேயுவையும் அழைத்தார்.

நல்லது, இந் நிகழ்விலிருந்து இறையழைப்புக்கு அழைக்கப்படுவர்களில் காணப்பட வேண்டிய பண்புகள் சிலவற்றை வரிசைப்படுத்துங்கள் என வனஜா அக்கா கூறினாள் பிள்ளைகள் ஆர்வமாக பதில் அளித்தனர். வனஜா அக்கா அட்டைகளை வழங்கினார். அவர்களால் எழுதப்பட்ட பண்புகள் சில பின்வருமாறு

மனம் வருந்தல்	கீழ்படிவு	தாழ்மை	நம்பிக்கை	நேர்மை
லூக்கா 5:8	லூக்கா 5:5	லூக்கா 5:5	லூக்கா 5:6	லூக்கா 5:8

சீடர்கள் ஏன் அழைக்கப்பட்டனர்? என வனஜா அக்கா வினவினார்? இயேசுவின் திருத்தூதர்களாக செயற்படுவதற்கு அழைக்கப்பட்டனர் என கீதா பதிலுரைத்தாள்.

ஆம்! கீதா உனது பதில் சரி. இயேசு சீடர்களுள் பன்னிருவரைச் சிறப்பான திருத் தூதர்களாக தேர்ந்தெடுத்தார் என லூக்கா 6:12-16 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் அதனை வாசிப்போம்.

வாசிப்போம்

6:12-16

பின்னர் வனஜா அக்கா இன்னுமொரு மடலை காட்சிப்படுத்தினார். சீடரின் அழைப்பைக் குறித்த எமது கருத்துகளை அதில் எழுதுமாறு பணித்தார்.

£ßÛ¸ v¸zyu›ß AøÇ¨¦ {PÌÂß]Ó¨¦¨ £s¦PÒ

சதீஷ் : சீடர்களை தெரிவுசெய்யும் முன்னர் இயேசு மலைக்குச் சென்று கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் முழு இரவையும் செலவிட்டார்.

சாந்தி : அவருடன் இருந்தவர்களில் பன்னிருவரை தேர்ந்தெடுத்தார்.

கீதா : தெரிவு செய்த பன்னிரு சீடர்களுக்கு ''திருத்தூதர்'' எனப் பெயரிட்டார்

சுபாஷினி : பல்வேறு சூழலில், பல்வேறு சமூகப் பின்னணியில் வாழ்ந்த பன்னிரு திருத்தூதருக்கு திருப்பணிக்கான அழைப்பு கிடைத்தது.

நீங்கள் எழுதியவைகள் யாவும் சரியானவைகளும் முக்கியமானவைகளும் ஆகும்.

இந் நிகழ்வின் மூலமாக இயேசு எமக்கு வெளிப்படுத்தும் உண்மைகள்

முக்கிய தீர்வுகளில் ⟶ செபத்துடன் உறுதியாக இருத்தல் அத்தியாவசியம்

பல்வேறு நபர்களுக்காக ⟶ பணிக்கான பல்வேறு சந்தர்ப்பங்களில் அழைப்பு கிடைக்கும்

இறையழைப்பு கிடைப்பது ⟶ இறை விருப்பத்துக்கு ஏற்ப கிடைக்கின்றது என்பது

இறைபணியில் ⟶ மக்கள் எண்ணிக்கை அல்ல, இறை தொனியைக் கேட்டு அதை நிறைவேற்றுவதே முக்கியமாகும்.

இறையழைப்பு கிடைக்கும்போது ⟶ கீழ்படிவுடன் நேரான மாறுத்தரம் காட்டல் எதிர்பார்க்கப்படுகின்றது.

இறையழைப்பை ஏற்றுக்கொள்பவர்கள் ⟶ உலகினுள் செல்வதற்கான தூயாவியின் துணையுடன் ஆயத்தமாக இருத்தல்

சீடத்துவத்துக்காக இறையழைப்பைப் பெற ⟶ தராதரம், பின்னணி, சமூகநிலை போன்றன பொருத்தமற்றவை.

இயேசுவின் சீடர்களாக அழைப்பு பெற்றவர்களுள் சீமோன் பேதுருவும், அவருடைய சகோதரர் அந்திரேயாவும், செபதேயுவின் மகன் யாக்கோபும் அவருடைய சகோதரன்

யோவானும் - மீனவர்கள்.

பிலிப்பு - பார்த்தலமேயுவை இயேசுவுக்கு அறிமுகம் செய்தவர் நத்தனியேல் எனவும் அழைக்கப்பட்டவர். 5000 பேருக்கு உணவளித்த நிகழ்வில் இருந்தவர்.

பார்த்தலமேயு - பிலிப்பு பார்த்தலமேயுவை இயேசுவுக்கு அறிமுகம் செய்தார். நத்தனியேல் எனவும் அழைக்கப்பட்டவர்.

லேவி எனும் மத்தேயு - வரிதண்டுபவர்

தோமா - உயிர்த்த இயேசுவின் ஆணிகள் பாய்ந்த கரங்களைக் கண்டு விசுவாசித்தவர்

அல்பேயுவின் மகன் யாக்கோபு - லேவியின் சகோதரன் என கூறப்படுகின்றது.

தீவிரவாதி எனப்பட்ட சீமோன் - செலோத்தியர்

யாக்கோபின் மகன் யூதா - சில வேளைகளில் ததேயு என அறிமுகம் செய்யப்பட்டவர்.

யூதாசு இஸ்காரியோத்து - இயேசுவைக் காட்டிக்கொடுத்த சீடன் இவர் கலிலேயாவில் வாழ்ந்தவர் அல்ல.

இவர்கள் இயேசுவின் அழைப்பைப் பெற்று பணி செய்தனர். ''நாமும் இறையழைப்புக்கு உரிய மறுமொழி காட்டி இறைபணிக்கு எம்மை அர்ப்பணிப்போம்'' என வனஜா அக்கா கூறி இறை வேண்டலுடன் திருமறைப் பாடத்தை முடித்தார். அன்று பிள்ளைகள் இறையழைப்புக்கு உரிய மாறுத்தரம் காட்டுவதற்கு ஆரம்ப சீடர்களின் அழைப்பைக் குறித்து புதிய அனுபவம் பெற்று வீட்டை நோக்கிச் சென்றனர்.

ö\¯Ø£õk

1. இறையழைப்பு என்பதன் மூலம் நீர் கருதுவது எது என்பதை எழுதுக.
2. இயேசு சீடர்களை அழைத்த சம்பவத்தில் காணப்படும் பண்புகளை வரிசைப்படுத்துங்கள்.
3. உமக்கு இறையழைப்புக் கிடைப்பின் நீர் செயற்படும் முறைகளைச் சுருக்கமாக எழுதவும்.

6 £ o ° ß A i ¨ £ ø h

லூக்கா 4:16 - 21

இயேசுவின் போதனைகளில் 'நாசரேத்து போதனை' மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இயேசு திருமுழுக்குப் பெற்ற பின்னர் அலகையின் சோதனைகளில் வெற்றியடைந்து தனது பணியை ஆரம்பித்தார். நாசரேத்தில் ஆற்றிய பிரகடனத்தில் இயேசு இவ்வுலகில் தனது பணியின் நோக்கத்தை வெளிப்படுத்தினார். மேற்படி நோக்கத்தை ஆராய்ந்து எமது கிறிஸ்தவ வாழ்வை அர்த்தமுள்ளதாக்க அவசியமான வழிகாட்டலைப் பெறுவோம்.

ஞாயிற்றுக் கிழமை ஓய்வு நாள் பாடசாலையின் சமூக பணியின் வருடாந்த மாநாட்டின் மாலை நிகழ்வு இடம்பெற அனைத்தும் ஆயத்த நிலையில் இருந்தன. ஞாயிறு ஓய்வுநாள் பாடசாலையின் மத்திய, சிரேஷ்ட, இளைஞர் பிரிவு அனைத்து மாணவரும் ஆசனத்தில் அமர்ந்தனர். ஓய்வு நாள் பாடசாலை ஆசிரியர், குழு அங்கத்தவர், இரு திருப்பணியாளர் நிகழ்வுகளை ஆரம்பிக்க ஆயத்தமாக இருந்தனர். திருப்பணியாளர் அவர்களின் இறை வேண்டலுடன் நிகழ்வு ஆரம்பமாகியது.

நிகழ்வின்
இணைப்பதிகாரி : உங்கள் அனைவருக்கும் எனது அன்பான மாலை வணக்கம். ஆண்டு நிறைவுறும் இந்த மாலை வேளையில் நாம் ஏன் கூடி வந்துள்ளோம் என நீங்கள் அறிவீர்கள். இறையாசியால் நாம் வெற்றிகரமாக சமூகப் பணி அபிவிருத்தியை இவ் வருடத்தில் நிறைவேற்றினோம். அதன் முன்னேற்றத்தைக் கலந்துரையாட இந்த சந்தர்ப்பத்தை வழங்கிய இறைவனுக்கு முதலில் நன்றி செலுத்துவோம். எமது தலைப்பை அறிமுகம் செய்யுமாறு ஓய்வுநாள் பாடசாலை முகாமையாளரை அன்புடன் அழைக்கின்றேன்.

திருப்பணியாளர் : நன்றி, இவ் வருட ஆரம்பத்தில் இறை வழிகாட்டலுடன் லூக்கா 4: 16 - 21 இல் குறிப்பிடப்பட்டுள்ள இயேசுவின் நாசரேத்து போதனையைக் கற்றோம்.

நாம் திரும்பவும் திருமறைப் பகுதியை வாசிப்போம். அன்று நாம் கற்றவற்றுள்

நினைவில் இருப்பவற்றைக் கூறமுடியுமா?
(ஒரு மாணவியின் கை உயர்கின்றது)

திருப்பணியாளர் : நல்லது பிரியா முன்னால் வந்து கூறுங்கள்

பிரியா : எனக்கு வழங்கிய சந்தர்ப்பத்துக்கு நன்றி. நான் அறிந்திராத பல விடயங்களை அன்று நான் கற்றுக் கொண்டேன். யூதர் தமது சமய வழிபாடுகளை ஓய்வு நாளில் தொழுகைக் கூடங்களில் நடாத்தினர். வேதப்பகுதியை விளக்குவதற்காக தொழுகைக் கூடத்தில் வருகை தந்திருக்கும் சிறப்பு வாய்ந்த ஒருவருக்குச் சந்தர்ப்பம் வழங்குவது வழக்கம் என அறிந்தேன். அதே போன்று ஒருநாள் நாசரேத்து தொழுகைக் கூடத்தில் இயேசுவுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இயேசு எசாயா 61 ஆம் அதிகாரத்தின் முதலிரு வசனங்களை வாசித்து அது தன்னைப்பற்றி வெளிப்படுத்தப்பட்ட இறைவாக்கு என கூறினார். இயேசுவால் நிறைவேற்றப்பட வேண்டிய பணியின் நோக்கத்தை அன்று நான் கற்றுக் கொண்டேன்.

திருப்பணியாளர் : அன்று நீர் கற்றவைகளை எம்முடன் பகிர்ந்து கொண்டமைக்கு மிக்க நன்றி. இயேசு வளர்ந்த ஊரான நாசரேத்தில் ஆற்றிய போதனையில் அவரது பணியின் விசேட நோக்கத்தை வெளிப்படுத்தினார்.

ஏழைகளுக்கு நற்செய்தி அறிவித்தல்	சிறைப்பட்டோர் விடுதலை அடைதல்	பார்வையற்றோர் பார்வை அடைதல்	ஒடுக்கப்பட்டோர் விடுதலை அடைதல்

மேற்படி நோக்கங்களால் வெளிப்படுவது என்ன? இயேசு அனைத்து மக்களுக்கும் விடுதலை வழங்குவதற்கு இவ் உலகில் உதித்தார். அவரது பணியின் மூலம் அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டது. அனைவருக்கும் மீட்பின் வழி திறக்கப்பட்டது.

மேற்படி விசேட செய்தியைப் பிரதானமாகக் கொண்டு நாம் எமது சமூகப் பணி விருத்தியின் பின்னணி மற்றும் ஆரம்பம் குறித்து சில கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள இப்போது ஓய்வு நாள் பாடசாலைச் செயலாளரை அழைக்கின்றேன்.

செயலாளர் : நன்றி. நீங்கள் கூறியது போன்று எமது சமூகப் பணி இயக்கத்தின் தொனிப்பொருளாக இயேசுவின் நாசரேத்து போதனையின் நோக்கத்தைத் தெரிவு செய்துள்ளோம்.

'நாசரேத்துப் பணி - அனைவருக்கும் விடுதலை' சிரேஷ்ட, இளைஞர் பிரிவினர் நான்கு குழுவினராக 'தொடம்வல' கிராம மக்களுக்கு மே மாதம் 16, 17 ஆம் தினங்களில் உதவிப் பணி ஆற்றினர். நாம் அவர்களது நிகழ்ச்சித் திட்டம் குறித்து குழுவினரிடம் கேட்போம். அந்தக் கிராமம் பற்றிய சில தகவல்களையும் முன்வைப்பதற்காக குழுவின் ஆசிரியரை அழைக்கின்றேன்.

ஆசிரியர் : இவ்வருடத்தில் எமது சமூகப் பணி இயக்கத்தின் செயற்திட்டம் இறையருளுடனும், இறையாசியுடனும் வெற்றிகரமாக இடம் பெற்றது. இயேசுவின் பணியின் நோக்கத்தை முன்மாதிரியாகக் கொண்டு நாம் எமது திட்டத்தை நான்கு குழுவினராக 'தொடம்வல' கிராமத்தில் நடாத்தினோம். இக் கிராமம் மிகவும் குறைவான வச திகளைக் கொண்டது. அங்கு பலர் வசதியற்றவர்களாக வாழ்கின்றனர். எமது முதலாவது குழுவினர் வயோதிப நோயாளர் மத்தியில் பணி யாற்றினர். இரண்டாவது குழுவினர் பல்வேறு தீய பழக்கங்களுக்கு அடிமைப்பட்டு சீர்படுத்தப்படும் இளைஞர்கள் மத்தியில் பணி செய்தனர். மூன்றாவது குழுவினர் பார்வை குறைபாடு உள்ளவர்கள் மத்தியில் பணியாற்றினர். நான்காவது குழுவினர் தொடம்வல கிராமத்து சிறுவர் இல்லத்தில் சேவை செய்தனர். குழுவின் தலைவர்கள் தமது செயற்திட்டங்கள் தொடர்பான கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வர்.

நிகழ்ச்சித் திட்ட
இணைப்பாளர் : ஆம் இப்போது தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு முதல் குழுவின் தலைவி தயாளினியை அழைக்கின்றேன்.

தயாளினி : எமது ஞாயிறு ஓய்வு நாள் பாடசாலையால் எமக்குக் கிடைத்த இச் சந்தர்ப்பம் எமது வாழ்வை வேறு வழிக்கு மாற்றியது எனக் கூறுவதில் எதுவித தவறுமில்லை. தொடம்வல கிராமத்தில் நோய் வாய்ப்பட்டிருந்த தாத்தாமார், பாட்டிமார் இல்லத்திற்கு எமது குழு சென்றது. நாம் அங்கு துன்பகரமான நிலையைக் கண்டோம். சிலர் வேதனையால் கதறினர், சிலர் தூய்மையற்ற நிலையில் இருந்தனர். எமது குழுவினர் ஒன்றிணைந்து தாத்தாமார், பாட்டிமாரைக் குளிப்பாட்டி, உணவு ஊட்டி அவர்களுடன் அந்த நாளைச் செலவிட்டனர். திருவிவிலியத்தில் இயேசுவின் கதைகளைக் கூற மறக்கவில்லை. தொழுநோயாளர் குணமடைதல், பார்வையற்றவர் பார்வை பெறல், தீய ஆவியைத் துரத்துதல் போன்ற இயேவின் அற்புதக் கதைகளை அவர்களுக்குக் கூறினோம். அவர்கள் அதிகளவு மகிழ்வடைந்தனர். இயேசு இவ் உலகப் பணியில் துன்பப்படுபவர்களுக்கு ஆறுதல் அளித்தார். நாமும் அவரது பணியில் சிறிதாக அல்லது பங்குதாரராகுதல் மகிழ்ச்சிக்கு உரித்தானது. ஆண்டவருக்கே மகிமை உண்டாவதாக!.

நிகழ்ச்சித் திட்ட
இணைப்பாளர் : நன்றி தயாளினி, அடுத்து நாம் இரண்டாவது குழுத் தலைவர் நேசனை அழைக்கின்றோம்.

நேசன் : தொடம்வல போன்ற வசதி குறைவான கிராமத்தில் பணிசெய்யும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கும் என நான் நினைக்கவில்லை. எனது கனவை நனவாக்கிய எனது ஞாயிறு ஓய்வுநாள் பாடசாலைக்கு எனது நன்றிகள் உரித்தாகுக. எமது குழுவானது இளைஞர் புனரமைப்பு மத்திய நிலையத்தில் பணி செய்தது, அங்கிருந்த அண்ணன்மார் அக்காமார் வாழ்வில் பல்வேறு தீய செயல்களுக்கு அடிமைப்பட்டு அதிலிருந்து விடுதலை பெற முடியாது தற்கொலைசெய்ய முயற்சி செய்தவர்கள் ஆவர். இளைஞர் நிலைய அதிகாரிகள் அவர்களை எப்படியோ தேடி இவர்களை நல்வழிப்படுத்தும் பணியில் செயற்படுகின்றனர். எமது குழுவினர் இவர்களுடன் சுமுகமாகக் கதைத்தனர். அவர்களது வாழ்வின் பிரச்சினைகளை எம்முடன் கலந்துரையாடினர். வாலிப வயதின் பெறுமதியை அவர்களுக்கு எடுத்துரைக்க வாய்ப்புக் கிடைத்தது. சிக்கலான நிலையில் செயற் படுவது போன்று இயேசுவால் கிடைக்கும் விடுதலையை ஏற்றுக் கொள்ள முடிந்தது. பலர் நற்செய்தியை ஆவலுடன் கேட்டனர். இயேசுவால் விடுதலை பெற்ற சக்கேயு, மத்தேயு, சமாரியப் பெண், பாவியான பெண் போன்ற கதைகளைக் கூறினோம். பல்வேறு தீய பழக்கத்தில், அடிமைத்தனத்தில், துன்புறுதலில் இருந்து மீட்க இயேசுவால் முடியும் என அவர்களுக்கு எடுத்துக் கூறினோம். அந் நாள் அவர்களுக்கும் எமக்கும் வாழ்வின் முக்கியமான நாள் ஆகும்.

நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் : நன்றி நேசன் இப்போது மூன்றாவது குழுத் தலைவர் ரவி தனது கருத்துக்களைக் கூறுமாறு அழைக்கின்றோம்.

ரவி : எமது குழுவினருக்குக் கிடைத்த புதுமையான அனுபவம் அதாவது இரு கண்களும் பார்வையற்ற சகோதர சகோதரிகளுடன் காலத்தைச் செலவிட எம்மால் முடிந்தது. எமது குழுவினர் இயேசு பார்வையற்றோருக்கு பார்வை அளித்த முறைகளை நினைவுப்படுத்தினர். கண்பார்வையற்றவர்கள் ஒரே குடும்பமாக வாழ்ந்தனர். கண் தெரியாமல் இருந்தாலும் அவர்கள் உள்ளம் இரக்கம் நிறைந்தது. அவர்களுக்குப் பல திறமைகள் காணப்பட்டன. நாம் பாடல்களை அவர்களுடன் சேர்ந்து பாடினோம். அவர்கள் இசை வழங்கினர். அவர்களைத் தைரியப்படுத்தினோம். இயேசுவைப் பற்றி கூறினோம். வழியோரத்தில் இருந்த பாத்திமேயுவை இயேசு குணப்படுத்தினார் என்ற கதையை அவர்களுக்குக் கூறினோம். இரு கண்களும் தெரியாவிட்டாலும் விடுதலையை அளிக்க இயேசுவால் முடிந்தது எனக் கூறினோம். அவர்கள் ஆர்வத்துடனும் கௌரவத்துடனும், ஆசையுடனும் இயேசுவைக் குறித்த நற் செய்தியைக் கேட்டனர். கண் தெரிந்தும் இயேசுவை விட்டு விலகி தவறு செய்யும் பலரைவிட கண் தெரியாத முழு உள்ளத்துடன் அவரைத்

தேடுவதற்கு முயலும் இவர்கள் ஆசி பெற்றவர் என்பதை எமது குழுவினர் உணர்ந்தனர். நல்லது இவ்வாறான செயற்திட்டத்திற்கு எமக்கு வழிகாட்டிய ஞாயிறு பாடசாலை நிருவாக குழுவினருக்கு எமது குழுவினர் சார்பில் நன்றிகளை நவில்கின்றேன்.

நிகழ்ச்சித் திட்ட
இணைப்பாளர் : நல்லது ரவி. உமது கருத்துக்களுக்கு நன்றி. நான்காவது குழுத் தலைவி நிர்மலாவை அழைக்கின்றோம்.

நிர்மலா : எம்மைத் தொடம்வல சிறுவர் இல்லத்துக்கு அழைத்துச் சென்றனர். பெற்றோரை இழந்த சிறு தம்பி, தங்கைமார் 25 பேர் அங்கிருந்தனர். எங்களைக் கண்டதும் அவர்கள் அதிகம் மகிழ்வடைந்தனர். நாம் அவர்களுக்கு உணவூட்டினோம். அவர்களுடன் சேர்ந்து விளையாடினோம். எம்மில் சிலர் பாடம் கற்பித்தனர். எழுத்துக்களை எழுத கற்றுக் கொடுத்தனர். இயேசுவைக் குறித்த அழகான கதைகளைக் கூறி பாடல்களைப் பாடினோம். இயேசு இவ் உலகில் பணி புரியும் வேளையில் சிறுவர்களை ஏற்று அன்புடன் அரவணைத்து நேசித்தார். இறையரசு சிறுவர்களுடையது எனக் கூறினார் என அறிவித்தோம். பாடசாலை செல்லும் தம்பி, தங்கைமாருக்கு வேத வசனங்களை மனனம் செய்யக் கற்றுக்கொடுத்தோம். அவற்றை அழகிய புத்தக அட்டை மடலில் எழுதிக் கொடுத்தோம். அவர்கள் மகிழ்வடைந்தனர். நாம் அவர்களைவிட்டுப் பிரியும் வேளையில் பலர் அழத் தொடங்கினர். எம்மை அவர்களுடன் தங்குமாறு வேண்டினர். நாம் துக்கத்துடன் அவர்களை விட்டு வந்தோம். நாம் கொண்டு சென்ற பரிசுகளை அவர்களுக்குக் கொடுத்தோம். நான் இவ் வேளையில் எமக்கு சந்தர்ப்பத்தை வழங்கிய ஓய்வுநாள் பாடசாலை நிர்வாகிகள் அனைவருக்கும் எனது குழுவின் சார்பில் நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

நிகழ்ச்சித் திட்ட
இணைப்பாளர் : ஆம்! நான்கு குழுவினரதும் கருத்துக்களைக் கேட்டோம். அவை வெற்றிகரமானதும் இறையாசியுடன் நிறைந்த நிகழ்வு என்பதை அறிந்து கொண்டோம். தற்போது நான் ஞாயிறு பாடசாலை சமூகப் பணி முன்னேற்ற வருடாந்தக் கூட்டத்தின் மாலை நிகழ்வுகளை நிறைவு செய்யுமாறு உதவித் திருப்பணியாளர் அவர்களை அழைக்கின்றேன்.

உதவித்
திருப்பணியாளார் : இயேசுவின் பணியின் நோக்கத்தை செய்வதற்கு எம்மைப் பாவித்தமைக்கு இந்த செயற்திட்டம் சான்றாகும். மேற்படி

கருத்துக்களைக் கூறிய குழுக்களின் செயல்களுக்கு மேலதிகமாக எமது ஆசிரியர்கள், கிராமத்தவரின் சில வீடுகளை புதுப்பித் ததுடன் பாடசாலைக் கட்டிடம் மற்றும் ஆலய மண்டபத்தை நவீனப்படுத்தவும் மிகக் கடினமாக உழைத்தனர். இச் செயற்திட் டத்தின் இறுதியில் வழிபாடு ஒன்றினை நடாத்துமாறு வேண்டினர். நாம் அதனை மகிழ்வுடன் நடாத்தி வீடு நோக்கி வந்தோம். இவ்வாறான ஆசிகளை எமக்கு அளித்த ஆண்ட வருக்கு நன்றி கூறி இப் புவியில் துன்பத்தில் வாழும் மக்கள் மத்தியில் பணிகள் இடம்பெறவும், புது வாழ்வு மலரவும் இறையருள் வேண்டி மாலை நிகழ்வை முடிக்கின்றோம்.

ö\¯Ø£õk

1. இயேசுவின் பணியின் நோக்கங்களை ஒழுங்கு முறையாக எழுதவும்.

2. அவற்றின் ஒரு நோக்கத்தை நிறைவேற்ற உமது பாடசாலை கிறிஸ்தவநெறி கற்கும் மாணவர் ஒன்றிணைந்து செய்யக் கூடிய நிகழ்ச்சித் திட்டத்தை எழுதுக.

7 அர்த்தமுள்ள நற்செய்திப் பணி செய்தல்

மத்தேயு 10 : 5 -15

இயேசு தமது பணியைப் பரப்புவதற்காகப் பன்னிரு சீடர்களைத் தெரிவு செய்தார். அவர்களிடம் பிரதானமாக நற்செய்திப் பணியை எதிர் பார்த்தார். அவர்களை அதற்காக அனுப்பும் வேளையில் இயேசு கூறியவற்றையும் இயே சுவைப் பின்பற்றி வாழும் எமக்கு கிடைக்கும் முன் மாதிரியையும் இப்பாடத்தில் கற்போம்.

இயேசுவின் புனித நற்செய்தியை மக்களுக்குக் கொண்டு செல்லுதல் நற்செய்திப் பணி எனக் கருதப்படுகின்றது. இயேசுவின் சீடர்களுக்கு நற்செய்திப் பணிக்கான இயேசுவால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இயேசு வின் நற்செய்தியைப் போதித்தல், நோயாளரைக் குணப்படுத்தல், தீய ஆவிகளைத் துரத்துதல், மரித்தோரை எழுப்புதல் போன்ற செயல்களில் சீடர்கள் வல்லமையும் அனுபவமும் பெற்றனர். பன்னிரு சீடர்கள் வலுவூட்டப்பட்டு நற்செய்திப் பணிக்காக இயேசுவால் அனுப்பி வைக்கப்பட்டனர்.

நற்செய்திப் பணிக்கு அனுப்புதல் (மத்தேயு 10:5 - 6)

இந்தப் பணியானது முதலாவது பிற இனத்தோருக்கும் சமாரியருக்கும் அன்றி வழி தவறிப் போன இஸ்ரயேல் மக்களுக்கு என இயேசு கூறினார். (மத்தேயு 10: 6) இயேசுவும் பன்னிரு சீடர்களும் முதலாவதாக இஸ்ரேயலருக்கு நற்செய்தியை அறிவித்து, அவர்கள் இயேசுவை ஏற்று, மீட்பை அடைந்த பின்னர் உலகில் அனைத்து இனங்களுக்கும் அதன் ஆசியைப் பரப்புதல் இறை விருப்பு ஆகும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

நற்செய்திப் பணியின் பிரதான செய்தி (மத்தேயு 10:7 - 8)

''விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது'' என இயேசு கூறி மக்களை அழைக்கும் மகத்தான பொறுப்பை சீடர்களிடம் ஒப்படைத்தார். மனம்திரும்பி விண்ணரசின் பெறுமதியை உணர்த்தும் வண்ணம் மக்களை அழைக்கும் பணி சீடர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இயேசு அந்தப் பணியில் சீடர்களை ஈடுபடுத்தினார்.

நற்செய்திப் பணியின் சிறப்பான பொறுப்புக்கள் (மத்தேயு 10:8)

தீய ஆவிகளை விரட்டவும், நோய் நொடிகளைக் குணமாக்கவும் இறந்தோர் உயிர் பெறவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார். (மத்தேயு 10.1) இயேசு இறையருள், இரக்கம், வல்லமை என்பனவற்றை வழங்கினார். நற்செய்திப் பணி மூலமாகப் பெற்ற ஆசியை பிறர் நன்மைக்காகப் பகிரவேண்டும் என இயேசு சீடர்களிடம் எதிர்பார்த்தார். மனிதருக்கு நோயிலிருந்து ஆறுதல், விடுதலை வழங்கல், வாழ்வளித்தல் போன்ற இயேசுவின் பணிகளைப்போன்று சீடர்களின் நற்செய்திப் பணிகளிலும் இவை பிரதான இடம் வகித்தன.

நற்செய்திப் பணிக்கான அறிவுறுத்தல் (மத்தேயு 10:9-11)

நற்செய்திப் பணிக்காக சீடர்களை அனுப்பும் வேளையில், பொன், வெள்ளி, செப்புக்காசு எதையும் கொண்டு செல்ல வேண்டாம். காசுப்பை, இரண்டு அங்கிகள், மிதியடிகள், கைத்தடி எடுத்துச் செல்ல வேண்டாம் என சீடர்களுக்கு அறிவுறுத்தினார். உங்களை ஏற்கத் தகுதி உடையவர்களின் தேவையை நிறைவேற்றுங்கள் என்றார். உலக காரியங்களில் நின்று விடாது முழுமையாக இறை வழிகாட்டலை நாடுமாறு பணித்தார். எளிமையான வாழ்வின் முன்மாதிரியுடன் நற்செய்தி அறிவித்தல் பணியின் முக்கியத்துவத்தை இயேசு வெளிப்படுத்தினார்.

நற்செய்திப் பணியின் சிக்கல்கள் (மத்தேயு 10.12-15)

விண்ணரசின் செய்தியை ஏற்காது உங்களை ஏற்க தகுதியற்றவர்களுக்கு உருவாகும் நிலையை இயேசு அறிவித்தார். அவர்களுக்குச் சமாதான வாழ்த்து கிடைக்காது, கால் தூசியை உதறிவிடுதல் என்பது வரவிருக்கும் இறை தீர்ப்பாகும். இறை மகனை மறுப்பவர்களுக்கு கிடைக்கும் தண்டனை பாரதூரமானது எனவும் தீர்ப்பு நாளில் சோதோம், கொமோரா நகர்களின் உதாரணம் மூலமாக உறுதிப்படுத்தினார்.

இவ்வாறு பன்னிரு சீடர்களும் இயேசுவின் நற்செய்திப் பணியைப் பரப்பியது போன்று நாமும் எம்மால் முடியுமான வரையில் வாழும் சமூகத்திலும் வாழும் உலகிலும் நற்செய்திப் பணியில் ஈடுபடுவோம்.

செயற்பாடு

1. நற்செய்திப் பணியாளராக நீர் பணி செய்யக் கூடிய சந்தர்ப்பங்கள் 5 குறிப்பிடுக.
2. நற்செய்திப் பணியில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல் மாலை தயாரித்து ஒழுங்குபடுத்துங்கள்.
3. அண்மைக் காலத்து நற்செய்திப் பணியாளரின் வாழ்க்கைக் கதையை உமது மொழி நடையில் எழுதுக.

8 பெண் சீடர்கள்

லூக்கா 8:1-3, 10:38-42

இயேசு வாழ்ந்த யூத சமூகத்தில் பெண்கள் பல்வேறு சமூக தடைகளால் ஒடுக்கப்பட்டு வாழ்ந்தனர். ஆனால் இயேசு யூத தலைவர்களின் எதிர்ப்புக்களின் மத்தியில் பெண்களுக்கு இரக்கம் காட்டி ஏற்றுக் கொண்டார். அதுமட்டுமல்ல "நற்செய்திப் பணி" செய்யவும் வழிகாட்டினார். அவைகளை முன்மாதிரிகளுடன் இறையரசின் வளர்ச்சிக்காக இன்றைய பெண்களின் அழைப்பை ஆராய்வோம்.

முழு மனித குலத்துக்கும் மீட்பு உரித்தாகும் வண்ணம் இயேசுவின் அன்பின் செயற்பாட்டில் ஆண், பெண் வேறுபாடு இன்றி அனைவரும் சமமாக வாழும் நிலை தோன்றியது. அன்று சமூகத்தில் ஆண்களைப் போன்று பெண்களும் நற்செய்திப் பணி செய்திட இயேசு வழி திறந்தார். இன்றும் பல பெண்கள் இறைபணி செய்வது குறிப்பிடத்தக்கது.

துணிவுடன் பணிசெய்த அண்மைக்காலத்து இரு பெண் நற்செய்திப் பணியாளர்களைக் குறித்து ஆராய்வோம்.

எலிசா எக்னிவ் என்பவர் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பிறந்த பெண்மணி ஆவர். அவர் கல்வியைச் சிறப்பாகக் கற்றுப் பாடசாலை ஆசிரியராகவும் வேதாகம பாடசாலை ஆசிரியராகவும் பணி செய்தார். அவரது பெற்றோர் இறந்த பின்னர் அமெரிக்க மிஷனரி இயக்கத்தில் இணைந்து பணி செய்தார். அவர் இலங்கைக்கு வருகை தந்து யாழ்நகர் உடுவில் விடுதிப் பாடசாலையில் 40 வருடங்கள் சிறப்பாகப் பணி ஆற்றினார். ''ஜெபத்தின் ஆசிரியர்'' என்ற பட்டப் பெயர் பெற்ற அவர் உடுவில் பிரதேசத்தில் இளம் பெண்கள் மத்தியில் இறைபணி செய்தார். அவர்களது ஆன்மீக நலனுக்காக பல நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தினார். திருமறை ஆய்வு, ஜெபம் என்பவைகளை நாள்தோறும் நடாத்தி வந்தார். மூன்று சந்ததி மாணவர்களுள் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இறைவனை ஏற்றுக் கொண்டதற்கான அறிக்கைகள் காணப்படுகின்றன. அதுமட்டுமல்ல, மறைக்கல்வியில் பட்டம், மனையியல் பாடத்தில் பட்டம் பெறுவதற்காக மாணவரைக் கல்விப் பாதையில் இட்டுச் செல்ல அதிக சிரமம் காட்டி உழைத்தார். அவரது முயற்சி வெற்றிகரமாக மலர்ந்தது. உடுவில் பிரதேசத்தில் மானிப்பாய் நகரில் பாரிய பணி ஆற்றினார். பலர் இயேசுவை அறியும் ஆசியைப் பெற்றனர். இவ்வாறான நீண்டகால நற்செய்தி மற்றும் சமூகப் பணியின் பின்னர் அவரது வேண்டுகோளுக்கு ஏற்ப 1883 இல் அவர் இறந்தவுடன் அவரது பூதவுடல் உடுவில் பிரதேசத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

வேதாகம தாய்மாராக பணியாற்றிய இலங்கை பெண் நற்செய்திப் பணியாளர் ஜோயிஸ் த சில்வா

1924 நவம்பர் மாதம் முதலாம் நாள் மீரிகம நகரின் வடக்கே கல்எலிய கிராமத்தில் செல்வந்தக் குடும்பத்தவருக்கு ஜோயிஸ் த சில்வா என்பவர் மகளாகப் பிறந்தார். அவள் சிறுவயது தொடங்கி இயேசுவை நேசித்து வாழ்ந்தவர் ஆவர். கல்எலிய மிசன் இல்லத்தில் பணியாற்றிய ஆங்கில மிஷனரி ஒருவரின் வாழ்வின் முன்மாதிரியால் சிறு வயதிலேயே இயேசுவைத் தனது மீட்பராகவும் ஆண்டவராகவும் வாழ்வில் ஏற்றுக்கொண்டார்.

தனது குடும்பத்தவரின் எதிர்ப்பைப் பாராது கடவுளின் திருப்பணிக்காக முழுமையாக தன்னை ஒப்புவித்தார். சகோதரி ஏடா பர்னாந்து என்பவரின் வாழ்வின் வழிகாட்டல் அவருக்குக் கிடைத்தது ஒரு சிறப்பம்சம் ஆகும். பப்திஸ்த திரு அவையைச் சேர்ந்த சகோதரி ஜோயிஸ் த சில்வா மெதடித்த திரு அவையைச் சேர்ந்த ஏடா பர்னாந்துடன் வயது, அவை பேதம் பாராது இணைந்து ஆற்றிய நற்செய்திப் பணி போற்றத்தக்கது. அவர்கள் சிறுவர் மத்தியில் விசேட பணி செய்தனர். நீதி மொழிகள் 22:6 இல் குறிப்பிட்டவாறு ''நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கிடு. முதுமையிலும் அவர் அந்த பழக்கத்தினை விட்டுவிட மாட்டார்.'' என்ற சத்தியத்தின் அடிப்படையில் பணி செய்தார். 1947 இல் ஆரம்பிக்கப்பட்ட சத்தியவசனம் நிறுவனத்தில் இணைந்து தற்காலிகமாக பணிசெய்திட இருவருக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. தேசியமயப்படுத்திய விடுமுறை கால வேதாகம பாடசாலை இயக்கத்தில் முன்னின்று இரு சகோதரிகளும் செயற்பட்டனர். இலங்கையில் பல கிராமங்களுக்குத் திரு அவைகளின் அழைப்பில் சென்று இறைவார்த்தையைப் பரப்பிடச் செயற்பட்ட இருவருக்கும் ''வேதாகம அம்மாமார்'' என்ற பட்டப் பெயர் சூட்டப்பட்டது.

பாடல்கள் பல இயற்றி இசையமைத்தனர். எமது நாட்டில் எல்லா கிறிஸ்தவ சபைகளிலும் பாடப்படும் 'இயேசுவின் அன்பு...' என்னும் பாடல் அவற்றுள் சிறப்பானது. பாடலுடன், போதனையுடன் வேதாகமக் கதைகளைக் கூறிய இரு சகோதரிகளும் இறையரசைக் கட்டியெழுப்புவதில் அளப்பரிய சேவை செய்தனர். இவர்கள் எதுவித கொடைகளும், சம்பளமும் நிறுவனங்களிடம் இருந்து பெறாது ஆற்றியபணி சிறப்பானது. இறைவனுக்கு அர்ப்பணிப்புடனும் விசுவாசத்துடனும் ஆற்றிய இரு பெண் நற்செய்தி பணியாளரும் கிராமங்கள் தோறும் இறைவார்த்தையைப் பரப்பி வேதாகமத் தாய்மாராக ஆற்றிய பணி இன்றைய கிறிஸ்தவர்களுக்கும் மகத்தான முன்னுதாரணம் ஆகும்.

மேற்படி இரு பெண் நற்செய்திப் பணியாளரும் வாழ்ந்த சமூகத்தில் பணியை நிறைவேற்றுவதற்கான ஆற்றலும் சந்தர்ப்பமும் கிடைத்தமை இறை செயற்பாட்டின் பிரதிபலன் ஆகும்.

இயேசு தனது பணியை மேற்கொண்ட யூத சமூகம் பல்வேறு சமூகப் பிரிவாலும் கட்டுகளாலும் அமைப்பில் துன்பம் அனுபவித்து, பெண்களின் உரிமையை மறுத்து, ஆண் ஆதிக்கம் நிறைந்த யூத சமூகத்தில் பெண்களின் உரிமையை நிரூபித்து, பெண்களும் ஆண்களைப் போன்று இறை பணி ஆற்றக் கூடியவர்கள் எனும் நிலையை இயேசு உருவாக்கினார். இதனால் சமூகத்தில் மாற்றத்தை அவர் உருவாக்கினார். அதன் பிரதிவிளைவாக பெண் சீடர்கள் இயேசுவின் பணியில் பங்களிப்பு வழங்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. எனவே இயேசுவின் பணியில் பங்களிப்பு வழங்கிய பெண் சீடர்கள் குறித்து ஆராய்வோம்.

இயேசுவின் பணிக்குப் பங்களிப்பு வழங்கிய பெண் சீடர்கள்

வாசிப்போம்.
லூக்கா 8:2-3

மேல் குறிப்பிடப்பட்ட பெண்களை விட பல்வேறு சூழல்களில் இருந்து வந்த வேறு பல பெண்கள் அவரது பணிக்குப் பங்களிப்பு வழங்கினர் என நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.



உரு 8.1 மார்த்தாவும் மரியாவும்

வாசிப்போம்
லூக்கா 10:38-42

மார்த்தா

- பணிவிடை/விருந்தோம்பலுக்கு முதலிடம் அளித்தார்.
- உலக பணிகள் புரிந்து கலவரப்பட்டு கலங்கினாள்.
- அதனால் அவசியமானவற்றை அறிய முடியாதவளாக இருந்தாள்.

மரியா

- இயேசுவின் காலடி அருகில் இருக்க விரும்பினாள்.
- அனைத்தையும் மறந்து இயேசு சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.
- நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்து கொண்டாள்.

இயேசுவால் பெண்களுக்குப் பணிசெய்யும் வாயில் திறக்கப்பட்டது. பெண் சீடத்துவத்தின் சவால்கள்:

- இயேசுவின் பணியில் ஈடுபட ஆண், பெண் பேதமில்லை.
- சமூக சூழல், மற்றும் வாழ்வுப் பின்னணி, இறை பணி பங்களிப்பில் பொருத்தமானது அல்ல.
- இறைபணி செய்யும் உரிமை அனைவருக்கும் உரித்தானது.
- எந்த சந்தர்ப்பத்திலும் இறைபணிக்கான அழைப்புக்கு கிடைக்கும்.
- இறை தொனியைக் கேட்டு அதற்குக் கீழ்படிய வேண்டும்.
- பணியில் உலகரீதியிலானவற்றை விட இறைவனுக்கு முதலிடம் அளிக்க வேண்டும்.
- கிறிஸ்தவ சீடத்துவத்தில் இயேசுவுடன் தனிப்பட்ட உறவு வைத்தல் அவசியம்.
- இறைவன் விரும்பும் பணி செய்தல் வேண்டும்.
- பணியின் காலத்தை விட பணியின் தன்மை முக்கியம் வாய்ந்தது.

- ஜெபத்துடனும் வழிபாட்டுடனும் பணி செய்தல் வேண்டும்.
- இயேசுவுடன் இணைந்து வாழ்ந்து பணியை வளர்த்தல் முக்கியம் ஆகும்.
- அனைத்துத் தடைகளையும் தாண்டி பணியை முன்னோக்கிக் கொண்டு செல்லுதல் அத்தியாவசியமாகும்.
- அர்ப்பணிப்புடனும் நம்பிக்கையுடனும் பணியை ஆரம்பிக்கும்போது இறைவன் பணியின் வளர்ச்சிக்கு உதவி செய்வார்.

வாழ்வில் பல ஆசிகளைப் பெறும் நாம் பிரதி பலனாக இறை பணியில் ஈடுபடுவதை இறைவன் எம்மிடம் எதிர் பார்க்கின்றார்.

செயற்பாடு

1. இறைபணியில் பெண்கள் நிறைவேற்றக் கூடிய சில பணி களைக் குறிப்பிடுக.
2. அண்மைக் காலத்தில் இயேசுவின் பணி செய்த சில பெண் நற்செய்தி பணியாளர்களின் பெயர்களையும் அவர்கள் ஆற்றிய முக்கிய பணிகளையும் குறிப்பிடுக.
3. தற்காலத்தில் உலகில் பெண்கள் நற்செய்திப் பணி செய்வதில் காணப்படும் தடைகள் நீங்கி பணியின் வளர்ச்சிக்காக ஜெபம் ஒன்று எழுதுக.

9 சீடர்களின் ஆயர் பணி

யோவான் :21:1-19

உயிர்த்த இயேசு சீடர்களைச் சந்தித்தார். அச்சந்திப்பினூடாகப் பேதுரு புதியதொரு பொறுப்பைப் பெற்றுக் கொண்ட முறையைக் கற்றுக்கொண்டு, கிறிஸ்தவ பொறுப்பை நிறைவேற்றுவதற்கான பணியில் ஈடுபடுவதற்காக நாமும் வழி காட்டலைப் பெறுவோம்.

வகுப்பாசிரியர் திடீரென சுகயீனம் காரணமாகப் பாடசாலைக்கு வரவில்லை என அறிவித்தார். எனவே வகுப்புத் தலைவனாகிய குமாருக்கு அன்று வேலை அதிகமாக இருந்தது. ஆசிரியர் மூலமாக அனுப்பப்பட்ட ஒப்படைக் குறிப்புக்களைப் பற்றி அறிவித்து, மாணவர்களை அதில் ஈடுபடுத்தி, வகுப்பின் ஒழுக்கத்தைப் பேணி நடத்திச் செல்லும் பாரிய பொறுப்பாக அமைந்தது. ஒருநாள் முழுவதும் இவ்வாறான பொறுப்பை நிறைவேற்றுவது இலகுவான காரியமல்ல. தன்னால் இயன்ற அளவு நன்றாகக் குமார் அதனை நிறைவேற்றினான்.

குமார் தனது வகுப்பை மிகவும் பொறுப்போடு நடத்திக் கொண்டிருந்த வேளையில், வகுப்பிற்குள் வந்த அதிபர், அவன் செயலைக் கண்டு மகனுக்கு மாணவத் தலைவனாகும் தகுதி நன்றாக இருக்கின்றது. தொடர்ந்தும் இம்மாதிரியான பொறுப்புக்களை நிறைவேற்று ''மிகவும் நல்லது'' எனக் கூறினார்.

குமாரைப் போன்று தமது பொறுப்புக்களை மிகவும் நல்ல முறையில் நிறைவேற்றும் கெட்டித்தனமான மாணவர்கள் வகுப்பில் இருப்பது போன்று உங்கள் பாடசாலை சமூகத்திலும் இருப்பார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இவ்வாறு நீங்களும் உங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றும் தலைவனாக வரமுடியும்.

''திருத்தூதர்கள்'' என்னும் இயேசுவின் சீடர் குழுவிலும் இவ்வாறான தலைவர்கள் இருந்தார்கள் என்பதை நாம் பார்ப்போம்.

அவர் யார்? அது சீமோன் என்னும் பெயரைக் கொண்ட பேதுரு அவர் ஒரு முறை

இயேசுவை ''நீர் கிறிஸ்து'' எனக் கூறினார்.

இன்னும் ஒருமுறை இயேசுவோடு கூட

மரிப்பதற்கும் தயாராய் இருக்கிறேன் எனக் கூறினார்.

பின்பு ஒரு முறை

அவரைத் தெரியாது எனக் கூறினார்.

இருப்பினும் இயேசு அவருக்கு

''நீ மனம் திரும்பியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து'' என்று கூறினார். லூக்கா : 22:32.

இது அவரால் கொடுக்கப்பட்ட பொறுப்பு. இருப்பினும் இயேசு சிலுவையில் அறையப்பட்ட வேளையில் பேதுருவும் ஏனைய சீடர்களும் பயந்து மறைந்து இருந்ததை நற்செய்திகள் குறிப்பிடுகின்றன. (யோவான் :20:19)

இவ்வாறு எதிர்பார்ப்பற்ற நிலையில் இருந்த பேதுரு விசேட தீர்மானம் ஒன்றை எடுத்தார். சீடர் குழுவின் தலைவரான இவரின் தீர்மானத்திற்கு ஏனைய அங்கத்தவர்களும் உடன்பட்டனர்.

பேதுரு - நான் மீன் பிடிக்கப் போகிறேன்.

ஏனைய சீடர்கள் - நாங்களும் உம்மோடு வருகிறோம்.

அவர்கள் திபேரியாக் கடலை நோக்கிச் சென்று வழமையாக மீனவத் தொழிலை மேற்கொண்டனர். ஆனால் அவர்களுக்குப் பயனளிக்கவில்லை. யோவான் :21:2-3.

இங்கு இவர்கள் யாரைச் சந்தித்தனர்? உயிர்த்தெழுந்த இயேசுவை சந்தித்தனர். யோவான் :21:1-4.

இருப்பினும் சீடர்கள் இயேசுவை அறிந்து கொள்ளவில்லை. ஆனால் இயேசு, அவருக்கும் அவருடைய சீடர்களுக்குமிடையில் முன்பு இருந்த தொடர்பை நினைவுபடுத்துவதற்கு செயற்பட்டார்.

அது இவ்வாறு,

இயேசு - நண்பர்களே உங்களிடம் மீன்கள் இருக்கிறதா?

சீடர்கள் - இல்லை என்றனர்.

இயேசு - படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள் அப்போது கிடைக்கும் என்றார்.

சீடர்கள் அவரை அறிந்துகொள்வதற்கு உதவியாகவும் அவருக்குக் கீழ்ப்படிவதற் காகவும் அவரோடு இருந்த தொடர்பை நினைவு கூறுவதற்கும் இவ்வாறு செயற் பட்டார். இதன் பிரதிபலனாக அவர்களுடைய முயற்சி நிறைவேறியது. அவர்களுக்கு மிகுதியாய் மீன்கள் கிடைத்தன. அவ்வேளையில் இயேசுவின் அன்புச் சீடன் யோவான் அவரை அறிந்து கொண்டான். அதை பேதுருவிடம் கூறியபோது அதை நம்பிய பேதுரு ஆடையை இடுப்பில் கட்டிக்கொண்டு கடலில் குதித்தார். ஏனைய சீடர்கள் வலையைக் கரைக்குக் கொண்டு வருவதற்கு செயல்பட்டனர்.

இரவு முழுவதும் அவர்களுக்கு மீன்கள் எதுவும் கிடைக்காத போதும், சீடர்கள் இயேசு வுக்குக் கீழ்ப்படிந்து சென்றதினால் பெரியமீன்கள் நூற்று ஐம்பத்து மூன்று பிடிக்கக் அவர்களால் முடிந்தது. வலை நிறைய மிகுதியான மீன்கள் இருந்தபோதும் வலை கிழியவில்லை. உயிர்த்தெழுந்த இயேசு இங்கு சீடர்களுக்கு

- புதிய எதிர்பார்ப்பைக் கொடுத்தார்.
- தைரியத்தைக் கொடுத்தார்
- பெலனைப் பெற்றுக் கொடுத்தார்.
- அவர்களைப் போஷித்தார்.
- புதிய பொறுப்பை நிறைவேற்றுவதற்குப் பேதுருவை ஆயத்தம் செய்தார்.

எதிர்பார்ப்புக் குறைந்து போய், சீடர்கள் சோர்வடைந்த சந்தர்ப்பத்தில் அவர் அவர் களைக் கைவிடாது அவர்களைத் தைரியப்படுத்துவதற்காக இயேசு திபேரியாக் கடல் அருகே வந்தார். எமது வாழ்விலும் நாம் தைரியத்தை இழந்த நிலையில் இருக்கும்போது தைரியத்தோடு முன்னோக்கிச் செல்வதற்கும் எமது எதிர்பார்ப்புக்கள் குறைவடைந்த சந்தர்ப்பத்தில் எதிர்பார்ப்புக்கள் நிறைவடையக் கூடியதாக இயேசுவின் மேல் விசுவா சத்தை கட்டியெழுப்பி அவருக்குக் கீழ்ப்படிந்து முன்னோக்கிச் செல்வதற்கு உயிர்த்த இயேசு எமக்கு வழி காட்டுவார்.

திபேரியாக் கடல் என்னும் கலிலேயாக் கடலருகில் முன்னைய நாட்களில் இயேசு பேதுருவையும் ஏனைய சீடர்களையும் அழைத்து அவர்களைத் தனது மறைத்தூதுப் பணியின் அங்கத்தவர்களாக ஏற்படுத்திய முறையை நினைவிற் கொள்வோம். இங்கு மீண்டும் இயேசு, பேதுருவின் தலைமைத்துவத்தை உறுதிப்படுத்தி புதிய பொறுப்பை ஒப்படைத்த முறையை யோவான் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

• u»õÁuõP

இயேசு : யோவானின் மகன் சீமோனே நீ இவர்களைவிட மிகுதியாய் என்மீது அன்பு செலுத்துகிறாயா?

பேதுரு : ஆம் ஆண்டவரே எனக்கு உம்மிடம் அன்புண்டு என உமக்குத் தெரியும்.

இயேசு : என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர்.

இயேசு : யோவானின் மகன் சீமோனே என் மீது அன்பு செலுத்துகிறாயா?

பேதுரு : ஆம் ஆண்டவரே எனக்கு உம்மிடம் அன்பு உண்டு என உமக்குத் தெரியுமே.

இயேசு : என் ஆடுகளை மேய்.

Cµ s hõ® • øÓ

இயேசு : யோவானின் மகன் சீமோனே என்மீது அன்பு செலுத்துகின்றாயா?

பேதுரு : ஆண்டவரே உமக்கு எல்லாம் தெரியுமே நான் உம்மை அன்பு செய்கிறேன் என்பது உமக்குத் தெரியும்.

இயேசு : என் ஆடுகளைப் பேணிவளர்

மூன்றுமுறை இயேசுவைத் தெரியாது என மறுதலித்த பேதுருவிடம் ஒரே கேள்வியை மும்முறை கேட்டு எதிர்பார்த்தது என்ன?

இந்த செயலினால் பேதுரு துயருற்றார். ஏனைய சீடர்களைவிட மேலாக பேதுருவிடம் மாறாத ஆழமான அன்பைக் கொண்டிருந்தபடியால் அதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இயேசு ஒரே கேள்வியை மும்முறை வினாவினார்.
''நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காக தம் உயிரைக் கொடுப்பார்.''
(யோவான் 10:11)

இவ்வாறு கூறிய இயேசு தனது ஆயனின் பொறுப்பை பேதுருவிடம் ஒப்படைத்தார் என்பது தெளிவாகின்றது.

மந்தைகளைப் போஷிப்பதற்கும் மந்தைகளின் தலைமைத்துவத்தை ஏற்பதற்கும் மிகவும் முக்கியமான பண்பானது மந்தைகளுக்காகத் தன் உயிரைக் கொடுப்பது. இவ்வாறான அன்பு பேதுருவிடம் உள்ளதா என்பதை அறிந்து பார்த்தார். ஆயனின் கடமையை நிறைவேற்றுவதற்காக இயேசுவைப் போன்று பேதுருவுக்கும் சிலுவையில் மரிக்க நேரிடும் என்பதை இயேசு முன்வைத்தார்.

இவ்வாறு, இன்றும் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும்

- தனது மந்தையின் தலைவனாவதற்கு
- வழிகாட்டி மந்தையை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு
- மந்தையை ஆன்மீக வளர்ச்சிக்கு சரியான முறையில் போஷிப்பதற்கு பொறுப்பையும் அழைப்பையும் இயேசு வெளிப்படுத்துவார்.

பேதுருவின் முன்மாதிரியைப் பின்பற்றி, கிறிஸ்தவ தலைவர்களாக கடவுளுக்காக அர்ப்பணித்து பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அவர் எம்மை அழைக்கின்றார். அதற்காக ஆழமான அன்பை எமது வாழ்விலே விருத்தி செய்து, அவருக்குள் இணைவதற்கு கிறிஸ்தவ மந்தைகளை முன்னோக்கி அழைத்துச் செல்வதை அவர் எம்மிடம் இருந்து எதிர்பார்க்கின்றார்.

இல்லத்தில், பாடசாலையில், சமுதாயத்தில் எம்மிடத்தில் பின்வருவனவற்றை கடவுள் எதிர்பார்க்கின்றார்.

- இறைவார்த்தையில் பெலனடைந்து பிறரையும் போஷித்து பெலப்படுத்த வேண்டும்.
- இடைவிடாது ஜெபத்தில் தரித்திருந்து பிறரைப் பெலப்படுத்த வேண்டும்.
- எப்போதும் கிறிஸ்தவ குணாதிசயங்களை நமது வாழ்வில் முன்மாதிரியாக காண்பிக்க வேண்டும்.

இப் பொறுப்பை அன்போடும், அர்ப்பணத்துடனும் வாழ்ந்து நிறைவேற்ற வேண்டும்.

ö\¯Ø£õk

''கிறிஸ்தவர்களின் பொறுப்பு'' என்ற தலைப்பில் சிறு கைநூல் ஒன்றைத் தயாரிக்கவும். கீழே தரப்பட்ட தலைப்பின் கீழ் கருத்துக்களை முன்வையுங்கள்.

- பேதுருவுக்கு ஆயத்துவப் பணியை ஒப்படைத்தல்
- கிறிஸ்தவர்கள் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு


10 தூய ஆவியின் அருட்கொடைகள்

1 கொரிந்தியர் 12:4-11

தூய ஆவியினால் எமக்கு வழங்கப்பட்டுள்ள அருட் கொடைகளை அறிந்து அவற்றைப் பிறர் நலனுக்காக பயன்படுத்தக் கூடிய வழிமுறைகளை இப்பாடம் மூலம் ஆராய்வோம்.

சிறுவர், இளைஞர், வயோதிபர் அன்பளிப்பு எனும் அருட்கொடையை பெறுவதற்கு விரும்புவர். பிறந்தநாள், திருமணம் போன்ற விழாக்களில் பரிசுகளை வழங்குதல் வழக்கம்.

மானிடர் இறைவனிடமிருந்து பெற்ற மிகப் பெறுமதிமிக்க பரிசு மனித உடல் ஆகும். பல அவயவங்களை உடைய மனித உடலானது இறைமகிமையைப் பிரதிபலித்தல் செயல்முறை அடையாளம் ஆகும். உடலுடன் தொடர்பான பல அவயவங்கள் சக்கர சுழற்சிக் கோலமாகச் செயற்படுகின்றன. பல அவயவங்கள் உடலின் வாழ்வுச் செயல்களுக்காகவே செயற்படுகின்றன. அவ்வாறு ஒரே தூய ஆவியால் எமக்குப் பலவித அருட்கொடைகள் அருளும் வகைகளை உருவப்படத்தில் நோக்குவோம்.



இவ்வாறாக மானிடரையும் சபையையும் ஆன்மீகத்தில் வலுவூட்ட ஒரே ஆண்டவரால் ஒரே தூயாவியானவர் மூலமாக பல்வேறு ஆன்மீகக் கொடைகள் அளிக்கப்பட்டுள்ளன.

வாசிப்போம்
1 கொரிந்தியர்
12.4-11

மேற்படி பல்வேறு ஆன்மீகக் கொடைகள் தூய ஆவியானவரால் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறாக வழங்கப்பட்டுள்ளன. இவைகள் இறை உறவினால் இறை கருணையுடன் கிடைத்தவைகள் அன்றி எமது ஆற்றலால் கிடைத்தவை அல்ல.

அருட்கொடைகள் பிறரை வலுவூட்டவும் திரு அவைகளைப் பலப்படுத்தவும் எமக்கு அளிக்கப்பட்டுள்ளன. எல்லாக் கொடைகளிலும் சமமான பெறுமதி காணப்படுவதுடன் எல்லோருக்கும் ஏதாவது கொடை வழங்கப்பட்டுள்ளதை அறிந்துகொள்ள வேண்டும்.

அருட்கொடைகள் தூய ஆவியால் எமக்கு அருளப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக் கொண்டு, அவற்றை அறிந்து கொள்ளல் கிறிஸ்தவரின் கடமை ஆகும்.

அருட்கொடைகளை தனித்தனியாக ஆராய்வோம்.

தூய ஆவியால் ஞானம் நிறைந்த சொல்வளம்

ஒருவர் பிரச்சனைகள் மத்தியில் வாழும் வேளையில், பிரச்சினைகளை வெற்றி காண் பதற்குரிய வழி வேறு ஒரு நபருக்கு தூய ஆவியானவரின் வழிகாட்டலும் அறிவு ரையும் மூலம் கிடைத்தல் எனக் கருதப்படுகின்றது.

அறிவு செறிந்த சொல்வளம்

பிறருக்கு, இறையியலைச் சரியாக விளக்கிக் கூற தூய ஆவியானவரிடமிருந்து ஞானம் கிடைத்தல் என இங்கு கருதப்படுகின்றது.

தூய ஆவியானவரில் நம்பிக்கை

நாள்தோறும் கிறிஸ்தவ வாழ்வில் காணப்படும் விசுவாசம் என இது பொருள்படும். அந்த விசுவாசத்தை நிறைவேற்ற எமக்கு தூய ஆவியானவர் ஆற்றல் அளிக்கின்றார்.

பிணி தீர்க்கும் அருட்கொடை

இயேசு பன்னிரு திருத்தூதரை நற்செய்திப் பணிக்காக அனுப்பும் வேளையில் தூய ஆவியின் வல்லமையை அருளினார். தூய ஆவியானவரால் உடல், உள, ஆத்மீகம் என்பவற்றுக்கு பூரண சுகம் கிடைக்கின்றது. எவ்வித நோய்களையும் குணமாக்கி மக்களுக்கு ஆறுதல் வழங்க மேற்படி கொடை தூயாவியானவரால் வழங்கப்படுகின்றது.

வல்ல செயல் செய்யும் ஆற்றல்

விசுவாசம் மற்றும் வல்லமையான ஜெபம் மூலமாக பலப்படுத்தப்படல் தூய ஆவியின் கொடையாகும். பல்வேறு சந்தர்ப்பங்களில் இறை வல்லமையை அறிவித்தல் இந்த அருட்கொடையால் நிறைவேற்றப்படுகின்றது.

இறைவாக்குரைக்கும் ஆற்றல்

தற்காலத்தில் நடைபெறுபவைகளை அவதானமாக ஆராயும்போது இறை வெளிப்பாட்டின் மூலமாக எதிர்காலத்தில் ஏற்படும் நிகழ்வுகளைக் கூறும் ஆற்றல் இறைவாக்குரைப்பவர்களுக்கு வழங்கப்பட்ட மகத்தான ஆசியாகும்.

ஆவிக்குரியவற்றை பகுத்தறியும் ஆற்றல்

தவறான போதனைகளால் வழிதவறிப் போகாதவாறு உண்மையான இறையியல் கருத்துகளை அறியவும், அறிவிக்கவும் இந்த அருட்கொடை முக்கியம். கடவுளைப் பற்றி, திருச்சபையைப்பற்றி சரியாக விளங்கிக்கொள்வதற்கு இது உதவுகின்றது.

பலவகை மொழிகளைப் பேசும் ஆற்றல்

இறைவனால் மானிடருக்கு அருளப்படும் சிறப்பான ஆற்றல் இதுவாகும். ஆன்மீக துறையில் சபையைப் பலப்படுத்துவதற்கு வழங்கப்படுகின்றது. இந்த ஆற்றல் திருத்தூதர் பணி நூல் 2:4-11 குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதல் கிறிஸ்தவ சபையின் ஆரம்ப தினத்தில் தூய ஆவியானவரின் வருகையின் வேளையில் எருசலேம் மேலறையில் இடம்பெற்றது.

பிறமொழிகளை விளக்கும் ஆற்றல்

பிற மொழி பேசினாலும் அதனை விளங்க முடியாவிட்டால் அதனால் பயனில்லை தூய ஆவியானவரால் வழங்கப்பட்ட இன்னுமொரு ஆற்றல் பிற மொழி பேசுதல் ஆகும். இறைவன் தரும் செய்தி, இறைவாக்குகளை சபைக்கு விளக்குதல் இதன் நோக்கமாகும்.

மேற்படி அனைத்து அருட்கொடைகளுக்காக இறைவனுக்குத் துதி செலுத்துதல் எமது கடமை ஆகும். ஒருவரையொருவர் பலப்படுத்தி சபையை வலுப்படுத்திக் கட்டியெழுப்புவதற்காக தூய ஆவியானவர் இவ்வாறான பலவித அருட்கொடைகளை எமக்கு வழங்கியுள்ளார்.

தூய ஆவியானவரின் அருட்கொடைகளை இறைவேண்டல் மூலம் அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறான அருட் கொடைகள் திரு அவையினால், எமக்குக் கிடைத்துள்ளது என ஆவியானவரால் உறுதிப்படுத்தலுடன் தூய ஆவியானவரின் கொடை உறுதிப்படுத்தப்படுகின்றது.

எனவே நாம் தூய ஆவியின் கொடைகளால்

- சபையைக் கட்டியெழுப்புவோம்.
- பாவத்தையும் தீய செயல்களையும் எதிர்ப்போம்.
- ஒன்றிணைந்த மக்களை உருவாக்குவோம்
- இறைவனைக் கௌரவப்படுத்துவோம்.

செயற்பாடு

1. இந்த பாடத்தில் நீங்கள் கற்ற தூய ஆவியின் அருட்கொடைகளை வரிசைப்படுத்துக.
2. மேற்படி தூய ஆவியின் கொடைகளில் உம்மிடம் காணப்படும் கொடையை அறிந்து அதனைப் பிறர் நலனுக்காகப் பயன்படுத்தும் முறைகளை விளக்குக.

11 தூய ஆவியின் கனிகள்

தூய ஆவியின் கனிகளை இனம் கண்டு அவற்றை எமது வாழ்வில் வளர்த்துக் கொள்வதற்கு முயலுதல் இப்பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.




சாப்பாட்டு மேசை மீது பழங்கள் நிரம்பிய பழக்கூடை வைக்கப்பட்டது. அதிலிருந்து வெளிப்படும் நறுமணம் வீடு முழுவதும் வீசியது. பல வர்ணங்கள் நிறைந்த பழங்களைக் கழுவி வெட்டி அவற்றின் சுவையை அறியும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவை

- *பலவித சுவை*
- *பலவித நறுமணம்*
- *பலவித நிறங்கள்*

தருவதைப்போன்று ஆன்மீக வாழ்வில் கிறிஸ்தவரை சுவையூட்டும் ஒன்பது கனிகள் குறித்து திருத்தூதர் பவுல் கூறுகின்றார்.

வாசிப்போம்
கலாத்தியர் 5: 22 -26

தூய ஆவியின் வல்லமையால் எமது வாழ்வில் வளரும் தூய ஆவியின் கனிகள்.



எம்மில் வளரும் தூய ஆவியின் கனிகளை ஆராய்வோம்.

A ß ¦ பிறரிடமிருந்து எவ்வித பிரதி உபகாரங்களையும் எதிர்பார்க்காது பிறரின் தேவையில் செயற்படும்போது அன்பு என்னும் கனி வெளிப்படுகின்றது. எமது வாழ்விலும் அவ்வாறான அர்ப்பணிப்பு நிறைந்த அன்பு வளர வேண்டும்.

©Q Ì a] உலக ரீதியிலான சந்தோஷத்தைக் கடந்து இறைவனால் மட்டும் கிடைக்கும் சந்தோஷத்தைக் குறிக்கின்றது. இந்த மகிழ்ச்சியானது அணையாத தீபமாக எமது உள்ளத்தில் எரிய வேண்டும்.

A ø © v எமது வாழ்வில் கருதும் சமாதானத்தை விட ஆழமான பொருள் உள்ளது. ஆறுதல், சௌபாக்கியம், செழிப்பு, பரிபூரணம், பாதுகாப்பு போன்ற அனைத்தும் அமைதியில் ஒன்று சேர்ந்தது எனக் கூறலாம்.

வெ£õÖ ø © சிறப்பாகப் பொறுத்துக் கொள்ளல் எனக் கருதப்படுகின்றது. பிறருடன் உறவுகொள்கையில்; எதிர்ப்பின் மத்தியில் பயணம் செய்கையில் அதிகம் வெளிப்பட வேண்டிய பண்பு பொறுமையாகும்.

£›Ä கடவுளின் சிநேகம், இரக்கம், உதவி செய்தல் போன்ற குணங்கள் அடங்கு கின்றன. எமது வாழ்வில் காணப்படும் இரக்கத் தன்மையால் இறைசாயலை பிறர் அறிந்து கொள்கின்றனர். நல்ல உறவுகளில் மிக முக்கியமாகத் தேவைப்படும் பண்பாகும். பிறர் சார்பாக செயற்படுகையில் உற்சாகத்துடனும், கரிசனையுடனும் அவர்களின் தேவைகளைப் புரிந்து செயற்படல் பரிவுடன் தொடர்புடையது.

|ßÚ¯® பிறர் நலனில் கரிசனை காட்டி, அவர்களது தேவைகளை நிறை வேற்று கையில் தீமையை அகற்றி நன்மைக்காகச் செயற்படும் தூய ஆவியின் கனியாகும்.

|®¤UøP கடவுளில் நாம் வைக்கும் நம்பிக்கையைக் குறிக்கின்றது. வாழ்வில் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகள், சிக்கல்களின்போது சோர்வடையாது, பின்னடையாது, இறைவனில் வேரூன்றி, செயற்படுதல் ஆகும்.

PÛÄ தாழ்மையுடன், கீழ்படிவுடன் பிறருடன் நல்லிணக்கம் காட்டும் பண்பாகும்.

ußÚhUP® தமது உணர்வுகளையும் ஆசைகளையும் அடக்கி வாழ்வுக்கு அடக்கம், ஒழுக்கம் மற்றும் நல்நடத்தை என்பவற்றை வளர்த்துக்கொள்ளல் ஆகும்.

G©x ÁõÌÂÀ y¯ BÂ°ß PÛPøÍ ÁÍºzxU öPõÒÁx £ØÔ Bµõ´÷Áõ®.

- எதிரிகள் எம்மைத் துன்புறுத்துகையில், அவர்களைப் பகைக்காது, துன்புறுத்தாது இருப்போமானால் அல்லது பிரதி உபகாரம் எதிர்பார்க்காது பிறருக்கு உதவி செய்வோமானால் தூய ஆவியின் கனியான அன்பு எம்மில் காணப்படும்.

- சுகயீனம், குடும்பப் பிரச்சினை, பாடசாலைப் பிரச்சினைகள் போன்ற நிலைகளில் இறைவனை நம்பி, இறைவனைத் துதித்து உற்சாகமாக வாழ முடியுமானால் தூய ஆவியின் கனியான மகிழ்வு எம்மில் காணப்படுகின்றது.

- வாழ்வில் இக்கட்டான நிலை தோன்றும் வேளையில், எதிர்பார்ப்புக்கள் வீழ்ச்சி அடைந்து, கோபம், வேதனை என்பவற்றை உள்ளத்தில் வளர்த்துக்கொள்ளாது, ஆறுதல் கிடைக்கும் உணர்வுகளை உள்ளத்தில் நிரப்பும் தூய ஆவியின் கனி அமைதி ஆகும்.

- பிறர் எம்மை அவதூறாக விமர்சிக்கும்போது அவர்களது நன்மையை நினைத்து, எமது வாழ்வின் பிரச்சினைகள், முரண்பாடுகள், சவால்கள் என்பவற்றைப் பயமின்றி எதிர்நோக்க உதவும் தூய ஆவியின் கனி பொறுமை ஆகும்.

- எம்மைச் சூழ இருப்போரின் ஆபத்துக்கள், பிரச்சினைகள், சிக்கல்கள் போன்ற வற்றில் அவர்களுக்கு உதவி செய்வதற்குத் துணைபுரியும் தூய ஆவியின் கனி பரிவு ஆகும்.

- தன்னலம் அகற்றி எங்களது பாடசாலை வகுப்பு நண்பர் / நண்பிகளுக்கு உதவி செய்வதற்கு எம்மை வழிநடத்தும் தூய ஆவியின் கனி நன்னயம் ஆகும்.

- வாழ்வின் எல்லா நிலைகளிலும் இறைவனில் நம்பிக்கை வைத்து வாழத் தூண்டும் தூய ஆவியின் கனி நம்பிக்கை ஆகும்.

- தாழ்மையுடன் பிறரின் துன்ப துயர்களை நாம் உணரவும், தாழ்மையுடன் வாழ்ந்து, எப்போதும் அவர்கள் அருகில் இருந்து அவர்களது உதவி புரிவதற்கு துணை புரியும் துய ஆவியின் கனி கனிவு ஆகும்.

- பாடசாலையில், வகுப்பறையில், சமூகத்தில் சுய கட்டுப்பாடுடன் இறை விருப் பத்திற்கு ஏற்ப வாழ உறுதுணையாக இருக்கும் தூய ஆவியின் கனி தன்னடக்கம் ஆகும்.

உமது ஆன்மீக வாழ்வு நிறைவு பெறவும், அழகானதாக அமையவும், தூய ஆவியின் கனிகள் அனைத்தும் வாழ்வில் ஒன்று சேர வேண்டும். அதனூடாக,

- மனம் வருந்தி பாவத்தைச் சிலுவையில் அறைந்து, புதுவாழ்வு வாழச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

- தவறான சிந்தனைகள், தவறான உணர்வுகள், தவறான செயல்கள் போன்றவற்றை அகற்றி நல்வாழ்வு வாழும் நிலை உருவாகும்.

- தூயாவியானவரின் வழிகாட்டுதலை வாழ்வில் எப்போதும் அனுபவிக்கும் சந்தர்ப்பம் தோன்றும்.

- பிறர்நலன் கருதி பண்பான வாழ்வை வளர்க்கும் ஆற்றல் கிட்டும்.

- எப்போதும் கிறிஸ்துவின் பிள்ளைகளாக வளரும் பேறு கிடைக்கும்.

செயற்பாடு

1. தூய ஆவியின் கனிகள் எழுதப்பட்ட வாழ்த்து மடல் ஒன்றைத் தயாரித்து அதனை வர்ணம் தீட்டி, அலங்காரம் செய்யுங்கள்.
2. தூய ஆவியின் கனிகள் உங்கள் வாழ்வில் வளரும்போது உங்களில் ஏற்படும் மாற்றங்கள் என்ன?

12 தூய ஆவியில் பணி

நாம் ஒவ்வொருவரும் பெற்றுக் கொண்ட தூய ஆவியின் கொடையானது பலவிதமானது. அக் கொடைகளை அறிந்து கொண்டு, அவற்றை இறை மகிமைக்காக அர்ப்பணித்து செயற்பட வேண்டும். அவ்வாறே இலங்கையில் இறை மகிமைக்காக தமது வாழ்வை அர்ப்பணித்த சிலரின் இறைபணி பற்றி ஆராய்ந்து பார்ப்போம்.

CÆ¼ß Põº o



உரு 12.1 இவ்லின் கார்ணி

ஆங்கிலேயப் பெண்ணான இவ்லின் கார்ணி அம்மையார் 1869ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ம் திகதி பிறந்தார். இருபத்தாறு வயது வாலிபப் பெண்ணாக இருந்தபோது, அதாவது 1896 இல் இங்கிலாந்திலிருந்து இலங்கை வந்தார். அவர் அங்கிருந்து வாழ்ந்த சுகபோக வாழ்வை கடவுளின் பணிக்காக அர்ப்பணித்தவர். அப் பணிக்காக அவர் அநுராதபுரத்தில் இருந்து எட்டு மைல் தொலைவில் இருந்த தலாவ என்னும் பின்தங்கிய கிராமப் பகுதியைத் தெரிவுசெய்தார்.

மிகவும் கஷ்டத்தோடும் வறுமையோடும் வாழ்ந்த இக்கிராம மக்கள் மலேரியா, தொழுநோய் போன்ற நோய்களினாலும் பாதிக்கப்பட்டு மிகவும் துன்பமான வாழ்க்கையை வாழ்ந்தனர். இவ்வாறான துன்ப நிலையில் இருந்தவர்களுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்த இவ்லின் கார்ணி அம்மையார், அம்மக்களின் சுக நலத்திற்காகவும் அவர்களின் தேவைகளுக்காகவும் பலவிதமான முறைகளில் செயற்பட்டார்.

ஆரம்பத்தில் இவ்வாறு துன்பத்தில் உள்ளவர்களுக்குப் பணி செய்வதற்கென தனி இடம் இருக்கவில்லை. அனாதைச் சிறுவர்களுக்காக 'மகிழ்ச்சி இல்லம்' வயோதிபர்களுக்காக 'சந்தியா' என்ற நிலையம் என்பவற்றை மக்களின் உதவியோடு அமைத்தார். 'தங்கை இல்லம்' என்ற பெயரில் மகளிரின் பணிக்காக ஒரு பாடசாலையையும் ஆரம்பித்தார். 1915ல் முதலாம் உலக யுத்தத்தில் பாதிக்கப்பட்டோருக்காக 'சமாதான இல்லம்' ஆரம்பித்தார்.

அதன் பின்னர் அவற்றை மூன்று மருத்துவ நிலையங்களாக அபிவிருத்தி செய்தார். இவற்றின் மத்தியில் இறை வழிபாட்டிற்காக ஒரு சிறிய ஆலயத்தைக் கட்டிய இவ்லின் கார்ணி அம்மையார், அனுதினமும் திருவிவிலியத்தை வாசித்து பாடல்களைப் பாடி பிறருக்கு கடவுளைப் பற்றிக் கூறுவதற்கு முன்வந்தார். இவ்வாறு இவர் கடவுள் நம்பிக்கையும் அன்பும் இரண்டல்ல ஒன்றுதான் என்பதை அவரின் வாழ்வின் முன்மாதிரியாக காண்பித்தார்.

மேலும் இவர் மிகவும் எளிமையாக வாழ்ந்து இலங்கை நாட்டின் கலாசாரப்படி தேசியப் பெண்களைப் போன்று 'சேலை' அணிவதில் விருப்பம் கொண்டவர். இவ்வாறு இவ்லின் கார்ணியின் அர்ப்பணிப்பானது சமூகப் பணிக்கும் கடவுளின் நாமத்திற்கும் மகிமையாக அமைந்தது. இவ்வாறு கிராம மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றார். இதனால் அவர்கள் 'வெள்ளை அம்மா' என்ற பெயரில் அவரை அழைத்து மதிப்பு அளித்தார்கள்.

தனது தாய் நாடான இங்கிலாந்தில் சுகபோகத்தோடு வாழ்வதற்கு தகுதி இருந்த போதும் தூய ஆவியின் வல்லமையான செயற்பாட்டினால் தலாவ என்னும் கஷ்டப் பிரதேசத்தை தெரிவு செய்து கடவுளுக்காகத் தனது பணியை நிறைவு செய்த இவ்லின் கார்ணி அம்மையார் 1953ம் ஆண்டு ஜனவரி 25ம் திகதி இறையடி எய்தினார். அவரின் அடக்கச் செயற்பாடுகள் அங்குள்ள வனப் பகுதியிலேயே நடைபெற்றது.

அதி வணக்கத்திற்குரிய பேராயர் அன்றூ குமாரகே



உரு 12.2 அதி வணக்கத்திற்குரிய பேராயர் அன்றூ குமாரகே

1934ம் ஆண்டு ஜனவரி மாதம் 24ம் திகதி பிறந்த அதி வணக்கத்திற்குரிய அன்றூ குமாரகே ஆயர் இலங்கைத் திருச்சபையின் மறை மாவட்டமான குருணாகலையில் குருவானவராக 1959ம் ஆண்டு மே மாதம் 23ம் திகதி இணைந்து கொண்டார். அதற்கு முன் 1958 மே மாதம் 1ம் திகதியில் இருந்து டீக்கனாக கடமை புரிந்தார்.

இந்தியாவில் கல்கத்தாவில் பிஷப் இறையியற் கல்லூரியில் 1954ம் ஆண்டு இணைந்து கொண்ட அதி வணக்கத்திற்குரிய அன்றூ குமாரகே ஆயர் அங்கு இறையியல் இளமாணிப் பட்டத்தைப் பெற்றார். பின்னர் இங்கிலாந்து சென்று வெஸ்டிஹில் கல்லூரியில் சமயக் கல்வியைப் பற்றிய நெறியில் டிப்ளோமாப் பட்டம் பெற்ற அவர், குருணாகலையில் இலங்கைத் திருச்சபையின் மறைமாவட்டத்தில் சமயக் கல்விக்காக பரந்த அளவில் பணி செய்தார். சமயக் கல்வியும் பாடசாலைக் கல்வியைப் போன்றதால் குருமார்களின் பயனுக்காக சமய நூல்கள் பலவற்றை அவர் எழுதினார். மேலும் தேசிய விழுமியங்களில் மக்கள் வாழ்வைச் சமயத்தில் வேரூன்றச் செய்வதற்கு அவர் எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது.

நல்லாயனாக பணியாற்றிய அதி வணக்கத்திற்குரிய அன்றூ குமாரகே ஆயர் அவர்கள், மக்களின் பலவிதமான பிரச்சனைகளுக்கு ஆறுதல் அளிப்பதற்கும், உதவி செய்வதற்கும் முன்னின்று செயற்பட்டார். மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும், குடும்ப வாழ்வை மேம்படுத்துவதற்கும், நல்ல சமூகத்தொடர்பை விருத்தியடையச் செய்வதற்கும், கடவுளின் வழிகாட்டலைத் தேடுவதற்கும், மக்களை ஈடுபடச் செய்வதே அவரது பிரதான பணியாக அமைந்தது. இரக்க குணமுடைய அவர் நல்லாயனாக மக்களின் ஆன்மீகத்தை வளர்ப்பதற்காக இவ்வாறு செயற்பட்டார்.

கி.பி 1954 மே மாதம் 6ம் திகதி இலங்கைத் திருச்சபையின் குருணாகலை மறைமாவட்ட 3வது பேராயராக நியமிக்கப்பட்டு கி.பி. 2000ம் ஆண்டில் ஓய்வு பெறும் வரை திருச் சபைக்கு பாரிய பணியாற்றினார். கடவுளுக்காக தனது ஆயர் பணியை முழுமையாக அர்ப்பணிப்புச் செய்த அதி வணக்கத்திற்குரிய அன்றூ குமாரகே பேராயர் அவர்கள், தனது 78ம் வயதில் 2012ம் ஆண்டு ஏப்ரல் 21ம் திகதி இறையடி எய்தினார்.

மதிப்பிற்குரிய குருவானவர் சோமசிறி குமாரதாஸ் பெரேரா



உரு 12.3 மதிப்பிற்குரிய குருவானவர் சோமசிறி குமாரதாஸ் பெரேரா

மொரட்டுவ லுனாவ கிராமத்தில் 1921ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 30ம் திகதி பிறந்த அவர், தனது ஆரம்பக் கல்வியை மொரட்டுவ வேல்ஸ்குமார கல்லூரியில் கற்றார். இறை பணியைச் செய்யும் முன் அவர் அரசாங்கப் பணியில் தொழில் புரிந்தார். பின் 1945 இல் ஆண்டு இறையியற் கல்விக்காக பெங்களூர் செரம்பூர் பல்கலைக்கழகம் சென்றார். 1949 இல் இலங்கை மெதடிஸ்ட் சபையின் குருவானவராக பணியை ஆரம்பித்த போதும் மேலும் ஐந்து ஆலயங்களில் தமது பணியைச் செய்வதற்கும் முன்வந்தார்.


இதன் பின் பிலிமத்தலாவை, இலங்கை இறையியற் கல்லூரியின் அதிபராக 1968 - 1978 இலும் 1986 - 1989 ஆம் ஆண்டுகளிலும் பணியாற்றினார். இங்கு போதகப் பணியோடு சமூகத்தில் ஒப்புரவுடன் வாழ்ந்து நற்செய்தியின் தூதுப்பணியில் ஈடுபடுவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மேலும் 1985 - 1996 காலத்தில் தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் தலைவராக இருந்த அவர் ஆசிய கிறிஸ்தவ மன்றத்திலும் உலக கிறிஸ்தவ மன்றத்திலும் பதவி வகித்தார்.

கிறிஸ்தவ திருச்சபைக்கு மாத்திரமல்ல, முழு சமூகத்தினருக்கும் அவர் பாரிய பணி புரிந்தார். தாழ்மை நிறைந்தவராக, அநேகரின் பாராட்டைப் பெற்ற தலைவராக மதிப்பைப் பெற்ற சோமசிறி குமாரதாஸ் பெரேரா, அவர்கள் நல்ல செவி சாய்ப் பாளராக இருந்தார். உண்மையான ஆயரின் குணங்களை வெளிப்படுத்தி மக்களின் பிரச்சனைகளுக்கு செவி கொடுப்பதில் எப்போதும் ஆயத்தமாக இருந்தார்.

இனங்களின் ஒற்றுமைக்காகவும் ஒருமைப்பாட்டிற்கும் அர்ப்பணித்து செயற்பட்ட அவர், கிறிஸ்தவ சபைகளிடையே ஒருமைப்பாட்டை நிலைநாட்டப் பல வழிமுறை களை முன்வைத்தார். இலங்கை வாழ் மக்களிடையே பிரிவுகள் இருக்கக்கூடாது என நம்பிய அவர், இலங்கையில் யுத்தம் நிறைந்த காலத்தில் அனைவருக்கும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக தனது பங்களிப்பை முழு முயற்சியோடு செய்தார். அவ்வாறே அவர் ஆயரின் செயற்பாட்டை போன்று செயற்பட்டு யுத்தத்திற்கு எதிராகவும் அதனால் துன்பத்திற்கு உட்பட்டவர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கும் தனது தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொடுத்தார். தனது நாற்பது வருட பணியிலிருந்து 1989ம் வருடத்தில் அவர் முழுநேரப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார். இவர் 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் 29ம் திகதி இறையடி எய்தினார்.

மதிப்பிற்குரிய ஒழுக்க விழுமிய குரு முதல்வர் டொனால்ட் கனகரட்னம் அவர்கள்.

பிலிமத்தலாவை இறையியற் கல்லூரியில் இறையியலாளராக பணியாற்றிய இவர் இலங்கைத் திருச்சபையின் கொழும்பு மறைமாவட்டத்தின் குரு முதல்வராக இருந்தார். கலாநிதி பட்டத்தைப் பெற்ற அவர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் தேர்ச்சி பெற்றவர். மிகவும் ஆழமான இறையியலைச் சாதாரணமாக இனிமையாகக் கற்பதற்கு வழி வகுத்து கற்பிப்பதில் முன் நின்ற ஒருவராவார்.



உரு 12.4 மதிப்பிற்குரிய ஒழுக்க விழுமிய குரு முதல்வர் டொனால்ட் கனகரட்னம் அவர்கள்.

மனிதர்களை ஆன்மீகத்தில் போஷித்தது போன்று, அவர்களின் பிரச்சனைகளுக்கு அர்த்தத்தோடு முகம் கொடுப்பதற்கு தைரியத்தை அளிப்பதும் அவரின் பணியில் காணக் கூடிய சிறப்பான குணங்களாகும். இவர் பிலிமத்தலாவை இறையியற் கல்லூரியில் பணிபுரிந்த காலத்தில் ரத்மிவலை விவசாயக் கிராம மக்களுக்காக ஆற்றிய பணியானது பாராட்டுக்குரியது. பௌத்தர்கள் அதிகமாக வாழ்ந்த சூழலில் அமைந்த ரத்மிவலை பிரதேச மக்களோடு இணைந்து பணி புரிந்தார். கிராமத்தார் அனைவரினதும் அன்பான வரவேற்புக் கிடைத்தது. இனங்களிடையே ஒற்றுமையையும் நல்லுறவையும் விருத்தி செய்வதற்கு அவர் ஒரு முன்னோடியாக இருந்தார்.

வவுனியாப் பிரதேசத்தில் இவர் நீண்ட காலமாக வாழ்வின் இறுதிவரை பணி புரிந்தார். மிகவும் துன்பமான வாழ்வை மேற்கொண்ட அப்பிரதேச மக்கள் மத்தியில் இருந்து மக்களைத் தமது வீட்டிற்கு அழைத்து வந்து அவர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வைப்

பெற்றுக் கொடுப்பதில் அவர் தனது வாழ்வின் அதிக காலத்தை அர்ப்பணித்தார். அவர் வாழ்ந்த வீட்டை மக்களின் பணிக்காக இலங்கைத் திருச்சபையின் கொழும்பு மறைமாவட்டத்திற்கு பொறுப்புக் கொடுப்பதற்கு வழி வகுத்து அதை ''ஒற்றுமையின் இல்லம்'' என இனங்களின் மத்தியில் ஒற்றுமையை நிறைவேற்றுவதற்கான இடமாக அமைத்துக் கொடுத்தார்.

ö\¯Ø£õk

1. பாடசாலையில், வீட்டில், ஆலயத்தில் நீர் செய்யக் கூடிய பணிகள் இவ்விரண்டு எழுதுக.
2. நாட்டு மக்களின் நன்மைக்காக தமது வாழ்வை அர்ப்பணித்த மேலும் இருவரின் பணியைப்பற்றி சிறு குறிப்பெழுதுக.

13 \%‰P¨£ o

எமது வாழ்விற்கும், சமூகபணிகளிலும், கிறிஸ்தவ பணி களிலும் தூயாவியின் வழிகாட்டுதலைப் பெறும் முறை களை இப் பாடத்தில் ஆராய்வோம்.

(காலையில் பாடசாலை சென்ற உதயன் தனது அனுபவங்களை குடும்பத்தவருடன் பகிர்ந்து கொள்ளல்).

உதயன் : அம்மா, நான் இன்று பாடசாலையில் புதுமையான நிகழ்வைக் கண்டேன்.

அம்மா : என்ன மகனே!

உதயன் : உங்களுக்குத் தெரியுமா அம்மா? எனது வகுப்பு சுகந்தி எமது வகுப் பறைக்கு அருகில் உள்ள தரம் 6, 7 வகுப்பறைகளைக் கூட்டி, சுத்தம் செய்தாள். அதுமட்டுமல்ல அவள் வகுப்பறைகளின் முற்றங்களையும் கூட்டி பூஞ்செடிகளுக்கும் நீர் ஊற்றுவதையும் நான் கண்டேன்.

அம்மா : நீ உதவி செய்யவில்லையா?

ஆனந்தன் : நானும், தயாளனும் பாலனும் சென்று சுகந்திக்கு உதவி செய்தோம்.

தம்பி : ஒருநாள் இடைவேளை நேரத்தில் நான் விளையாடும்போது விழுந்து விட்டேன். அவ்வேளையில் என்னை வகுப்பறைக்கு அழைத்துச் சென்று காயங்களுக்கு மருந்துபோட சுகந்தி அக்கா உதவி செய்தார்.

தாத்தா : ஆம்! சுகந்தி காலையில் கோவிலுக்கு வந்து ஜெபம் செய்வதை நான் கண்டிருக்கின்றேன். பின்னர் வாங்குகளில் காணப்படும் தூசியைத் துடைத்து, ஆலயத்தைச் சுத்தம் செய்வதையும் நான் கண்டிருக்கின்றேன்.

அம்மா : சுகந்தி அதிகாலையில் எழும்பி சமைப்பதற்கு உதவி செய்வதாக சுகந்தியின் அம்மா சுமதி என்னிடம் கூறியுள்ளார். அது மட்டுமல்ல

தம்பிக்கும் தங்கைக்கும் பாடசாலை செல்ல ஆயத்தமாவதற்கும் சுகந்தி உதவி செய்வதாக அம்மா என்னிடம் ஒருமுறை கூறினார்.

தாத்தா : தூயாவியானவரின் வழிகாட்டுதலில் வாழும் பிள்ளைகளின் நற்செயல்களால் அவர்கள் பிறருக்கு ஒளி கொடுத்து வாழ்கின்றனர்.

தம்பி : தாத்தா எமக்குத் தூயாவியானவரின் வழிகாட்டல் உள்ளதா?

தாத்தா : ஏன்? எம் ஒவ்வொருவரிலும் தூய ஆவியானவர் வாழ்கின்றார். நாம் தூய ஆவியானவருக்குச் செவிகொடுத்து, அவரது வழிகாட்டலுக்கு ஏற்ப செயற்படுதல் முக்கியமானது. உனக்குள்ளும் தூய ஆவியின் வழிநடத்துதல் காணப்படுகின்றது என நான் கண்டுள்ளேன்.

மேற்படி உரையாடலுக்கு ஏற்ப சுகந்தி தூயாவியின் வழிநடத்தலுக்கு கீழ்ப்படிந்து செயற்படும் நல்லதொரு பிள்ளையாவாள். தூயாவியால் ஒளி பெறும் அவள் வீட்டிலும், பாடசாலையிலும், திருச்சபையிலும், அர்ப்பணிப்புடன் தியாக மனதுடன் ஒளிகொடுத்து செயற்படுகின்றாள். அதன் மூலமாக பிறர் வாழ்வும் ஒளிபெற்று மலர்கின்றது. தூயாவியானவர் எம்முடன் வாழ்வதாக உறுதியளித்துள்ளார்.

தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகளை அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி.

(லூக்கா 11 : 13)

உலகில் வாழும் எந்தவொரு தந்தையும் பிள்ளைகள் கேட்கும் நல்லவற்றைக் கொடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். எனவே விண்ணகத் தந்தையிடம் தூயாவியைக் கேட்கும் எவருக்கும் தூயாவியை அருளுகின்றார் என்பதை இறை வார்த்தை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

தூய ஆவியானவர் எம்மில் வாசம் செய்யும்போது எமது வாழ்வில் இறைவன் எதிர்பார்க்கும் பண்புகள் பின்வருமாறு:

1. தூய ஆவியில் இணைந்து வாழும் நாம் பிறர் வாழ்வை வலுப்படுத்த செயற்படுவோம்.

2. தூய ஆவியின் வழிகாட்டலுடன் சமூகத்தில் முன்மாதிரியான நபராக செயற்படுவோம்.

y ¯ B Â ° À {µ®¤ ¯ Áõ Ì ø Á ÷|õUQ

தூயாவியானவரின் வழிகாட்டலில் வலுவூட்டப்படும் எமக்கு பரிபூரண வாழ்வை நோக்கிப் பயணம் செய்யும் வாய்ப்புக் கிடைக்கும்.

உடல், உள, ஆன்மீக நிறைவு பெற்ற வாழ்வை எம்மில் கட்டியெழுப்பிட தூயாவி யானவர் எமக்குப் பலம் அருளுவார்.

தூய ஆவியானவர் எமது வாழ்வுக்கு ஒளியைத் தருவதுபோல் முழுச் சமூகமும் ஒளிபெறும் வழி அமைக்கப்பட்டுள்ளது அதற்காக.

- ♦ சிறுவயது முதல் ஜெபத்துடன் வாழ்ந்து, தூய மனதுடன் வாழுதல் முக்கியமானது. சிறுவயதினருக்குப் பொருத்தமற்றவற்றில் இருந்து தூரவிலகி நற்சிந்தனைகளில் ஈடுபடுதல் முக்கியம். தூயாவியானவர் அதற்காக உங்களை வழி நடத்துவார்.

- ♦ இறைவனுடன் ஏற்படுத்தும் ஆழமான உறவால் எமது ஆன்மீக வாழ்வை வளர்ச்சி அடையச் செய்யலாம். எமது வாழ்வின் முழுநேரத்தையும், எல்லா செயல்களையும் இறைவனுக்கு அர்ப்பணித்தல், ஏற்றல் முக்கியமாகும். நாம் அதனூடாக ஆன் மீகத்துடன், தூயாவியானவருடன் செயற்படுபவர்களாகக் காணப்படுவோம்.

- ♦ சமூகமாக நாம் வாழும்போது, எமக்கிடையே புரிந்துணர்வு காணப்படுவது மிகவும் முக்கியமாகும். எம்முடன் வாழ்பவர்களின் கருத்துக்கள், மனப்பாங்குகள், கலா சாரங்கள் குறித்த புரிந்துணர்வுடனும் அவற்றை மதித்தும் செயற்படுதல் அவசியம். தூயாவியானவரால் பலப்படுத்தப்படும் எமக்கு பிறர் வாழ்வை வலுப்படுத்த புரிந்துணர்வு அவசியம்.

தூயாவியானவரின் வல்லமையைப் பெறும் நாம், அந்த ஒளியை வீட்டில், பாடசா லையில், ஆலயத்தில் பிரதிபலிக்கும் வழிமுறைகளை ஆராய்வோம்.

Ãm i À

சிறுபிள்ளை இறைவனைப் பற்றிய முதல் அனுபவத்தைத் தனது வீட்டில் பெறுகின்றது. தூயாவியானவரால் வழிகாட்டப்படும் உங்கள் குடும்பத்தால் அயலவரின் வாழ்வை வலுப்படுத்த முயலுதல் அவசியம். எமது வீட்டில் தூயாவியானவரின் வழிகாட்டலால் நாம் செய்யக் கூடியவை :

- ♦ குடும்ப ஜெபத்தில் பங்குபற்றித் தூயாவியின் பிரசன்னத்தை உணர்தல்

- தூயாவியானவரில் நம்பிக்கை வைத்து அவரது வல்லமையான செயலை நோக்கிக் காத்திருத்தல்.

- வாழ்வின் பிரச்சனைகளை தூயாவியின் வழி நடத்துதலால் தீர்த்தல்.

- அன்பு மகிழ்வு, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் எனும் தூயாவியின் கனிகளை (கலாத்தியர் 5:22) எமது வாழ்வின் ஊடாக பிறருக்கு வெளிக்காட்டுதல்.

£õh\õø» ° À

இளம் வயதில் வீட்டில் வளர்ந்துவரும் நாம் பிள்ளைப் பருவத்தில் பாடசாலைக்குச் செல்கின்றோம். அங்கு நாம் பல்வேறு அனுபவங்களை எதிர்நோக்குகின்றோம். பாடசாலையில் ஆசிரியர், சமவயதுக் குழுவினர், இளம் - மூத்த சகோதர சகோதரிகள் போன்றவர்களுடன் இணைந்து செயற்பட வேண்டிய நிலை உருவாகும். தூயாவியின் வழிகாட்டலுடன் பாடசாலையில் பிறர் வாழ்வைக் கட்டியெழுப்பும் வழிமுறைகள் சில:

- தூயாவியானவரின் துணையுடன் முன்மாதிரியான நல்வாழ்வு வாழ்தல்
- சிக்கல், பிரச்சனைகளில் தூயாவியின் வழிகாட்டுதலைப் பெற்று செயற்படுதல்
- தூயாவியின் துணையால் பிறர் வாழ்வை அறிந்து, அவர்களுடன் நல்லுறவை வளர்த்தல்.

v ¸ a\ ø £ ° À

வாழ்வின் முக்கிய நிகழ்வானது திருச்சபையுடன் இணைந்து காணப்படுகின்றது. தூயாவியின் பலத்தால் செயற்படும் நாம் இறைவனுடனும் பிறருடனும் செயற்பட வேண்டிய முறைகள் சில:

- இறை வழிபாட்டில் பக்தியுடன் பங்குபற்றல்.
- தூயாவியானவரால் பலப்பட்டு வாழ திருச்சபையினருக்காக இறைவேண்டல் செய்தல்.
- இறையரசின் வளர்ச்சிக்காக இணைந்து விண்ணப்பம் செய்தல்.
- திருச்சபையை வழிநடத்த தூயாவியானவருக்கு இடமளித்தல்.
- உங்களுக்குக் கிடைக்கும் பொறுப்புக்களைத் தூயாவியின் வல்லமையால் ஊக்கமாகவும் பொறுப்புடனும் நிறைவேற்றல்.

இறைவனால் எமக்கு வழங்கப்பட்ட தூயாவியானவரால் துணிவடைந்து இறைபணி செய்திட நாம் எம்மை அர்ப்பணிப்போம்.

ö\¯Ø£õk

1. *தூயாவியானவரால் நீர் பெறும் ஒளியை பாடசாலையில் பிறருக்கு வழங்க நீர் பங்களிப்பு வழங்கும் முறைகளைச் சுருக்கமாக எழுதுக.*

2. *தூயாவியானவரால் நிறைவான வாழ்வைக் கட்டியெழுப்ப நீர் எவ்வாறு ஆயத்தம் செய்வீர் என்பதை விளக்குக.*

14 C øÓ¯µ] ß ö£Ö©v

மனிதர் பாவத்தில் வீழ்ந்த போது அவர்களை மீட்ப தற்காய் இயேசு இவ்வுலகிற்கு வந்தார். அதற்காகப் பாவியை நேசித்து பாவத்தை நிராகரிக்கும் இறையரசின் விழுமியத்தை இயேசு அறிமுகம் செய்தார். சக்கேயு, பாவியான பெண் ஆகிய இரு சம்பவங்களூடாக இதை ஆராய்வோம்.

***லூக்கா* : 19: 1-10 *யோவான்* : 8:1-11.**

செம்பொருள் நற்செய்தி கேள் – இயேசுவே மீட்பராம்
அம்புவியில் அஞ்சல்செய் – இயேசுவே மீட்பராம்
இன்சொல் எங்கும் கூறுவோம் – அஞ்சலென் றார்ப்பரிப்போம்
முன்செல் என்று கற்பித்தார் – இயேசுவே மீட்பராம்

இன்பகோஷம் கூறுவோம் – இயேசுவே மீட்பராம்
நண்பர் கூடிப்பாடுவோம் – இயேசுவே மீட்பராம்
அன்பின் நாதன் ஆளுவார் – துன்பம் நீக்கித்தாங்குவார்
பொன்பதியைப் போற்றுவோம் – இயேசுவே மீட்பராம்

இப்பாடலைப் பாடும்போது இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது பாவிகளின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்ததையும், எமக்குக் கிடைக்கும் இறைவனின் இரக்கத்தையும் நினைவு கூருகிறோம்.

நாம் அநேகமாகப் பலவித காரணங்களால் துன்பம் அனுபவிப்பவர்களாக இருப்போம்.

எமது துன்பங்கள்
- **சரீரத் துன்பங்கள்**
- **மனத் துன்பங்கள்**
- **ஆன்மீகத் துன்பங்கள்**

இவை காரணமாகத் துன்பப்படும் நாம் அத்துன்பங்களில் இருந்து விடுதலை பெறுவதற்கு எமது பெலத்தையே நம்பிச் செயற்படுகின்றோம். ஆனால் இயேசு இவ்வாறு கூறுகிறார்.

> ''பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்கிறார்.

இவ்வாறு இயேசுவின் ஆறுதலைப் பெற்ற இருவரைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போம்.

இயேசு ஆறுதல் அளிப்பவர்

லூக்கா 19:1-10

இயேசு எரிகோவின் வழியே போய்க் கொண்டிருந்த போது உரோமை அரசிற்கு பணி செய்தவரும் வரி தண்டுவோருக்குத் தலைவருமான சக்கேயு என்னும் பெயர் கொண்ட மனிதன் இயேசுவைப் பார்க்க விரும்பி அத்திமரத்தில் ஏறிக்கொண்டார். இதைக் கண்ட இயேசு அவ்விடத்திற்கு வந்தார்.

இயேசு - ''சக்கேயு விரைவாய் இறங்கி வாரும். இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்''

இயேசு இங்கு சக்கேயுவின் பெயரைச்சொல்லி அழைத்தது மிகவும் முக்கிய மானதாகும். அவர் எங்களின் பெயர்களையும் அறிந்திருக்கிறார் என்பதைப் பற்றிய உணர்வு எமக்கு அளவில்லா சந்தோஷமாகும். இந்த சந்தோ ஷத்தைச் சக்கேயுவும் உணர்ந்து இருப்பார். மேலும் அவரின் வீட்டிற்குத் தங்கவருவேன் என இயேசு கூறியபோது இயேசு தன்னையும் ஏற்றுக் கொண்டார் என்ற உணர்வில் மகிழ்வு அடைந்திருப்பார்.

மக்கள் - ''இவர் பாவியான மனிதனிடம் தங்கப் போகிறார்'' என்று முணுமுணுத்தார்கள்.

இயேசு சக்கேயுவின் வீட்டிற்கு சென்றதைச் சமூகத்தினர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதைப் பற்றி இயேசுவிடம் நேரடியாகக் கதைப்பதற்கு துணிவு இல்லாமல் அவர்கள் ஒருவருக்கொருவர் முணுமுணுத்தார்கள். சக்கேயு யூத சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு மனிதன். அவர் அநியாயமாக வரிசேகரித்து, மக் களைத் துன்பத்திற்குள்ளாக்கினார். அக்காலத்தில் யூத சமுதாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு பிரிவினரும் ஏற்றுக் கொள்ளப்படாத பிரிவினருமாக இரு பிரிவினர் இருந்தனர். அரசர்கள், குருக்கள், பரிசேயர், மறைநூல் அறிஞர்கள் மற்றும் செல்வந்தர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரிவினர் ஆகவும் பாவிகள் எனக் கருதப்பட்ட இடையர்கள், வறியோர்கள், வரி அறவிடுவோர் மற்றும் பிற இனத்தவர்கள் ஏற்றுக் கொள்ளப்படாத பிரிவினராகவும் காணப்பட்டனர். சக்கேயு அக்கால சமுதாயத்தில் இவ்விரு பிரிவினரையும் சார்ந்தவர் ஆகக் காணப்பட்டார். அவர் செல்வந்தராகவும் உரோமை அரசிற்கு பணிபுரிந்தமையால் யூத சமூகத் தினரால் ஒதுக்கப்பட்டவராகவும் இருந்தார். அவ்வாறான பாவிகளை இயேசு நேசிப்பதை சமூகத்தினர் விரும்பவில்லை.

சக்கேயுவின் வீட்டிற்கு இயேசு சென்றமையால் அவனின் வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டது.

சக்கேயு ''ஆண்டவரே என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடு கிறேன். எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால். நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.''

சக்கேயுவின் இக் கூற்றின் மூலம், இயேசு அவருடைய வீட்டிற்கு மாத்திரம் மட்டுமல்லாது அவருடைய வாழ்விற்குள்ளும் வந்தார் என்பது விளங்குகின்றது. இயேசு சக்கேயுவின் வீட்டிற்குச் சென்று எதையுமே பேசாது இருந்தபோதும் சக்கேயு இயேசுவின் முன்னிலையில் காண்பித்த மாற்றம் சக்கேயுவின் மனச்சான்று அவனுடன் பேசியது என்பதை உறுதிப் படுத்துகிறது. அவன் செய்த பெரியதவறு அவனுக்குப் புரிந்தது. இயேசு அவனை ஏற்றுக் கொண்டு அவருடைய வீட்டிற்கு சென்றமையால், அவன் மனமாற்றமடைந்தான். அவன் புதிய மனிதனானான்.

இயேசு : ''இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று''

இயேசுவைக் காண்பதற்கும் அவர் அருகில் செல்வதற்கும் சக்கேயு விரும்பினான் மக்களின் மத்தியில் அவரைப் பார்ப்பதற்கான சவாலை மரத்தின் மீது ஏறி வெற்றி கொண்டான். எவராய் இருந்தாலும் அவரின் அருகில் வருவதை விரும்பினால் இயேசு உடனடியாக அவர்களின் அருகில் வருவார் என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் இயேசு மரத்தின் அருகில் சென்று சக்கேயு எனப் பெயர் சொல்லி அழைத்தார். பின் அவனோடு அவன் வீட்டிற்குச் சென்றார். அவனோடு இயேசு சென்றதன் பிரதிபலன், சக்கேயு மனம்மாறி வாழ்வைச் சீர் செய்து கொண்டான். ''இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று'' என இயேசு கூறினார். நாமும் இயேசு வின் அருகில் செல்வதற்கு விரும்ப வேண்டும். அப்படிச் செய்வதற்கு ஏற்படும் அநேக தடைகளைத் தாண்டிச் செல்வதற்கு முயற்சி செய்யும் போது அவர் உடன டியாக எம்மத்தியில் வருவார். அப்போது எம் வாழ்வில் ஒரு மாற்றம் ஏற்படும். எமது வாழ்வைச் சீர் செய்து கொள்வதற்குத் தூண்டப்படுவோம். இவ்வாறு நாம் அவர் அருகில் இருப்பதை ஆவலோடு எதிர்பார்க்கிறார். இயேசு சக்கேயுவை ஏற்றுக் கொண்டு கூறிய இவ்வார்த்தை அவ்வாறானது. யூத மக்களின் எண்ணமானது தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் தாங்களே என்பதும், ஆபிரகாமின் சந்ததியினரின் உரிமையாளர்கள் எனக் கூறி அதன் மூலம் அவர்களுக்குக் கடவுளின் விடுதலை தானாகவே கிடைத்துள்ளது எனவும் எண்ணினர். ஆனால் இயேசு இவ்வுலகிற்கு வந்தது கடவுளை விட்டுத் தூரமாய்ச் சென்று பாவத்தில் மூழ்கி இருக்கும் மக்களை மீண்டும் கடவுளிடம் கொண்டு வருவதற்காகவும், பாவிகளான சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு இருப்போரை நல்வழியில் நடத்தி சமூகம் மீண்டும் அவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்யவுமே வந்தார். இதன் மூலம் நல்லதொரு சமூகத்தை உருவாக்கும் பணியை நிறைவேற்றினார்.

இயேசு : ''ஏனெனில் இவரும் ஆபிரகாமின் மகனே இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்.''

இயேசு சக்கேயுவை ஏற்றுக் கொண்டு கூறிய இவ்வார்த்தை அவ்வாறானது. யூத மக்களின் எண்ணமானது தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் தாங்களே என்பதும் ஆபிரகாமின் சந்ததியினரின் உரிமையாளர்கள் எனக் கூறி அதன் மூலம் அவர்களுக்குக் கடவுளின் விடுதலை தானகவே கிடைத்துள்ளது எனவும் எண்ணினார்.

ஆனால் இயேசு இவ்வுலகிற்கு வந்தது கடவுளை விட்டுத் தூரமாய்ச் சென்று பாவத்தில் மூழ்கி இருக்கும் மக்களை மீண்டும் கடவுளிடம் கொண்டு வருவதற்காகவும் பாவிகளான சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு இருப்போரை நல்வழியில் நடத்தி சமூகம் மீண்டும் அவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்யவுமே வந்தார். இதன் மூலம் நல்லதொரு சமூகத்தை உருவாக்கும் பணியை நிறைவேற்றினார்.

அன்று சக்கேயு இயேசுவைப் பார்ப்பதற்கு ஆவலாய் இருந்ததைப் போன்று இன்று நம்மிடையே இயேசுவை அறிந்து கொள்வதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் விரும்புவோர் உண்டு. அவ்வாறே தமது தவறுகளை உணர்ந்து மனம் வருந்துவோரும் உண்டு. அப்படிப்பட்டோருக்கு இயேசுவின் வார்த்தைகளை வெளிப்படுத்துவதற்கும் அவற்றை ஏற்றுக் கொண்டு வாழ்வை மாற்றி நல்வழி காட்டுவதும் கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும்.

யோவான்: 8:1-11

பாவியான எனக்கு //
இருப்பது நீர் மட்டுமே

எமது பாவத்திற்கு மன்னிப்புப் பெறும் ஒரே வழி இயேசு மட்டுமே இதைப்பற்றி இச் சிறு பல்லவி எமக்கு உணர்த்துகிறது. அநேக வேளைகளில் நாம் எமது பாவங்களை அறிந்து கொள்ளாமல் இருக்கிறோம். ஆனால் பிறரின் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்கு முன்வருகிறோம். அன்று பாவியான பெண்ணுக்கு கல்லெறிய முயற்சித்த சம்பவத்தில் அவள் இயேசுவின் இரக்கத்திற்கு உட்பட்டது போன்று எமது வாழ்விலும் கடவுளின் இரக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கான செய்தியை ஆராய்ந்து பார்ப்போம்.

ஒரு நாள் காலையில் இயேசு கோவிலுக்கு வந்தார். அங்கிருந்த மக்கள் அனைவரும் அவரிடம் வந்தனர். அவரும் அங்கு அமர்ந்து அவர்களுக்குக் கற்பித்தார். அப்போது மறைநூல் அறிஞரும் பரிசேயரும் போதகரே இப்பெண் விபச்சாரத்தில் கையும்

மெய்யுமாகப் பிடிக்கப்பட்டவள். இப்படிப் பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது மோசே நமக்குக் கொடுத்த திருச்சட்டத்திலுள்ள கட்டளை நீர் என்ன சொல்கிறீர்?

இவ்வாறு அவரிடம் மீண்டும் மீண்டும் கேள்வி கேட்டனர்.

இயேசு - ''உங்களில் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண் மேல் கல் எறியட்டும் ''

இதைக் கேட்ட மக்கள் ஒருவர் பின் ஒருவராக அங்கிருந்து சென்று விட்டனர். இறுதியாக இயேசுவும் அப்பெண்ணும் மட்டுமே அங்கிருந்தனர்.

இயேசு : அம்மா அவர்கள் எங்கே? நீர் குற்றவாளி என்று எவரும் தீர்ப் பிடவில்லையா? நானும் தீர்ப்பு அளிக்கவில்லை நீர் போகலாம். இனி பாவம் செய்யாதீர் என்றார்.

இயேசுவைச் சோதித்துப் பார்ப்பதற்கும் அவர் மேல் குற்றம் சுமத்துவதற்கும் அவர்கள் அவளை அவரிடம் கொண்டு வந்தனர். அவளுக்கு எதிராகக் கூறிய குற்றச்சாட்டை இயேசு நிராகரித்தார். அவளின் பாவத்தை மட்டும் நிராகரித்தார். அவ்வாறே ''இனிப் பாவம் செய்யாதே'' என்றார். இந்தச் சந்தர்ப்பத்தில் இயேசு வெளிப்படுத்தியது பிறரைக் குற்றம் சுமத்துவதற்கு முன்னால் எம்மிடம் காணப்படும் பாவங்களை உணர்ந்து கொள்ளவேண்டும். நாம் பாவிகளாக இருந்து கொண்டு பிறரின் தவறைச் சுட்டிக்காட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.

இவ்வாறு நாம் பாவியை வெறுக்காமல் பாவத்தை மட்டும் வெறுப்பதில் ஈடுபடுவோம். பாவத்தில் வாழ்வோரையும் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டோரையும் அறிந்து கொண்டு அவர்களைத் தேடிச் சென்று

- அனைவரையும் ஒன்றாக அன்போடு ஏற்றுக் கொள்ளுவோம்.
- கடவுளின் மீட்பின் செய்தியை அவர்களிடம் பகிர்ந்து கொள்ளுவோம்.
- இயேசுவை ஏற்றுக் கொள்வதற்கு அவர்களை ஆயத்தம் செய்வோம்.
- பாவத்தை மட்டும் வெறுத்து பாவியை ஏற்றுக் கொண்டு அவர்களுக்குச் சரியான வழியைக் காட்டி அவர்கள் சமுதாயத்தால் கவனிக்கப்படவும் ஏற்றுக்கொள்ளப் படவும் செய்வோம்.
- இறையரசின் வெகுமதிகளை அறிந்து கொண்டு அதன்படி செயற்படுவோம்.

ö\¯Ø£õk

1. இயேசுவின் அன்பையும் இரக்கத்தையும் பெற்று அவரின் வழிகாட்டலைப் பெற்ற 5 நபர்களின் பெயரைத் தருக.

2. உங்களின் ஆலயத்தை விட்டுச்சென்று இதுவரை ஆலயத்திற்கே வராத பிரிவினரை திருச்சபையில் அழைத்துக் கொள்வதற்கு உம்மால் செய்யக் கூடிய இரண்டு வழி முறைகளை விளக்குக.

15 ÁÀ»ø© {øÓ Áõ Ì Ä

இயேசு வாழ்ந்த யூத சமூகத்தில் அதிக துன்புறுதல்கள் மத்தியில் வாழ்ந்த பெண்களின் மீது இயேசு கரிசனை காட்டினார். இயேசு பெண்களுக்காக பரந்த கண் ணோட்டத்தோடு செயற்பட்டார். யூத சமூகத்தில் கைம் பெண்கள் குறைவாகக் கணிக்கப்பட்டனர். அவர்களுக்கு இயேசு கருணை காட்டிய முறைகளை இப்பாடத்தில் ஆராய்வோம்.

லூக்கா 7:11 - 17

குடும்பம் நன்றாக இருப்பதற்கு தாய், தந்தை, பிள்ளைகள் ஆகியோரின் நல்லுறவு அவசியமானது. எதிர்பாராத விதத்தில் ஒரு அங்கத்தவர் விலகிய நிலையில், அல்லது பிரச்சினைகள் உருவாகும் வேளையில் முழுக் குடும்பத்தின் மகிழ்வில் தாக்கம் ஏற்படும்.

குடும்பத்தில் தந்தையை இழக்கும் வேளையில் குடும்ப அங்கத்தவர்களின் எதிர்பார்ப்புகள் அற்றுப்போய், அங்கத்தவர் தனிமை அடைந்து, பொருளாதார வீழ்ச்சி ஏற்படும். அத்தோடு பாதுகாப்பு, பராமரிப்பு போன்ற பிரச்சினைகளும் உருவாகும். இவ்வாறான நிலையில் விதவைப் பெண்கள் யூத சமூகத்தில் ஒதுக்கப்பட்டு ஓரம் கட்டப்படுகின்றனர். அதன் பின்னர் கைம்பெண்களுக்கு பிள்ளைகள் ஒரு பலமாக அமைகின்றனர். அவ்வாறான வேளையில் மகன் விலகிச் செல்கையில் கைம் பெண்ணின் நிலை என்ன? இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை நாம் இங்கு பார்ப்போம்.

வாசிப்போம்
லூக்கா 7:11 - 7

நயீன் ஊர்க் கைம்பெண்ணின் ஒரே மகன் மரணம் அடைந்த வேளையில் அதிர்ச்சியுடன் காணப்பட்ட கைம்பெண்ணுக்கு இயேசு ஆறுதல் வழங்கியதை மேற்படி திருவிவிலிய பகுதி எடுத்துகாட்டுகின்றது.

இயேசு இதனைக் கண்டு கைம்பெண் மீது பரிவு கொண்டு ''அழாதீர்'' என்றார். அருகில் சென்று பாடையைத் தொட்டார். ''இளைஞனே நான் உனக்குச் சொல்கிறேன் எழுந்திடு'' என்றார்.

எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கிய மகனை இயேசு தாயிடம் ஒப்படைத்தார். இயேசு செய்த புதுமையானது வேதனை நிறைந்த கைம்பெண்ணுக்கு பெரும் ஆறுதலாக அமைந்திருக்கும்.



உரு 15.1 மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பப்பட்ட மகனை தாயிடம் ஒப்படைத்தல்

இயேசு

- யூதப் பெண்கள் எதிர் நோக்கிய சவால்களின் மத்தியில் அவர்களுக்கு ஆறுதல் வழங்கினார்.
- கைம்பெண்களில் கரிசனைகாட்டி அவர்களின் துன்பத்தை நீக்கினார்.
- மரணத்தைக் கடந்து செயற்படும் ஆண்டவராக இருந்தார்.

C÷¯_ ³u¨ ö£ sPÒ Gvº÷|õUQ¯ \ÁõÀPÎ À B ÖuÀ ÁÇ[PÀ

துன்ப வேதனையில் வாழ்ந்த கைம்பெண்ணுக்கு இயேசு ஆறுதலை அளித்தார். அவளுடைய வேதனையை நீக்கினார். பலவேளைகளில் பெண்களுக்கு உரிய இடமளித்து சமூகம் ஏற்றுக்கொள்ளுமாறு செய்தார். முன்பாடத்தில் அவதானித்தது போன்று, பாவியான பெண்ணுக்கு கல் எறியும் வேளையில் அவள் மீது இரக்கம்


கொண்டு எதிர்நோக்கிய சவாலின் முன்னால் ஆறுதல் அளித்து அதனை சமூக சவாலாக மாற்றினார்.

C÷¯_ øP®ö£ s o À £›Ä öPõ s k ÷Áuø Ú ø¯ }UPÀ

எதிர்பார்ப்புகள் இழந்து பிரச்சினைகளின் மத்தியில் தனிமை நிலையில் வாழ்ந்த கைம்பெண்ணுக்கு இயேசு பரிவு காட்டினார். மேலும் கைம்பெண்ணின் தனிமை, தாய்மை உணர்வு மற்றும் வேதனையை அவர் விளங்கிக் கொண்டார். தாய்க்காக கருணை உள்ளத்துடன் செயற்பட்டார். மகனுக்கு மீண்டும் வாழ்வு கொடுத்து புதிய தொரு எதிர்பார்ப்பை அவருக்கு அளித்தார். அவளது தனிமை வாழ்வு மீண்டும் வலுப்படுத்தப்பட்டது. அவளது மரணித்த எதிர்பார்ப்புகளுக்குப் புதுவாழ்வு அளித்தார்.

]¢v¨÷£õ®

எமது வாழ்வின் பிரச்சினைகளில் ஆண்டவரைக் கைவிட்டு பல்வேறு மூடநம்பிக்கைகளில் ஆறுதலை நாடிச் செல்கிறோம். ஆனால் அவர் இழந்துபோன எதிர்பார்ப்புகளுக்கு ஆறுதல் அளிக்கின்றார். அவர் எமது தேவைகளின்போது எமக்கு நம்பிக்கையூட்டுகின்றார்.



ö\¯Ø£õk

1. திருவிவிலியத்தில் இறை பரிவு பெற்ற பெண்கள் இருவரின் பெயர்களையும் அவர்களால் பெறும் முன் மாதிரிகளையும் எழுதுக.

2. இயேசுவை முன்னுதாரணமாகக் கொண்டு, இன்றைய பெண்களுக்கு நாம் எவ்வாறு உதவி செய்யலாம்?

16 இறைவனின் கொடையான சிறுவர்கள்

மத்தேயு : 17:14-18 *லூக்கா* : 8:40-42 49-56

இயேசு சிறுபிள்ளைகளை அதிகமாக அன்பு செய்தார். அவர் தம்மிடம் வந்த பிள்ளைகளை அணைத்துக் கொண்டு அவர்களை ஆசீர்வதித்தார். சிறுவர்களின் பெறுமதியைப் பாராட்டிக் கற்பித்தார். துன்பப்படும் சிறுவர்கள் மீது இரக்கம் காண்பித்தார். இவ்வாறு இயேசு சிறுவர்களை அன்பு செய்து இரக்கம் காட்டி செயற்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களைப் பற்றி இப்பாடத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

வாசிப்போம்
மத்தேயு: 17:14-18

ஆண்டவரின் பாதத்தண்டை - முழந்தால் படியிட்டு
இரங்கும்படி வேண்டினானே - வலிப்பு நோய் மகனுக்காய்

ஆண்டவரே இரங்கும் - சுகம் தாரும் மகனுக்கு
என வேண்டினான் தந்தை - ஆண்டவரின் பாதத்தண்டை

தண்ணீரிலும் தீயிலும் வீழ்ந்து - துன்புறும் என் மகனின்
துன்பம் நீங்கி சுகம் பெற - இரங்கி உதவும் ஆண்டவரே

சீடர்களிடம் அழைத்து வந்த - என் மகனின் நோயை
குணமாக்க முடியவில்லை - எனக் கூறினர் அவர்கள்.

அழைத்துவா என்னண்டை - எனக் கூறிய ஆண்டவர்.
தீய ஆவியை வெளியேற்றி - ஒப்படைத்தார் மகனைத் தந்தையிடம்.

வெளியேறிச் சென்றது அந்நோய் - சுகம் பெற்றார் அம்மகனும்
இரக்கம் நிறைந்த இயேசு - சுகம் அளித்தார் சிறுவனுக்கு.

இவ்வாறு தாளலயத்தில் குறிப்பிட்ட வலிப்பு நோய் ஏற்பட்ட சிறுவனின் தந்தை மிகவும் மன வேதனையுடன் இருந்தபோது அவர் இயேசுவின் சீடர்களிடம் சென்று சிறுவனைப் பற்றிக் கூறிச் சுகம் பெற விரும்பினாலும் சீடர்களாலும் குணமாக்க முடியவில்லை. தந்தைக்கு எந்த ஆறுதலும் கிடைக்கவில்லை.

பின்பு தன் மகனை இயேசுவிடம் அழைத்து வந்து சுகம் வேண்டி நின்றபோது அவர் தந்தையின் வேண்டுதலுக்குச் செவிசாய்த்து சிறுவன் மீது இரக்கம் கொண்டு அவனைக் குணமாக்கினார்.

அவதானிப்போம்

- தீய ஆவியின் வல்லமையால் சிறுவன் வலிப்பு நோயினால் துன்புற்றான்.
- முதலாவதாகச் சீடர்களிடம் சுகம் பெற முடியாமல் மீண்டும் இயேசுவிடம் சுகம் பெறுவதற்காகத் தந்தை அழைத்து வந்தார். அதற்குக் காரணம் தந்தை இயேசு விடம் கொண்ட விசுவாசம் ஆகும்.
- சிறுவனிடம் இயேசு காண்பித்த அன்பு, தந்தையின் திடமான விசுவாசம் ஆகியன மூலம் தீய ஆவியை சிறுவனிடம் இருந்து நீக்கி, சுகத்தைப் பெற்றுக் கொடுத்த இயேசு கருணையுள்ளவர் என்பது.
- தீய ஆவிக்கும் கட்டளை இடும் வல்லமை இயேசுவிடம் உள்ளது.
- இயேசுவை அறியாதவர்களுக்கும் அவரைக் கிட்டிச் சேர முடியாத நோயாளி களுக்கும், நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் செய்யும் விண்ணப்பத்திற்கு அவர் செவிசாய்க்கிறார் என்பது.
- உண்மை நம்பிக்கையோடு அநேக புதுமைகளை செய்யமுடியும் என்பதை சீடர்களுக்கு இயேசு கூறியதற்கூடாக உறுதியானது என்பது.

இயேசு இவ்வாறு சிறுவர்களுக்காகச் செயற்பட்ட இன்னுமோர் சந்தர்ப்பத்தைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போம்.

வாசிப்போம்

லூக்கா 8:40-42, 49-56

யாயிர் என்னும் தலைவர் ஒருவர் - இயேசுவிடம் வந்தார்
இயேசுவின் காலில் வீழ்ந்து - (வேண்டினார் இவ்வாறு)

தன் வீட்டிற்கு வருமாறு - வேண்டினார் பணிவோடு
அவ்வாறு செய்தது தன் மகளை - (துன்பத்திலிருந்து காப்பதற்கு)

சாகும் தறுவாயில் தன் - பன்னிரண்டு வயது மகள்
காப்பாற்றுங்கள் இயேசுவே என - (அவரிடம் வந்தான் விசுவாசத்தில்)

இருப்பினும் நினையாத ஒரு - செய்தி கிடைத்தது அவனுக்கு
மகள் இறந்துவிட்டான் என - (அறிய கிடைத்தது அவனுக்கு)

யாயிரைப் பார்த்து இயேசு - கூறினார் இவ்வாறு
அஞ்சாதீர் நம்பிக்கையோடு இரும் - (அவள் பிழைப்பாள் என்றார்)

அனைவரும் பிள்ளைக்காய் - அழுது புலம்பிக் கொண்டிருக்கக்
கூறினார் இயேசு இவ்வாறு - (அழாதீர்கள் அவள் இறக்கவில்லை
என்றார்)

பிள்ளை இறக்கவில்லை - உறங்குகின்றாள் என்றார் இயேசு.
அதைக் கேட்ட அனைவரும் - (கேலியாய் நகைத்தார்கள்)

அவளது கையை பிடித்த இயேசு - சிறுமியே விழித்திடு! என்றார்
உயிர் மூச்சு திரும்பி வர - (மீண்டும் சிறுமி உயிர்பெற்றாள்)

இயேசு தாய் தந்தையை - பார்த்துக் கூறினார் இவ்வாறு
நடந்தது எதையுமே - (சொல்ல வேண்டாம் எவருக்கும்).

யாயிர் தனது மகளைக் குறித்து இயேசுவிடம் கூறியபோது அவர் அவனுடைய வீட்டிற்குச் சென்றார். பிள்ளையின் பெற்றோரையும் அவரின் சீடர்களையும் அழைத்துக் கொண்டு, பிள்ளை இருந்த இடத்திற்குச் சென்ற இயேசு அவளுக்காக அன்போடு செயற்பட்டு அவள் மீண்டும் வாழ்வதற்காக உரிமையைப் பெற்றுக் கொடுத்தார். மகளுக்காகத் தந்தையின் வேண்டுதல் பலன் கொடுத்தது. சுகம் பெற்ற சிறுமியை அவரின் குடும்பத்தாரிடம் ஒப்படைத்தார். சிறுமியின் உயிரை மீண்டும் பெற்றுக் கொடுத்து அக்குடும்பத்தின் வேதனைகளை நீக்கி சந்தோஷத்தையும் ஆறுதலையும் அளித்தார்.

அவதானிப்போம்

- *இங்கு நிகழ்ந்தது, மரணத்தறுவாயில் இருந்த தனது ஒரே மகளின் சுகத்திற்காக இயேசுவிடம் தந்தை வேண்டிய விசுவாச விண்ணப்பம்.*
- *இருப்பினும் அந்த எதிர்பார்ப்பு இல்லாமல் போகும்படியாக இயேசு பிள்ளை யிடம் வரும் முன்பே அவள் இறந்துவிட்டாள் என்ற செய்தி கிடைத்தது.*
- *''அஞ்ச வேண்டாம், நம்பிக்கையோடு இரு அவள் சுகம் பெறுவாள்.'' என்ற இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கைவைத்த அனைவரும் பிள்ளையின் அருகில் சென்றனர்.*

- பிள்ளையின் மீது இயேசு கொண்ட அளவில்லா அன்பினாலும், தந்தையின் விசுவாசத்தாலும் மரித்த பிள்ளையை அவர் மீண்டும் உயிர்ப்பித்துக் கொடுத்தார்.
- எமது அனைத்து எதிர்பார்ப்புகளும் அற்றுப் போகும் சந்தர்ப்பத்திலும் கூட, இயேசுவில் கொள்ளும் நம்பிக்கை மூலம் இயேசு பெரிய புதுமைகளைச் செய்வார் என்பது.

சிந்திப்போம்

மேலே பார்த்த இரு நிகழ்விலும் அப்பிள்ளை பெற்ற சுகத்தைப் போன்று மீண்டும் வாழ்வைப் பெற்றுக் கொள்வதற்குச் சந்தர்ப்பமாக அமைந்தது பிள்ளையின் தந்தையர்கள் இருவரும் இயேசுவின் மீது கொண்ட அளவில்லா விசுவாசமும் நம்பிக்கையுமாகும். இயேசுவின் மீது கொள்ளும் விசுவாசத்தாலும் நம்பிக்கையாலும் அவர் பிள்ளைகளாகிய நம்மை அன்பு செய்கின்றார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். எமது அனைத்துத் தேவைகளையும் விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும் இயேசுவிடம் கொண்டு செல்வோம். சிறுவர்களை அதிகமாக அன்பு செய்யும் ஆண்டவர் எமக்கு ஆறுதல் அளிப்பதற்கு மிகுந்த ஆவலோடு காத்திருக்கின்றார்.

செயற்பாடு

1. இயேசு சிறுவர்களுக்கு அன்பு செலுத்தி கூறிய 2 கூற்றுகளைக் குறிப்பிடுக.
2. சிறுவர்களாகிய உங்களிடம் இருக்கும் எதிர்கால எதிர்பார்ப்பு 2 ஐக் குறிப்பிட்டு அதை நிறைவேற்றுவதற்கு எடுக்கக் கூடிய சரியான வழிமுறைகளை எழுதுக.

17 A øÚÁ ¸US® |À»õ]

மனுக்குலம் அனைத்திற்கும் பூரண விடுதலையை அளிப்பதே இயேசுவின் பணியின் அடிப்படையாகும். அதற்காக இறை யரசை அறிமுகம் செய்வதோடு அதனை உரிமையாக்கிக் கொள்வதற்காகத் தேவையான வழிகாட்டலைத் தந்துள்ளார்.

தொழு நோயாளனையும், ஊமையும் செவிடுமானவனையும் சுகப்படுத்திய சம்பவத்தினூடாக அவர்களுக்கு சரீரத்தில் பெற்றுக் கொடுத்த சுகத்தைக் கடந்து, இறை செய்தியையும் வெளிப்படுத்தினர் என்பதை இப்பாடத்தின் மூலமாக அறிந்து கொள்வோம்.

மத்தேயு : 8:1-4
மாற்கு : 7:31-37

இயேசு வாழ்ந்த யூத சமுதாயத்தில் பல காரணங்களினால் சில மக்கள் பிரிவினர் ஏற்றுக் கொள்ளப்படாமல் ஒதுக்கப்பட்டிருந்தனர். அவர்களில் தொழுநோயாளர்கள் ஒதுக்கப்பட்டவர்களில் அதிகம் காணக்கூடிய ஒரு குழுவினராக இருந்தனர். இவ்வாறு சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட அவர்கள் மனதளவிலும், சரீரத்திலும் துன்பத்திற்குள்ளாகினர். இவ்வாறு பலவிதமாகத் துன்புற்ற மக்களுக்கு இயேசு சுகத்தைப் பெற்றுக்கொடுத்து ஆறுதல் அளித்தார். இயேசுவிடம் வந்த நோயாளர்கள் சுகம் பெறுவதற்கு அவர் மேல் கொண்ட விசுவாசம் முக்கிய காரணமாகும்.

இவ்வாறு விசுவாசத்தோடு சுகம் வேண்டி வந்த தொழு நோயாளி இயேசுவிடம் வந்து அவரின் முன்னால் பணிந்து கொண்டு பின்வருமாறு வேண்டிக் கொண்டான்.

''ஐயா, நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்'' என்றார் இயேசு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு, ''நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக'' என்றார். உடனே அவரது தொழுநோய் நீங்கி சுகமடைந்தார். இயேசு அவரிடம் இதை எவருக்கும் சொல்லவேண்டாம், கவனமாயிரும். ஆனாலும் நீர் போய் உம்மைக் குருவிடம் காட்டி மோசே கட்டளையிட்டுள்ள காணிக்கையைச் செலுத்தும் என்றார்.

மத்தேயு : 8:2-4

''நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்'' எனக்கூறிய இவ்வார்த்தையில் இருந்து இயேசுவின் மீது கொண்ட ஆழமான விசுவாசமும் நம்பிக்கையும் வெளிப்படுகின்றது. அத்துடன் சுகம் பெறுவதற்கு இயேசுவின் விருப்பம் மட்டுமே போதுமானது எனக் கூறினான்.

யூத சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட பிரிவினருக்கிடையிலே தொழுநோய் ஏற்பட்ட மனிதர்கள் சரீரத்திலும் மனதிலும் துன்பத்தை அனுபவித்தனர். முதலாவதாக தொழுநோயினால் அவர்கள் அனுபவித்த துன்பங்கள் இரண்டாவதாக தொழு நோயாளர்களோடு இருப்பது தீட்டானது என எண்ணி சமுதாயத்தில் ஒதுக்கப் பட்டவர்களாய் இருந்து அவர்கள் துன்பங்களை அனுபவித்தார்கள். எனவே அவர்கள் சுகம் பெறுவதை விட தூய்மை பெறுவதையே விரும்பினர். எனவே தான் தொழு நோயாளி தன்னைத் தூய்மைப்படுத்தும்படி வேண்டினான்.

யாராவது ஒருவன் தொழுநோயாளியைத் தொட்டால் அவன் தீட்டுப்பட்டவன் என யூதர்கள் கருதினர். எனினும், இயேசு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு சுகமாக்கினார். இவ்வாறு யூத சமுதாயத்தில் நிலவிய தடைகளை இயேசு நீக்கினார் என்பதைச் செயல் மூலமாகக் காண்பித்தார். அவரின் இரக்கத்தினால் தூய்மை பெறலாம் என்பது இங்கு தெளிவாகின்றது. ஒரு நாளும் ஒருவரும் தொழு நோயாளரைத் தொட முடியாது. ஆனால் இயேசு அதைச் செய்து மனிதர் மீது காண்பித்த இரக்கத்தை வெளிப்படுத்தினார்.

இயேசு தொழு நோயாளியைச் சுகப்படுத்தி ''இதை எவருக்கும் சொல்ல வேண்டாம், கவனமாய் இரும்'' எனக் கூறினார். இதற்குக் காரணம் இயேசு புதுமைகளினூடாக மக்களைத் தம்மிடம் வரவழைத்துக் கொள்வது அவசியமில்லை என்பதே. இருப்பினும் இயேசு தொழுநோயாளியைச் சுகப்படுத்தி அவன் மீண்டும் சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படவும் இதன் மூலம் அவனுடைய வாழ்க்கைக்கு உதவி அளிப்பதற்கும் செயற்பட்டார். மேலும் இயேசு அவனை ''குருவிடம் தன்னைக் காட்டி மோசே கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்தி நீ நலமடைந்ததை உறுதிப்படுத்து'' எனக்கூறி யூத சமுதாயத்தின் சட்டத்திற்கு ஏற்றவாறு செயற்பட்டதன் மூலம் தூய்மை பெறுவதும் சட்டத்திற்குட்பட்டது என்பதை வெளிப்படுத்தினார். நோயாளி தீட்டு நீங்கி, தூய்மை பெற்றார் என்பதற்கு

அடையாளமாக மோசேயின் கட்டளைப்படி காணிக்கை செலுத்தி சான்றைப் பெற்றுக்கொள்வது அவசியமாய் இருந்தது.

இவ்வாறு இயேசு மக்களுக்குத் தேவையான சரீரப்பிரகாரமான சுகத்தையும் மனதளவிலான சுகத்தையும் பெற்றுக் கொடுத்து அவர்களின் வாழ்க்கைக்கு உதவி புரிந்து வந்தார்.

வாசிப்போம்
மாற்கு:7:31-37

காது கேளாதவரும் திக்கிப் பேசுபவருமான ஒருவரைச் சிலர் அவரிடம் கொண்டு வந்து அவர் மீது கை வைத்து குணமாக்குமாறு அவரை வேண்டிக் கொண்டனர்.

மாற்கு:7:32

இங்கு நோயாளி சுகமாவதற்கு இயேசு நோயாளியின் காதுகளில் தம் விரல்களை இட்டு அவர் நாவுகளைத் தொட்டது மிகவும் முக்கியமான சம்பவமாகும். ஏனெனில் நோயாளிகளைத் தொடுவது தீட்டு எனக் கருதி அக்கால யூத சமுதாயத்தில் மக்கள் இவர்களை ஒதுக்கி வைத்தனர். இயேசு இந்த சந்தர்ப்பத்தில் சமூகக் கட்டுப்பாடு களைத் தகர்த்து மக்களின் அருகில் சென்று அவர்களுக்கு உதவி அளித்தார்.

பிறகு வானத்தை அண்ணார்ந்து பார்த்து 'எப்பத்தா' ('திறக்கப்படு')எனக்கூறினார். நோயாளி சுகமாவதற்கு ''வார்த்தை'' வல்லமை நிறைந்ததாய் இருந்தது. இதன் மூலம் இயேசு மெய்யான வைத்தியர் என்பது உறுதியாகின்றது.

இவ்வாறு தொழுநோயாளியைப் போல ஊமையும் செவிடுமானவருக்குச் சுகத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவர் வார்த்தையைப் போல் செயலையும் பயன்படுத் தினார்.

இயேசு தொழுநோயாளியைப் போன்று ஊமையும் செவிடுமானவருக்குக் கூறியது. ''இப் புதுமைகளை எவருக்கும் சொல்ல வேண்டாம்'' என்று, ஆனால் இயேசு வின் இந்தச் செயற்பாட்டினால் அவர் மகிமையடைந்தார். இருப்பினும் அவரது நோக்கமாய் இருந்தது மனிதர்களின் தேவைகளின் முன்னால் அவர்களுக்கு உதவியும் ஆறுதலும் அளிப்பதேயாகும்.

இவ்வாறு நாமும் எமது வாழ்வின் துன்பங்கள் பிரச்சனைகள் மத்தியில் இயேசுவின் உதவியை வேண்டி சமூகமாகவும் தனியாகவும் இயேசுவிடம் செல்வோம். அவர் ஆறுதலும் பெலனும் தருவார். பிறரின் நலனுக்காகச் செயற்படுவோம். இவ்வாறு விசேடமாகக் குரல் கொடுக்க முடியாதவர்களின் மத்தியில் அவர்களின் தேவைகளை இயேசுவின் பாதத்தில் சமர்ப்பிப்போம். அப்போது இயேசு நம் அருகில் இருக்கிறார் என்பதைச் சமூகமாகவும் தனியாகவும் நாம் உணர்ந்து கொள்ளலாம். ஆண்டவர் எமக்களித்த நன்மைகளைப் பற்றி சமூகமாகவும் தனிமையாகவும் நன்றி கூறிச் சான்று பகர்வோம்.

ö\¯Ø£õk

1. திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இயேசுவால் சுகம் பெற்ற இன்னும் மூவரின் பெயரைக் குறிப்பிடுக.

2. உமது நண்பன் அல்லது நண்பி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் போது
   - அவர்களின் சுகத்திற்காகவும்
   - மருத்துவர், தாதிமார் ஏனைய ஊழியர்களுக்கு வழிகாட்டவும்
   - பெற்றோரின் ஆறுதலுக்காகவும் மன்றாடல் ஒன்றை எழுதுக.

18 ©Û u÷|¯®

இயேசுவுக்கு ஆற்றும் பணி என்பது பிறருக்குப் பணிசெய்து நிலைவாழ்வு பெற்றிடுதலாகும். கிறிஸ்தவராகிய எமது வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. தமது வாழ்வு மற்றும் அர்ப்பணிப்பு மூலமாக இலங்கை வாழ் மக்களுக்கு மகத்தான இறை பணிசெய்த இருவரின் வாழ்வையும் பணியையும் இங்கு ஆராய்வோம்.

எம் ஒவ்வொருவருக்கும் இறைவனால் கிடைத்துள்ள ஆற்றல், அவ்வாற்றலைப் பயன்படுத்தி சமூகத்துக்குப் பணி செய்வதற்கான அழைப்பு பலதரப்பட்டவை ஆகும். அழைப்பை அறிந்து அதற்கு ஏற்ற வகையில் வாழ்வை அமைத்துக் கொள்ளல் வேண்டும். அத்துடன் தமது ஆற்றல்களுக்கு ஏற்பச் செயற்பட்டு பிறர் நலனுக்காக வாழ்வை அர்ப்பணித்தல் முக்கியமானது.

இலங்கை வாழ் மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு செயற்பட்ட

- அருட்தந்தை மைக்கல் றொட்றிகோ
- சேவக சாமுவேல் செல்வரத்தினம்

என்பவர்களின் வாழ்வை ஆராய்வோம். அவர்களது வாழ்வில் தமது ஆற்றல்களைப் பயன்படுத்தி, வாழ்வின் முன்மாதிரிகளினால் சமுதாயத்தைப் பலப்படுத்தும் வண்ண மாக நிறைவேற்றிய பணிகளை அறிவோம்.

A ¸ mu¢ø u ø©UPÀ öµõmÔ÷Põ

அருட்தந்தை மைக்கல் றொட்றிகோ அவர்கள் கத்தோலிக்க மத குருவானவர். அவர் மொனராகல, பிபில, புத்தல, வெள்ளவாய பகுதிகளில் விவசாய மக்கள் மத்தியில் சென்று அவர்களது வாழ்வின் பிரச்சினைகளை தேடிக் கண்டுபிடித்ததோடு விவசாயத் தொழில் செய்யும் மக்களின் உள்ளத்தை நன்கு அறிந்துகொண்டார். அவர்களின் சமூக வாழ்வை அறிந்துகொண்டு அதற்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டு அவ்விவசாய மக்களின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்.

அக்காலத்தில் விவசாயம் செய்யும் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் சில

- ♦ பயிரிடுவதற்கு போதியளவு நீர் வசதி இல்லாமை.
- ♦ பயிர்ச் செய்கைக்குத் தேவையான அறிவின்மை.
- ♦ நோய்கள் பரவியமை (மலேரியா போன்ற கொள்ளை நோய்).
- ♦ சூழல் பிரச்சினை ஏற்பட்டமை (வறட்சி).
- ♦ தொழிலாளருக்கு அதிகாரிகளினால் துன்பம் உருவாகியமை.
  போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அவர்கள் முகம்கொடுத்த பிரச்சினைகளில் அவர் அவர்களில் கரிசனை காட்டினார். தனது அழைப்பை உணர்ந்து மக்களில் ஒருவராக வாழவேண்டுமென அறிந்து கொண்டார். மக்களின் பிரச்சினைகளில் தீர்வுக்கான வழியைக் காட்டிய அவர், கிறிஸ்தவ பக்தனாக, கிறிஸ்தவ மறையில் விடை தேட முயன்றார். ''மானிடரின் வாழ்வை அண்மியுங்கள் அப்போது இயேசுவின் தொனி கேட்கும்'' என்பது அவரது நம்பிக்கை ஆகும். அதனால் அவர் பேச்சால் மறை ஆற்றுவதை விட, நடைமுறைச் செயற்பாடுகளில், மதச் செயற்பாடுகளில் ஈடுபடும் படிமுறைகளை மேற்கொண்டார்.

அவர் துன்புறும் மக்களுக்காகக் குரல் கொடுக்க முன்வந்தார். அவர்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டார். நாட்டில் அரசியல் நிலை குறித்து கருத்துக்களைக் கூறினார். அரசியல்வாதிகள் நாட்டு மக்கள் முகம்கொடுக்கும் எல்லா பிரச்சி னைகளையும் அறிந்திருக்க வேண்டும் எனக் கூறினார்.

பசியால் துன்புறும் மக்களின் நலிந்த சரீரத்தைப் பார்த்து அவர் ''சமுதாயத்துக்கு விடுதலை இவர்களில் உள்ளது. புனித சாந்தியும் இவர்களுக்கு உள்ளே உள்ளது. இறைவனும் இவர்களுடன் இருக்கின்றார். திருவிவிலியத்தில் காணப்படும் ஆழமான கருத்துள்ள இறைவார்த்தைகள் நடைமுறைப்படுத்த வேண்டும்'' என்றார். இந்த கருத்துக்கள் அவர் மக்களுடன் வாழ்ந்த விதம் குறித்து எமக்கு அறிவிக்கின்றன.

பெலவத்தயில் புத்தல அலுகலவிட கிராமத்தில் கிராமவாசியாக குடிசை மண் வீட்டில் வாழ்ந்து, மக்களுடன் தோளுடன் தோள் நின்று உதவிய கிறிஸ்தவன் என்று பறை சாற்றாது, கிறிஸ்தவ பண்பிற்கு ஏற்ப அவர் வாழ்ந்தார்.

நாட்டில் கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், தேசிய பண்பாடுகள் காப்பாற்றப்பட வேண்டும் எனவும் நம்பினார். சமயங்களின் அடிப்படைக் கோட் பாடானது மக்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு விடுதலை நிலையை அடைய வேண்டும் என்பதே என்று அவர் வலியுறுத்தினார்.

பௌத்த மத போதனைகளை நன்கு அறிந்து, பௌத்த மத குருக்களுடன் நெருங்கிய உறவு வைத்திருந்தமையால் அவர் சில கிறிஸ்தவர்களின் குற்றச்சாட்டுகளுக்கு

ஆளானார். அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் தலைவர்கள் உள்நாட்டு வெளிநாட்டுச் செல்வந்தர்களை ஆதரித்து காக்கும் விதத்தில் செயற்பட்டனர். அத்தகைய செயற் பாடுகளுக்கு எதிராக அருட் தந்தை ரொட்ரிகோ அவர்கள் குரல் கொடுத்தார். அவரது வாழ்க்கை முறை மற்றும் எதிர்நோக்கு என்பன அரச அதிகாரிகளின் எதிர்ப்பை சம்பாதிக்க வழிவகுத்தன. ஒரு சந்தர்ப்பத்தில் அவர் இறைவழிபாட்டில் திருவிருந்து பகிரும் வேளையில் கொலையாளி ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரின் பிரிவு இலங்கை நாட்டுக்கும் கிறிஸ்தவ திருச்சபைக்கும் பேரிழப்பாகும்.

÷\ÁU \õ • ÷ÁÀ ö\ÀÁµz v Ú®

சாமுவேல் செல்வரத்தினம் எனும் அவர் பிற்காலத்தில் சேவக் செல்வரத்னம் என்ற பெயரில் பிரபல்யம் அடைந்தார்.

இவர் இந்தியாவில் செரம்பூர் இறையியல் கல்லூரியில் பட்டம் பெற்றார். அவர் இந்தியாவில் இருந்த வேளையில் விடுமுறை நாட்களில் திருப்பதி, கிறிஸ்தவ ஆச்சி ரமத்தில் காலத்தைச் செலவிடுவது வழக்கம். அங்கிருந்த மறை அறிஞர்களிடம் கற்றுக் கொண்டார்.

அவர் இலங்கை வந்து, இலங்கைத் திருச்சபையில் திருப்பணியாளாராக எட்டு வருடங்கள் பணியாற்றினார். யாழ்நகரில் சேவை செய்யும் வேளையில் இந்தியாவில் காணப்பட்ட ஆச்சிரமத்தைப் போன்று இலங்கையிலும் ஆச்சிரமம் ஆரம்பிக்க வேண்டும் என்பதே அவரது நோக்கமாக இருந்தது. இந்திய ஆச்சிரமங்களில் இருந்து எளிமையாக வாழும் தன்மையை அவர் பெற்றுக்கொண்டார். அது மானிடரின் ஆன்மீக வளர்ச்சிக்கு அவசியமானது. அதேவேளை கிறிஸ்தவ ஆச்சிரமத்தின் சிறப்புத் தன்மையான ஆச்சிரமத்தின் சுற்றுச்சூழலில் வாழ்பவர்களுக்குப் பணியாற்றுவதை அதிகம் வரவேற்று நடைமுறைப்படுத்தினார். இலங்கையின் வடபகுதியில் ஆச்சி ரமத்தை ஆரம்பிக்க அவர் விரும்பினார். ஆனால் சபைத் தலைவர்கள் ஆரம்பத்தில் விருப்பம் தெரிவிக்கவில்லை. எனினும் 1939 இல் சுன்னாகம் பிரதேசத்தில் ஆச்சிரமம் ஆரம்பிக்க நிலம் விலைக்கு வாங்கப்பட்டது. ஆச்சிரமத்தின் கட்டுமானப் பணிகள் பல இவராலேயே நிறைவேற்றப்பட்டன.

ஆச்சிரம வேலைகள் நிறைவடைந்தவுடன் வழிபாட்டுக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. கீழைநாட்டு முறைப்படி வழிபாடு இடம்பெற்றது. பல இடங்களிலிருந்து கிறிஸ்தவர் வருகை தந்து தியானம், ஜெபம் என்பவற்றில் ஈடுபட்டு ஆன்மீகப் பண்புகளை வளர்த்தனர்.

பிற்காலத்தில் இது கிறிஸ்தவ சேவை ஆச்சிரமம் என அழைக்கப்பட்டது. இது துன்புறும் வறிய மக்களுக்கு பாதுகாப்பும் பராமரிப்பும் வழங்கும் சேவை இடமாக்கப்பட்டது. எவரும் வந்து தங்கும் இடமாக அமைந்தது.

ஆரம்பத்தில் அங்கு ஆற்றப்பட்ட பணிகள் சில,

- வறிய ஆண் பிள்ளைகள் ஆச்சிரமத்தில் தங்கி பாடசாலை செல்லும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
- அவர்களின் செலவுகளை ஆச்சிரமம் ஏற்றது.
- சயரோகம் நோயாளரின் மருத்துவசாலை, முதியோர் இல்லம் போன்ற இடங்களுக்குச் சென்று அங்குள்ளோருக்கு உதவிகள் செய்தனர்.
- பாடல்கள் பாடி விநோதமாக துன்பத்திலிருந்தோரை ஆறுதல்படுத்தினர்.
- 1958 இல் மட்டக்களப்பு கிரான் எனும் இடத்தில் இன்னுமொரு ஆச்சிரமம் நிறுவினார்.

பிற்காலத்தில் ஆச்சிரம நிலைப்பாட்டுக்குப் பலர் உதவி செய்தனர். ஆச்சிரம ஆரம்பத்துக்கு வழிவகுத்த முதன்மைத் திருப்பணியாளரான சேவக் செல்வரத்தினம் அவர்களின் பணி போற்றப்படத்தக்கது. அவரது எளிமை வாழ்வு, தூய்மையான நடத்தை, அர்ப்பணிப்புடன் ஆற்றிய பணிகள், காரணமாக கிறிஸ்தவ உலக மாநாடுகளுக்கு வழிபாடு நடாத்தும் பொறுப்பு அவருக்கு ஒப்படைக்கப்பட்டது. கிறிஸ்தவ ஆச்சிரமத்தின் தலைவர் கிறிஸ்து என்பது அவரது கருத்தாகும்.

பலதரப்பட்ட பிரச்சினைகளின் மத்தியிலும் இறைவனைத் துதிபாடி மகிழ்வான சுபாவத்துடன் பணிசெய்தல் அவரில் பிரதிபலித்த பண்பாகும். இவர் 1973 இல் இறையடி எய்தினார்.

மேற்படி தகவல்களுக்கு ஏற்ப இரு திருப்பணியாளர்களும்

- எளிமையான வாழ்வு வாழ்ந்தனர்.
- மக்கள் சுயமுயற்சியில் முன்னேற தேவையான வழிகாட்டலையும் அவர்களது வாழ்வை மேம்படுத்தவும் வழிகாட்டினர்.
- தமது வாழ்வின் முன்மாதிரியால் கிறிஸ்துவின் அன்பைக் காணும் விதத்தில் தமது வாழ்க்கை முறையை அமைத்தனர்.
- சமூகப்பணியில் ஈடுபட்டு, தமது காலம், உழைப்பு, பணம் என்பவற்றை மக்கள் பணிக்கு அளித்து அனைவரையும் சமமாகக் கருதி செயற்பட்டனர்.

இவ்வாறு நாமும் பிறர் வாழ்வை மேம்படுத்துமுகமாக, எளிமையான வாழ்வை வாழ்ந்து, எமது வாழ்வை அர்ப்பணித்து உதவி செய்து வாழ்வோம்.

நாட்டு மக்களின் பிரச்சினை, சிக்கல்களில் எம்மால் இயன்றளவு நற்செயல் புரிந்து, அனைவரினதும் உயர்ச்சிக்காக எமது வாழ்வை அர்ப்பணிப்போம்.

ö\¯Ø£õk

1. இறையழைப்பை அறிந்து நாட்டு மக்களுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்த வேறு நபர் ஒருவர் குறித்து சிறுகுறிப்பு எழுதுக.

2. அருட்தந்தை மைக்கல் றொட்றிகோ, சேவக் செல்வரத்தினம் என்பவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு கிறிஸ்தவ பிள்ளை என்ற ரீதியில் துன்பம் அனுபவிக்கும் பிள்ளைக்கு உம்மால் செய்யக்கூடியவைகள் யாவை?

19 £ g \õP© [PÒ

மனிதனின் மீட்புக்கான இறைவனின் திட்டம் திருவி-விலியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதில் அடங்கியுள்ள செய்தியானது நிலையானது. திருவிவிலியமானது பழையஏற்பாடு, புதியஏற்பாடு என இரு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. "பஞ்சாகமம்" என்ற பெயரில் அறிமுகமான பழையஏற்பாட்டின் முதல் ஐந்து நூல்களையும் பற்றி இங்கு ஆராய்வோம்.

கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் காணப்படும் ஆழமான தொடர்பை திருவிவிலியம் வெளிப்படுத்துகின்றது. இறை ஏவுதலால் எழுதப்பட்ட திருவிவிலியம் உலகின் அனைத்து நாடுகளிலும் வாழும் கிறிஸ்தவ பக்தர்களின் நம்பிக்கையின் அடிப்படையாகும். இதனால் திருவிவிலியம் கிறிஸ்தவர்களின் புனித நூலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

திருவிவிலியமும் பஞ்சாகமமும்

திருவிவிலியம் {
- பழைய ஏற்பாடு - 39 நூல்கள்
  முதல் ஐந்து நூல்களும் பஞ்சாகமம் என அழைக்கப்படும்.
- புதிய ஏற்பாடு - 27 நூல்கள்.

திருவிவிலியத்தில் பழையஏற்பாடு கிறிஸ்து பிறப்பின் முன் இஸ்ரயேலரின் அனுபவத்தின் ஊடாக கடவுளை அறிந்து கொண்ட முறைகளைக் குறிப்பிடுகின்றது. பழையஏற்பாட்டில் அடங்கியுள்ள முப்பத்தொன்பது நூல்களில் முதல் ஐந்து நூல்களும் பஞ்சாகமம் என அழைக்கப்படுகின்றது.

கடவுள் ஆபிரகாமை அழைத்து, இஸ்ரயேல் மக்கள் மூலமாக உலகத்தை மீட்பதற்காகச் செயற்பட்ட முறையை பஞ்சாகமத்தில் நாம் காண்கிறோம். அதற்காக இஸ்ரயேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து மீட்டு, வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் சென்ற பயணத்தில் அவர்கள் கடவுளின் மகிமையை அனுபவித்த அவ்வனுபவங்கள் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன.

பஞ்சாகமத்தில் இஸ்ரயேல் மக்களின் நீதிச்சட்டங்களும் அடங்கியுள்ளன. எனவே இஸ்ரயேல் மக்களினூடாக இதைப் பூமியில் நிறைவேற்ற வேண்டியது கடவுளின் விருப்பமாய் இருந்தது. பஞ்சாகமம் எபிரேய மொழியில் 'தோரா' என்று அழைக்கப்படுகின்றது.

பஞ்சாகமத்தில் இஸ்ரயேலரின் நீதிச்சட்டங்களின்படி அம்மக்களின் வாழ்க்கை கட்டியெழுப்பபட்டது. அந்நீதிச்சட்டங்கள் ஒவ்வொருவரின் உரிமையையும் பாது காக்கும் சாதரணமக்கள் சமூகம் உருவாகுவதற்கு ஏற்படுத்தப்பட்டதாகும். பஞ்சா கமங்களில் பலவித சம்பவங்களின் ஊடாக இஸ்ரயேல் மக்கள் இறை மகிமையை அறிந்து கொண்ட முறையை ஆராய்ந்து பார்ப்போம்.

1. தொடக்கநூல்

- மனித படைப்பும் பாவத்தில் வீழ்தலும்.
- காயீன் ஆபேல் நோவா கால வெள்ளப்பெருக்கு பாபேல் கோபுரம் போன்ற கதைகளின் செய்தி.
- குலமுதுவர்களான ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு யோசேப்பு என்போரின் விசுவாச செயற்பாடு.
- யாக்கோபின் பரம்பரை எகிப்தில் குடியேறச் சென்றமை.

2. விடுதலைப் பயணம்

- இஸ்ரயேல் மக்கள் அடிமைப்பணி செய்தல்.
- இறைதந்தையின் வழிகாட்டலின் மூலம் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுதல்.
- மோசேயின் தலைமைத்துவத்தில் செங்கடலைக் கடந்து வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிச் செல்லும் பயணம்.
- சீனாய் மலையில் பத்துக்கட்டளையைப் பெறுதல்.
- இஸ்ரயேல் மக்களாக உடன்படிக்கைக்கு உட்படுதல்.

3. லேவியர்

- மக்களின் வழிபாடு பற்றிய நீதி.
- குருத்துவப் பணிக்கு அர்ப்பணிக்கும் நீதி.
- தூய்மை, தூய்மையற்ற சம்பிரதாயங்கள்.
- பலவித விழாக்களை அனுசரித்த சம்பிரதாயங்கள்.

4. எண்ணிக்கை

- வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி இஸ்ரயேல் மக்கள் அருகில் சென்றமை.
- யோர்தான் நதியைக் கடப்பதற்கு முன் கருத்துக்களை வழங்குதல்.
- வாக்களிக்கப்பட்ட நாட்டில் பன்னிரெண்டு கோத்திரங்கள் குடியேறுதல்.

5. இணைச்சட்டம்

- ♦ பத்துக் கட்டளைகளையும் ஏனைய நீதிமுறைகளையும் கடைப்பிடித்தல்.
- ♦ மோசேயின் மரணம்
- ♦ இறைமக்களின் தலைவனாக யோசுவாவை நியமித்தல்.

இவ்வாறு இஸ்ரயேல் வரலாற்றில் அவர்களோடு கடவுள் செயற்பட்ட முறை பஞ்சாகமத்தின் மூலம் வெளிப்படுகின்றது.

இறை ஏவுதலால் பஞ்சாகமம் எழுதப்பட்டது.

கடவுள் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு நபர்கள் மூலமாக வெளிப் படுத்தப்பட்ட இறை செய்தியானது பஞ்சாகமங்களில் அடங்கியுள்ளது. அச்செய்தி ஆனது கடவுளின் வழிகாட்டலின் கீழ் ஆசிரியர்களின் மூலமாக எழுத்தாக்கம் பெற்றது. பஞ்சாகமம் வெவ்வேறு அடிப்படை மூலகாரணங்களினால் எழுதப்பட்டது.

இதில் பிரதான ஆசிரியர் இறைவனும் துணை ஆசிரியர் மனிதனும் என்பதை அறிய முடியும். அதாவது இறைவனின் வெளிப்பாட்டின் கீழ் மனித ஆசிரியர்கள் தமது அனுபவத்தினூடாக பஞ்சாகமத்தை எழுதினார்கள்.

- இறை ஆவியின் ஏவுதலின் மூலமாக ஆசிரியர்களினால் எழுதப்பட்ட இறை செய்தியை பெற்றுக்கொள்வதும் அதை வாசிப்பதும் நாமாவோம்.
- நாம் பெறும் இறைசெய்தியை சமூகத்திற்குள் செயற்படச் செய்வது எமது பொறுப்பாகும்.
- அனுதினமும் திருவிவிலியத்தை வாசித்து அதில் ஒரு செய்தியை எமது அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாகக் கொள்வோம்.

பஞ்சாகமத்தில் அடங்கிய நீதிச்சட்டங்கள் இரு பிரிவுகளைக் கொண்டது.

1. பத்துக் கட்டளைகள் (சீனாய் உடன்படிக்கை)
2. பத்துக்கட்டளைகளை விட இணைக்கப்பட்ட வேறு நீதிச்சட்டங்கள்.

வாசிப்போம்
விடுதலைப்பயணம் :20:1-17

பஞ்சாகமத்தில் அடங்கிய இஸ்ரயேலரின் நீதிச் சட்டத்தில் காணப்படும் பத்துக் கட்டளைகள் மிகவும் முக்கியமானபகுதியாகும். பத்துக் கட்டளைகளின் படிப்பினைகளை எமது வாழ்விற்கு ஏற்றதாக அமைத்துக் கொண்டு இறைமகிமைக்காக எம்மால் பின்பற்றக் கூடிய செயல்முறைகளை ஆராய்ந்து பார்ப்போம்.

பாதுகாக்க வேண்டிய கட்டளைகள்	கட்டளைகளை நாம் பின்பற்றக்கூடிய வழிமுறைகள்
1. என்னைத்தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் வேண்டாம்.	♦ நாம் இறக்கும்வரை ஒரேகடவுள் மீது மட்டுமே விசுவாசம் கொண்டு அவர் ஒருவரையே வழிபடுவோம். ♦ நாம் செய்யும் எல்லாச் செயல்களையும் இறை விருப்பத்திற்கு ஏற்ப செய்வோம்.
2. சிலை வழிபாடு செய்ய வேண்டாம்.	♦ கடவுளைச் சிலைகளுக்கு ஒப்பிட்டு வழிபடவேண்டாம். ♦ கடவுளைவிட மனிதனால் உருவாக்கப் பட்டவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டாம்.
3. உன் கடவுளாகிய ஆண்டவரின் பெயரை வீணாகப் பயன்படுத்த வேண்டாம்.	♦ கடவுளின் பெயரால் சத்தியம் செய்ய வேண்டாம். ♦ நீதி மன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்யும்போது உண்மையை மட்டும் வெளிப்படுத்த வேண்டும். ♦ கடவுளின் நாமத்தை மகிமையாகப் பயன்படுத்த வேண்டும்.

4. ஓய்வு நாளைப் புனிதமாகக் கடைப் பிடிக்க வேண்டும்	♦ ஓய்வு நாளில் தவறாமல் இறை வழி பாட்டில் பங்குகொள்ள வேண்டும். ♦ ஓய்வுநாளைக் கைவிட்டு வெளியேறி வேறுகாரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்தல். ♦ ஓய்வுநாளில் முடிந்தளவு இறைமகி மைக்காகவும் பிறரின் நன்மைக்காக வும் செலவிட வேண்டும்.
5. உன் தந்தையையும் உன் தாயையும் மதித்து நட.	♦ பெற்றோரை எப்போதும் மதித்து அவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளல். ♦ பெற்றோரின் மனம்வேதனையடையும் படி ஒருநாளும் செயற்படக்கூடாது. ♦ பெற்றோரோடு வாதாடிப் பொருத்த மில்லா வார்த்தைகளைப் பேசி பெற் றோரை இழிவு படுத்தக்கூடாது.
6. கொலை செய்யாதே	♦ பிறரின் வாழ்வைமட்டுமல்ல அவரின் நற்பெயரையும் பாதுகாக்க வேண்டும். ♦ ஒவ்வொருவரின் வாழ்வையும் மதிக்க வேண்டும். ♦ வாழ்வின் அழிவிற்குக் காரணமான உணவு போதை வஸ்துக்களை விலக்கி விடல்.
7. விபச்சாரம் செய்யாதே	♦ இறை வழிகாட்டலோடு விசுவாசமான விவாக வாழ்வை வாழ்தல். ♦ சிறுவர்களுக்குப் பொருத்தமில்லாத இணையத்தளங்கள், திரைப்படங்கள் சஞ்சிகைகள் போன்றவற்றைப் பயன் படுத்தாமை. ♦ வாழ்வின் பெறுமதியைப் பாதுகாக்கும் உணர்வோடு ஒழுங்கமைத்து செயற் படுவோம்.

8. களவு செய்யாதே	♦ பிறருக்கு உரிய செல்வங்களைக் கவர்ந்திடக் கூடாது. ♦ நல்வழியில் மட்டுமே பணம் சம்பா தித்தல். ♦ வளங்களைப் பாதுகாத்து பின்வரும் வழிமரபினருக்கு உதவுதல்.
9. பிறருக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்லாதே.	♦ எவ்வேளையிலும் உண்மையை மட் டுமே பேசுதல். ♦ தவறான கொள்கை களைத் தவிர்த்தல். ♦ எமது நலனுக்காக உண்மையை மறைக் காதிருத்தல்.
10. பிறருக்கு உரிய எதையுமே கவர்ந்திட விரும்பாதே.	♦ பிறரின் செல்வங்களைப் பாதுகாத்தல். ♦ பிறரின் சொத்துக்களைக் கவர்ந்திடா திருத்தல் ♦ பொதுச் சொத்துக்கள் அனைவருக்கும் உரியது என்ற உணர்வோடு அவற்றைப் பாதுகாத்தல்.

பஞ்சாகமத்தில் பத்துக்கட்டளையை விட மேலும் பல நீதிச்சட்டதிட்டங்கள் அடங்கி இருந்தன. அன்று இஸ்ரயேல் மக்கள் சமூகம் நல்ல விழுமியங்களைப் பாதுகாத்தனர். அன்றைய இஸ்ரயேல் சமூகத்திற்கு மட்டுமல்ல இன்றைய சமூகத்தில் வாழும் எமக்கும் எளிமையான வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு இப்பஞ்சாகமத்தின் மூலமாக வழிகாட்டல் கிடைக்கின்றது. அன்றும் இன்றும் இவைகள் சமூகத்திற்கு வேண்டியவை மட்டுமல்ல வருங்கால சமுதாயத்திற்கும் கடவுளின் வல்லமையை வெளிப்படுத்துவதற்காகவும் பஞ்சாகமத்தால் நாம் பெற்றுக்கொண்ட வழிகாட்டல் மிகவும் அளப்பரியது.

ö\¯Ø£õk

1. பஞ்சாகமத்தில் அடங்கியுள்ள நூல்களைப் பெயரிட்டு அதில் குறிப்பிடப் பட்ட சம்பவங்களைச் சுருக்கமாகத் தருக.

2. நல்விழுமியங்கள் நிறைந்த சமுதாயத்தைக் கட்டி யெழுப்புவதற்குப் பத்துக்கட்டளைகளில் இருந்து நீர் பெற்றுக்கொள்ளும் ஐந்து வழிகாட் டுதலைத் தருக.

20 • Ø¤ uõUPÒ

கடவுள் தனது திட்டத்தை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்காக "தெரிவு செய்யப்பட்ட நபர்கள்" தொடர்ச் சியாக அழைக்கப்பட்டனர். இவ்வாறு தெரிவு செய்யப் பட்டு இறைபணியைச் சிறப்பாக நிறைவு செய்த பழைய ஏற்பாட்டின் முற்பிதாக்களின் வாழ்வினூடாகப் பெற்றுக் கொள்ளும் முன்மாதிரிகளை இப் பாடத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

இறைவனின் திட்டத்தை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்காக விசேடமாக அழைக்கப்பட்ட இவர்கள், அதற்குக் கீழ்ப்படிந்து சிறந்த முறையில் நிறைவுசெய்த நபர்கள் ஆதிப் பிதாக்களாவர். திருவிவிலியத்தில் தொடக்க நூல் பன்னிரெண்டாம் அதிகாரத்தில் இருந்து ஆரம்பிக்கும் இஸ்ரயேலரின் வரலாற்றின் நிகழ்வுகளுக்கூடாக முற்பிதாக்கள் மூவரைப்பற்றிய கருத்துக்கள் எமக்கு வெளிப்படுகின்றன. அம் முற்பிதாக்களின் பெயர்களாவன ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு கி.மு 2000 -1700ம் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள். விசுவாசத்தில் முன்மாதிரியாக வாழ்ந்த முற் பிதாக்களான இவர்களைப் பற்றி நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

முற்பிதாக்களின் வாழ்வினை அறிந்து கொள்வதற்குச் சில பொதுப்பண்புகளைப் பார்ப்போம்.

- தொடர்ச்சியாகக் கடவுளின் ஆதிக்கத்தில் தங்கியிருத்தல்.
- கடவுள் அவர்களோடு உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ளல்.
- சவால்களின் மத்தியில் தளர்ந்துவிடாமல் விசுவாசத்தோடு செயற்படுதல்.
- அர்ப்பணிக்கப்பட்ட நீதியான வாழ்க்கை வாழுதல்.
- தேவையான இடங்களில் தமது தவறுகளை ஏற்று மன்னிப்பு வேண்டுதல்.
- சகோதர அன்பில் வாழுதல்.

இவ்வாறான பொதுப் பண்புகளை ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்னும் முற் பிதாக்களின் நடத்தையின் மூலமாக அறிந்து கொள்கிறோம்.

• Ø¤uõ B ¤µPõ®

முற்பிதாக்களில் கடவுளின் அழைப்பினை முதலில் பெற்றவர் ஆபிரகாம் என்பதைத் திருவிவிலியத்தில் நாம் காண்கிறோம். ஆபிரகாமின் முன்னைய பெயர் ''ஆபிராம்'' இதன் பொருள் ''உன்னதத்தந்தை'' கடவுள் ஆபிராம் என்ற பெயரை மாற்றி ''இனங்களின் தந்தை'' என அர்த்தம் கொள்ளும் ஆபிரகாம் என்ற பெயரைக் கொடுத்தார். ஆபிரகாமின் பிறப்பிடமானது ஊர் என்ற நகரமாகும். ஆபிரகாமின் தந்தையான தேராகு தனது குடும்பத்தாருடன் ஊர் நகரை விட்டுக் காரான் என்ற நகரில் தங்கி வாழ்ந்தனர். இந்தக் காரான் நகரில் தான் கடவுளின் விசேடமான அழைப்பு ஆபிரகாமுக்கு கிடைத்தது. அவ்வழைப்பானது.

ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி

''உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடம் இருந்தும்
உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு
நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல்.
உன்னை நான் பெரிய இனமாக்குவேன்;
உனக்கு ஆசி வழங்குவேன்;
உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்.
(தொடக்க நூல் 12:1-2)

இவ்வாறான அழைப்பினூடாக கடவுளிடம் இருந்து ஆபிரகாம் பெற்றுக்கொண்ட வாக்குறுதிகளாவன

1. ஆபிரகாம் வாழ்வதற்கு நாட்டை உரிமையாக்கித் தருவேன் என்பது
2. ஆபிரகாம் மூலமாக பெரிய இனத்தை உருவாக்குவேன் என்பது
3. ஆபிரகாமின் பெயரில் அனைத்து மக்களுக்கும் ஆசி வழங்குவேன் என்பது.

ஆபிரகாமின் மனைவியாகிய சாராள் இதுவரை குழந்தை இல்லாமல் இருந்தார் அத்தோடு அவர்கள் இருவரும் வயது சென்றவர்களாக இருந்தனர். என திருவி விலியத்தில் காண்கிறோம். தங்களின் எதிர்காலத்தைப் பற்றிய எந்த ஒரு எதிர் பார்ப்புமின்றி இருந்த வேளையில் கடவுளின் விசேட அழைப்பு ஆபிரகாமுக்குக் கிடைத்தது. அவ்வழைப்பானது ஆபிரகாமுக்குச் சவாலாக அமைந்தது. கடவுள் எபிரோனில் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்து கொண்டார்.

அதன்படி ஆபிரகாம் கடவுளின் மீது பூரண விசுவாசம் கொண்டு கானான் தேசத்தை நோக்கிச் செல்வதற்குத் தீர்மானம் எடுத்தார். மிகப்பெரிய சவாலாக கடவுளின் அழைப்பினூடாக ஆபிரகாம் தன்னை அர்ப்பணம் செய்ய வேண்டியிருந்தது.

ஆபிரகாமின் அழைப்பு

அர்ப்பணிப்பு

- தாய்நாடு
- உறவினர்
- இதுவரை வாழ்ந்த தந்தையின் வீடு

சவால்

- பிள்ளைகள் இல்லாத மனைவியின் மூலம் ஓர் இனத்தை உருவாக்குதல்
- அறியாத நாட்டிற்குச் செல்லுதல்.
- அனைத்தையும் குறித்து விசுவாசத் துடன் பார்த்துக் கொண்டிருந்த சம்பவம்.
- நாடோடி வாழ்க்கை வாழ்வதற்கான சந்தர்ப்பம்.

கடவுளுக்குக் கீழ்ப்படிந்து தனக்குரிய அனைத்தையும் அர்ப்பணித்து சவால்களை விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்ட ஆபிரகாம் கானான் நாட்டை நோக்கிப் புறப்பட்டார். இதனால் ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தை என அறிமுகம் செய்யப்பட்டார்.

வாசிப்போம்.
தொடக்கநூல்: 13:1-13

கானான் தேசத்தை நோக்கிச் சென்ற ஆபிரகாமுடன் அவரின் மனைவியான சாராவும் ஆபிரகாமின் சகோதரனின் மகனுமான லோத்துவின் குடும்பமும் அவருடன் சென்றனர். இப்பயணத்தில் ஆபிரகாமின் மந்தை மேய்ப்பர்களுக்கும் லோத்துவின் மந்தை மேய்ப்பர்களுக்கும் இடையே நிறைய முரண்பாடுகள் ஏற்பட்டன. அவர்கள் இருவரும் பொதுவாக வாழ்ந்த போதும் அவர்களின் மந்தை மேய்ப்பர்களுக்கு போதுமான புல்வெளிகள் இருக்கவில்லை. இப்பிரச்சனைகளின் மத்தியில் ஆபிரகாம் அன்பான தந்தையைப் போன்று செயற்பட்டார். எனவே லோத்துடன் கலந்துபேசிப் பிரச்சனைக்குத் தீர்வு கண்டனர். அப்பொழுது ஆபிரகாம் நீர்வளம் சிறந்திருந்த செழிப்பான பிரதே சத்தை லோத்துவுக்கு அர்ப்பணம் செய்தார். அதன்பின் ஆபிரகாம் மலைப் பிரதேசத்தில் குடியேறினார்.



உரு 20.1 ஆபிரகாம் லோத்துவுக்கு செழிப்பான பிரதேசத்தை தியாகம் செய்தல்

இச்சம்பவத்தினூடாக எமது வாழ்விற்குப் பெற்றுக் கொள்ளக்கூடிய வழிகாட்டல்கள்

- எமக்குப் பிரச்சனைகளை உருவாக்கும் போட்டி, பொறாமை, சண்டை, பகைமை போன்ற தீமையான வழிகளை விட்டுச் சமாதானமாக பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு ஆபிரகாம் மூலமாய் வழிகாட்டல் கிடைக்கின்றது.

- Ø¤uõ D\õUS

கடவுளின் வாக்குறுதிகளுக்கு ஏற்ப ஆபிரகாமின் மனைவியான சாரா பெற்றெடுத்த மகன் ஈசாக்கு ஆவான். அப்போது ஆபிரகாமும் சாராவும் மிகவும் வயது சென்றவர்களாய் இருந்தனர். ஆபிரகாமுக்கு 100 வயதும் சாராவிற்கு 90 வயதுமாய் இருந்தது. கடவுள் வயது முதிர்ந்த வேளையிலும் அவர்களுக்குக் குழந்தையைக் கொடுத்தது சாராவுக்குச் சிரிப்பாய் இருந்தது. எனவே ''சிரிப்பு'' என அர்த்தம் கொள்ளும் ஈசாக்கு என்ற பெயரைத் தமது மகனுக்கு வைத்தனர்.

ஈசாக்கு தன் தந்தைக்குக் கீழ்ப்படிந்து கடவுளுக்கு ஏற்றவாறு வாழ்ந்தார் என்பதை திருவிவிலியத்தில் நாம் காண்கிறோம். கடவுளின் வழிகாட்டலோடு ஈசாக்கு ரெபேக்காவை விவாகம் செய்தார். அவ்வாறே ஈசாக்கு சமாதானமான வாழ்க்கையை வாழ்ந்தார் என்பதைக் கீழே தரப்பட்டுள்ள சம்பவத்தினூடாக நாம் அறிந்து கொள்ளலாம். பெயர்செபாவிலே கடவுள் ஈசாக்கோடு உடன்படிக்கை செய்து கொண்டார்.

வாசிப்போம்
தொடக்கநூல்:
26:16-22

ஈசாக்கு கெராரில் உள்ள சமவெளிப் பகுதியில் குடியேறினார். ஈசாக்கின் மேய்ப்பர்கள் கிணறுகளைத் தோண்டியபோது தண்ணீர் நீருற்றைப் போல் பொங்கி எழும்பியது. கெராரிலே இருந்த மேய்ப்பர்கள் ''இந்தத் தண்ணீர் எங்களதே'' என்று ஈசாக்கின் மேய்ப்பர்களோடு வாதாடினார்கள்.

ஆனால் ஈசாக்கு சமாதானத்துடன் ஏற்றுக் கொண்டு மீண்டும் மீண்டும் கிணறுகளைத் தோண்டுவதற்கு மேய்ப்பர்களுக்கு கட்டளையிட்டார். ஈசாக்கு இவ்வாறு பொறுமையோடும் அர்ப்பணிப்போடும் அந்தப் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொண்டார். எனவே கெராரிய மேய்ப்பர்கள் தகராறு செய்வதைக் கைவிட்டார்கள்.

நீங்கள் ஆயத்தமா?

↓


துன்பங்களின் மத்தியில் சமாதானத்தை வெளிப்படுத்துவதற்கு

↓

மீண்டும் மீண்டும் துன்பம் வரும்போது நன்மையான வெளிப்பாட்டை காண்பிப்பதற்கு

↓

அதன் மூலம் நல்லதீர்மானம் எடுப்பதில் கிட்டி வருவதற்கு



• Ø¤uõ ¯õU÷Põ¦

ஈசாக்கின் மனைவியான ரெபேக்காவுக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறந்தனர். அவர்கள் ஏசாவும் யாக்கோபும் ஆவார்கள். யாக்கோபு தனது மூத்த சகோதரனின் குதிக்காலை கையால் பற்றிக்கொண்டு பிறந்தார். யாக்கோபு என்பதன் அர்த்தம் ''ஏமாற்றுபவர்'' தந்தை விசேடமாக மூத்தமகன் ஏசாவில் அன்பு கொண்டார். தாய் விசேடமாக யாக்கோபை அன்பு செய்தார். அவர்கள் இருவரும் உருவத்தில் மட்டுமல்ல நடத்தையிலும் ஒருவருக்கொருவர் வேறுபட்டவர்களாய் இருந்தனர்.

இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்தில் குடும்பத்தின் மூத்த ஆண்பிள்ளைக்கு விசேடமான வரப்பிரசாதமும் ஆசீர்வாதமும் உரிமையானது. குடும்பத்தின் இளைய மகனுக்கு அவ்வாறான விசேட வரப்பிரசாதங்கள் இல்லை என்பதை அறிந்த யாக்கோபு ஏசாவின் தலை மகனுரிமையை பெற்றுக் கொள்வதற்காக முயற்சி செய்தார். கீழே தரப்பட்ட சம்பவங்களின் மூலமாக அது எமக்கு உறுதியாயிற்று.

1. ஏசாவின் பசியின் தன்மையைப் பயன்படுத்தி தலைமகனுரிமையை யாக்கோபு அபகரித்துக் கொள்ளுதல். (தொடக்கநூல் :25:27-34)
2. தாயின் உதவியோடு ஏசாவுக்கு உரிமையான விசேட ஆசீர்வாதத்தை யாக்கோபு அபகரித்துக் கொள்ளுதல்.

ஏசாவின் தலைமகன் உரிமையையும் ஆசீர்வாதத்தையும் களவாய்ப் பெற்றுக் கொண்டதை அறிந்து ஏசா தன்மீது கோபம் கொண்டு தன்னைக் கொலை செய்யத்

தேடுவார் எனப் பயந்து யாக்கோபு தன் தாயின் ஊருக்குத் தப்பிச் சென்றார். அங்கே அவர் திருமணம் செய்தார்.
கடவுள் ஆபிரகாம் ஈசாக்கு என்பவர்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையை மீண்டும் யாக்கோபோடு பெத்தேலில் ஏற்படுத்திக் கொண்டார். கடவுளோடு ஏற்படுத்திக் கொண்ட தொடர்பின் மூலமாக அவர் நல்வாழ்வு வாழ்வதில் ஈடுபட்டார். தவறை உணர்ந்த யாக்கோபு தனது சகோதரனோடு சமாதானமாவதற்கு எடுத்த முயற்சியைக் கீழே தரப்பட்ட திருமறைப் பகுதியில் ஆராய்ந்து பார்ப்போம்.

வாசிப்போம்.
தொடக்கநூல்
33:1-11

தனது தவறுகளைப்பற்றி மனம் வருந்திய யாக்கோபு மன்னிப்புப் பெறுவதற்கு ஏசாவிடம் வந்தார். ஏசாவைக் கண்ட யாக்கோபு ஏழு முறை தரையில் வீழ்ந்து அவரை வணங்கினார். தனது தவறுக்காக மன்னிப்பு வேண்டினார். ஏசா அழுது கொண்டு தனது சகோதரனை அரவணைத்துக் கொண்டு அவனுக்கு மன்னிப்பு அளித்தார்.


உரு 20.2 யாக்கோபுவும் ஏசாவும் ஒற்றுமையாகுதல்

யாக்கோபும் ஏசாவும் இணைந்து கொண்ட நிகழ்வில் இருந்து எமக்குக் கிடைக்கும் வழிகாட்டல்கள்.

- எம்மால் ஏற்பட்ட தவறுகளை ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாதல்.
- சகோதர சகோதரிகளை மதித்தல்.
- மனதாலும் சொல்லாலும் செயலாலும் மன்னிப்புக் கேட்டு மன்னிப்பு வழங்குதல்.
- தியாக மனப்பான்மையோடு செயற்படல்.
- சகோதர அன்பில் செயற்படுதல்.

முற்பிதாக்கள் தமது வாழ்க்கையின் சவால்களை கடவுளின் மூலமாக சமாதானமாக நிறைவு செய்த முறைகளை நாம் ஆராய்ந்து பார்த்தோம். அவ் வழிகாட்டலின் மூலமாக எமது வாழ்வின் சவால்களை வெற்றிகொள்வதற்கு முயற்சி செய்வோம்.

ö\¯Ø£õk

1. முற்பிதாக்கள் மூவரிடம் வெளிப்பட்ட பிரதான பண்புகளை தனித்தனியாக எழுதி விளக்குக.

2. முற்பிதாக்களிடம் காணப்பட்ட பண்புகளைப் பயன்படுத்தி, எமது வாழ்வின் சவால்களை மேற்கொண்டு முன்னோக்கிச் செல்வது எவ்வாறு என்பதை விளக்குக.

21 ÁÀ»ø© {øÓ¢u ÁõÌÄ öu÷£õµõ

பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்ட பெண்களில் சிறப்பிடம் பெற்றவர் தெபோரா. இவர் நீதித் தலைவியும் இறைவாக்கினருமாக மக்களை வழிநடத்தினார். இஸ்ரயேலரின் இனத்தை மீட்பதற்காக செயற்பட்ட தெபோராவைக் குறித்து இப்பாடத்தில் கற்போம்.

(ஓய்வு நாள் பாடசாலைக்குத் தனது நண்பன் ஆனந்தன் வரவில்லை என்பதால் பாலன் அவனது வீட்டுக்குச் செல்லல்)

பாலன் : நீ ஏன் நேற்று ஆலய வழிபாட்டுக்கும் ஓய்வுநாள் பாடசாலைக்கும் வரவில்லை?

ஆனந்தன் : சுகயீனம் காரணமாக என்னால் வரமுடியவில்லை. நேற்று ஓய்வு நாள் பாடசாலையில் என்ன நடைபெற்றது?

பாலன் : உனக்குத் தெரியுமா? நேற்று எமது மன்றத்தின் செயற்குழுத் தெரிவு இடம்பெற்றது. தலைவராக தெரிவு செய்யப்பட்டவர் யார் தெரியுமா?

ஆனந்தன் : பொது அறிவுப் போட்டியில் முதலாவதாக வந்த அண்ணாவா?

பாலன் : இல்லை! இல்லை! நிர்மலா அக்கா

ஆனந்தன் : தலைவராகத் தெரிவு செய்ய வேறு யாருமில்லையா? நிர்மலாவால் மன்றத்தை முன்னெடுத்து நடாத்திச் செல்ல முடியுமா? இந்தப் பதவிக்கு ஆண் ஒருவர் தானே பொருத்தமாக இருக்கும்.

பாலன் : அப்படிச் சொல்லாதே, இன்று சமூகத்தில் பலபெண்கள் பல துறைகளில் தலைமைத்துவம் ஏற்றுச் செயற்படுகின்றார்கள். 'தொட்டில் ஆட்டும் கை அரச பதவிக்கும் பொருத்தம்' என உனக்கு தெரியாதா?

அக்கா : இன்று மட்டுமல்ல தம்பி, கடந்த காலத்திலும் பெண்கள் தமது நாட்டை போரிலிருந்து கூட மீட்டுள்ளனர்.

ஆனந்தன் : அவர்கள் யார் அக்கா?

அக்கா : ஏன் தம்பி? பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நீதித் தலைவி தெபோராவைக் குறித்து நீ அறியவில்லையா? ஆண்டவரின் வழி காட்டலுடன் நாட்டைப் போரிலிருந்து மீட்டார்.

மேற்படி உரையாடலில் குறிப்பிட்ட தெபோரா என்னும் நீதித் தலைவி பழைய ஏற்பாட்டில் வரும் முக்கியமான பெண் கதாபாத்திரம். தெபோராளைக் குறித்த விபரங்களை திருவிவிலியத்தின் துணையுடன் ஆராய்வோம்.

வாசிப்போம்
நீதித் தலைவர்கள்
4:1-3

இஸ்ரயேல் மக்களின் தீயசெயல்களால் கானானிய மன்னன் யாபினிடம் அவர்கள் தோல்வி அடைந்தனர். யாபினுடைய படைத்தலைவன் சீசரா ஆவர். அதிகார பலமிக்க அவனிடம் தொள்ளாயிரம் இரும்புத் தேர்கள் இருந்தன.

அத்துடன் இருபது ஆண்டுகள் போரினால் துன்பம் அனுபவித்த இஸ்ரயேலர் ஆண்டவரை நோக்கிக் கூக்குரலிட்டனர். உடல் நிலையில், உள நிலையில் பலவீனமான இஸ்ரயேலரின் அடைக்கலம் ஒரே கடவுள் என அறிந்திருந்தனர். இவ்வாறான போர்க் காலகட்டத்தில் மக்களுக்குச் சரியான வழிகாட்டுவதற்காக தெபோரா எனும் பெண்ணை ஆண்டவர் அழைத்தார்.

''அச் சமயத்தில் இஸ்ரயேலருக்கு இறைவாக்கினரும் இலப்பிதோத்தின் மனைவியுமான தெபோரா நீதித் தலைவியாக இருந்தார்''.

நீதித்தலைவர்கள் 4:4



தெபோரா பேரீச்சை மரத்தின் கீழ் மக்களுக்குத் தீர்ப்பு வழங்கல்

அன்று பெண்கள் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவ்வாறான சமூகப் பின்னணியில் ஆண்டவரின் தலைமைத்துவப் பணிக்காக பெண்கள் அழைக் கப்பட்டனர். அவர் எப்ராயிம் மலைநாட்டில் இராமாவுக்கும் பெத்தேலுக்கும் இடையில் 'தெபோராப் பேரீச்சை' மரத்தின் அடியிலிருந்து மக்களுக்குத் தீர்ப்பு வழங்கினார். மக்கள் அவரின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் ஆலோசனையைக் கேட்பதற்காக அவரிடம் வந்தனர். அவர்கள் அவற்றைக் கேட்டு வாழ்வின் குறைபாடுகளை அறிந்து இறைவிருப்பத்தை நிறைவேற்ற முன்வந்தனர்.

வாசிப்போம்
நீதித் தலைவர்கள்
4:6-8

இருபது ஆண்டுகள் போரினால் துன்பங்களை அனுபவித்த மக்கள், சுதந்திரமான இஸ்ரயேல் நாட்டில் வாழ்வதை எதிர்நோக்கி இருந்தனர். ஆண்டவரிடம் கூக்குரலிட்ட மக்களுக்கு தெபோராவின் தலைமைத்துவத்தில் ஆறுதல் வழங்கப்பட்டது. இறை விருப்புக்கு ஏற்ப அவர் நப்தலியில் இருந்த கெதேசில் வாழ்ந்த அபினொவாமின் மகன் பாராக்கை தலைமை தாங்குமாறு கூப்பிட்டார். அழைப்பை ஏற்ற பாராக்கு மேலும் தெபோராவின் உதவியை நாடினான். அதற்கேற்ப தமது நாட்டைக் காப்பாற்ற பாராக்கு உறுதுணையாக இருக்க உறுதி வழங்கினாள்.

> ''பாராக்கு செபுலோனையும் நப்தலியையும் கெதேசில் ஒன்று கூட்டினார். பத்தாயிரம் பேர் அவர்பின் அணிவகுத்துச் சென்றனர். தெபோராவும் அவருடன் சென்றார்''.
>
> **நீதித்தலைவர்கள் 4:10**

ஆண்டவரின் வழிகாட்டலுக்கு ஏற்ப தெபோரா போரை நன்முறையில் நடாத்த பாராக்குக்கு அறிவுரை வழங்கி உறுதுணையாக இருந்தார்.

> ''தெபோரா பாராக்கிடம், எழுந்திடும் இந்நாளில் ஆண்டவர் சீசராவை உம்மிடம் ஒப்படைப்பார். ஆண்டவர் உம்முன் செல்லவில்லையா? என்றார். பாராக்கு தாபோர் மலையிலிருந்து இறங்கினார். பத்தாயிரம் பேர் அவரைப் பின் தொடர்ந்தனர்''.
>
> **நீதித்தலைவர்கள் 4:14**

இவ்வாறாகத் தெபோரா நியமமான வகையில் தனிப்பட்ட முறையில் போராட்டத்தில் கலந்து கொண்டது மட்டுமல்ல வெற்றி காண்பதற்கான வழிமுறைகளையும் கூறிப் பாராக்குவை அறிவூட்டச் செய்தாள். அவரது ஆன்மீக பலத்தால் பிறரைத் துணிவுபெறச் செய்தார். ஆண்டவர் பாராக்குக்கு முன்னால் தீர்வு காணும் வேளையில் முன்செல்வார் என அறிவித்தார். பாராக்குவின் ஆன்மீக சக்தியை வலுப்படுத்தினார்.

இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரின் வழிகாட்டுதலுடன் செயற்பட்டு சீசராவைத் தோற்கடித்தனர். இருபது ஆண்டுகால போர் முடிவுற்றது. இந்தப் போராட்டம் இறை வழிகாட்டலுக்கு ஏற்ப வெற்றியை அடைவதற்கு முன்னின்றவர் நீதித்தலைவியான தெபோரா ஆவர். ஆண்டவர் எமது வாழ்விலும் வழிகாட்டுவாராக!

தெபோராவின் வாழ்வு மூலமாக கிறிஸ்தவராகிய எமக்குக் கிடைக்கும் வழிகாட்டல்கள்

1.	பெண்களின் தலைமைத்துவம் கட்டுப்படுத்தப்பட்டிருந்த மக்கள் சமூகத்தில் தெபோரா அழைப்பை ஏற்றுக் கொண்டார். →	பல்வேறு சமூகச் சூழலில் எமக்குக் கிடைக்கும் அழைப்பை ஏற்றுக் கொள்ளல்.
2.	தெபோராவின் தீர்ப்புக்கு ஏற்ப பாராக்கு தனது அழைப்பை ஏற்றுக் கொண்டான். →	பல்வேறு நபர்கள் ஊடாக ஆண்டவர் எம்மை அழைத்தல்.
3.	தனது பணியை நிறைவேற்ற ஆண்டவரின் அருள் எப்போதும் கிடைக்கின்றது என விசுவாசித் தாள். →	அனைத்து அழைப்புக்களிலும் ஆண்டவரின் வழிகாட்டுதல் எப்போதும் கிடைக்கின்றது என விசுவாசித்தல்.
4.	பாராக்கு போர் செய்வதற்கு தெபோராவின் உதவியை நாடிய போது அவள் போரின் இறுதி வரை உறுதுணையாக இருந்தாள். →	எம்மிடம் உதவி நாடி வருபவர்களுக்கு முடியுமான வரை உறுதுணையாக இருந்து உதவி செய்தல்.
5.	தனது வாழ்வைக் கருத்தில் கொள்ளாது ஒரு பெண்ணாக போரில் முழுமையான அர்ப் பணிப்புடன் செயற்பட்டாள். →	முழுமையான அர்ப்பணிப்புடன் பணியை நிறைவேற்றல்.
6.	பாராக்கு தெபோராவின் சொல் கேட்டு அவளது ஆலோசனை களை ஏற்றுக் கொண்டான். →	பிறரின் அறிவுரைகளை இறை வழி காட்டலுடன் ஏற்று செயற்படல்.
7.	தெபோரா பாராக்கைத் துணிவு படுத்தியமை அவர்களது வெற்றிக்கு காரணியாக அமைந்தது. →	தீர்வுகாணும் வேளையில் பிறரைத் துணிவுபடுத்த முன்வருதல்.

பெண்களும் அவர்களது ஆற்றல்களும் ஏற்றுக்கொள்ளப்படாத காலகட்டத்தில் தெபோரா தனது அழைப்பின் ஊடாக சமூகத்துக்கு ஆற்றிய பணி அளப்பரியது. விண்ணப்பமும், இறை வழிகாட்டலும் இறைவிருப்புக்கு ஏற்ப சமூகப் பணியில் ஈடுபடுவதற்கு அவசியம் என தெபோராவின் செயல் எமக்கு வெளிப்படுத்துகின்றது. இவ்வாறான சவால் நிறைந்த வேளைகளில் துணிவுடன் இறை வழிகாட்டலைத் தேடி அவற்றை எதிர்நோக்க நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

ö\¯Ø£õk

1. மிகவும் இக்கட்டான வேளைகளில் பல்வேறு பணிகளுக்காக அழைக்கப்பட்ட மூன்று பெண்களின் பெயர்களை திருவிவிலியத்தில் கண்டு பிடியுங்கள்.

2. தெபோராவின் தலைமைத்துவத்தின் சிறப்பான பண்புகளை உமது வாழ்வின் சவால்களை மேற்கொள்வதற்கு நீர் எவ்வாறு பயன்படுத்துவீர்?

22 ÁÀ»ø© {øÓ¢u ÁõÌÄ ö|÷Pª¯õ

நெகேமியா 4ம், 5ம் அதிகாரங்கள்



உரு 22. 1 சுனாமி பேரலை



உரு 22.2 போர்

மேற்படி உருவப் படங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள் எமது நாட்டு மக்கள் முகம் கொடுத்த பிரதான இரு சவால்கள் அவற்றில் காட்டப்பட்டுள்ளன. அதாவது இயற்கை அனர்த்தம், சுனாமிப் பேரலையின் அழிவு, மனிதரால் மூன்று தசாப்தங்களாக இடம்பெற்று வந்த போரின் விளைவுகள் என்பனவாகும்.

மேற்படி இரு சவால்களும் எமது நாட்டின் அனைத்துக் குடிமக்களின் வாழ்வில் தாக்கங்களை உருவாக்கின. இரு சவால்களின் மத்தியில் ஒவ்வொரு இலங்கை வாழ் பிரசையும், எந்தவொரு பேதமுமின்றி, துன்பத்துக்கு உள்ளானவர்களின் வாழ்வை மேம்படுத்தச் செயற்பட்டனர். அவ்வேளையில் பலதரப்பட்ட மக்கள், உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள், சுயேச்சையாக முன்வந்து மக்களின் வாழ்வை மேம்படுத்துவதில் ஈடுபட்டனர்.

இஸ்ரயேல் மக்கள் பாபிலோனியா அடிமைத்தனத்தில் இவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுத்தனர். இறைவாக்கினர் எரேமியா போன்றோரின் இறைவாக்குகளின் நிறைவேற்றமாக கி.மு 587 இல் இஸ்ரயேல் மீதான படையெடுப்பு நிகழ்ந்தது. பாபிலோனியாவை ஆட்சி செய்த நெபுகத்னேசர் மன்னன் யூத அரச மக்களை பாபிலோனியாவுக்கு அழைத்துச் செல்லும் நிகழ்வானது, பாபிலோனிய அடிமைத்தனம் என அழைக்கப்படுகின்றது. ஆனால் பல ஆண்டுகளுக்குப் பின்னர் நல்லதொரு தூரநோக்குடைய ஆளுநரான சைரஸ் மன்னனின் ஆட்சிக்காலத்தில் இஸ்ரயேல் மக்களுக்கு மீண்டும் தமது நாட்டுக்குச் செல்வதற்கான அனுமதி கிடைத்தது.

இறை திட்டத்துக்கு ஏற்ப இந்நிகழ்வு இடம்பெற்றதென இஸ்ரயேலர் ஏற்றுக் கொண்டனர். அடிமை நிலையிலிருந்து விடுபட்டு தமது நாட்டில் குடியேறிய இஸ்ரயேல் மக்களுக்குப் பின்வருவோரின் தலைமைத்துவம் கிடைத்தது.

1. செரூப்பாபேல்
2. எஸ்ரா
3. நெகேமியா

சிறைவாசம் நிமித்தமாக வீழ்ச்சியடைந்த இஸ்ரயேல் மக்களின் சாதாரண வாழ்வைக் கட்டியெழுப்புவதற்காக அவர்கள் மத்தியில் தலைவர்கள் உருவாகினர். எஸ்ரா என்பவர் ஆலயத்தைக் கட்டியெழுப்பி இஸ்ரயேல் மக்களின் ஆன்மீக வாழ்வைச் சரியான நிலைக்குக் கொண்டுவர முயற்சித்தார். நெகேமியா எருசலேம் மதில்களைக் கட்டியெழுப்பி எருசலேம் நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினார்.

நெகேமியா மதில் கட்ட அழைக்கப்படல்

நெகேமியா என்பவர் பாபிலோனிய மன்னன் அர்த்தக்சஸ்தாவின் பானப் பணிவிடைக் காரனாக இருந்த உயர் அதிகாரி ஆவர். எருசலேம் வாழ் மக்களின் துயர் நிலையை அறிந்த நெகேமியா எருசலேம் செல்லத் தீர்மானம் செய்தார். அவர் தமது நாட்டுக்குச் செல்ல அர்தக்சஸ்தாவின் அனுமதியைக் கோரினார்.

அரசன் நெகேமியாவை யூதா நாட்டின் ஆளுனராக நியமித்ததை அடுத்து, அவர் தனது நாட்டை நோக்கிச் சென்றார். கி.மு 444 இல் எருசலேமுக்கு வந்த வேளையில் இஸ்ரயேல் மக்கள் இறைவனை விட்டுத் தூர விலகி இருளான பாதையில் பயணம் செய்தனர். அவர்கள் குருக்களுக்கும் இறைவாக்கினருக்கும் செவிகொடுக்காது வாழ்ந்தனர்.

இவ்வாறான பின்னணியில் நெகேமியா எருசலேமை அடைந்தார். ஆனாலும் கடவுள் நெகேமியாவை மக்கள் ஏற்றுக்கொள்ளும் ஒருவராக நியமித்தார். இஸ்ரயேல் மக்கள் நெகேமியாவின் தலைமைத்துவத்தை ஏற்று, அவர் கூறுவதைக் கேட்டனர். நெகேமியா இஸ்ரயேல் மக்களின் துணையுடன் 52 நாட்களில் மதிலைக் கட்டி முடித்தார். நெகேமியாவின் வெற்றிக்குக் காரணியாக அமைந்த மூன்று விடயங்கள் பின்வருமாறு:

- அவரது உள்ளத்தில் காணப்பட்ட இறை விசுவாசம்
- எப்போதும் அவர் இறைவனுக்கு கீழ்ப்படிந்தார்.
- முயற்சியுடனும் அர்ப்பணிப்புடனும் உழைத்துத் தனது செயலை நிறைவேற்றினார்.

மேற்படி நிகழ்வில் நெகேமியா பல எதிர்ப்புக்களை எதிர்நோக்கினார். அவற்றுள் சில பிற மக்களாலும், சில சொந்த நாட்டுச் சகோதர மக்களாலும் ஏற்பட்டன.

நெகேமியாவுக்கு ஏற்பட்ட சவால்களும் வெற்றி கண்ட முறைகளும்

வாசிப்போம்
நெகேமியா 4:1-18

பாபிலோனிய படையெடுப்புக் காரணமாக அழிவடைந்த மதிலை மீண்டும் நெகேமியாவின் தலைமைத்துவத்தின் கீழ் கட்டப்படுவதை அறிந்த எதிரிகள் பிரசித்தமாக நெகேமியாவையும் அவரது இனத்தையும் இகழ்ந்தனர்.

தன் தோழர்கள் முன்னிலையிலும், சமாரியப்படையின் முன்னிலையிலும் ''இந்த அற்ப யூதர்கள் என்ன செய்ய முடியும்? அவர்கள் சும்மா விடப்படுவார்களா? அவர்களால் பலி செலுத்த முடியுமா? ஒரு நாளில் வேலையை முடித்து விடுவார்களா? எரிந்துபோன சாம்பல் குவியலிலிருந்து அவர்களால் கற்கள் உண்டாக்க இயலுமா?''

நெகேமியா 4:2

இவ்வாறாகப் பிற இனத்தவரின் ஏளனச் சொற்களை நெகேமியா சகித்துக் கொண்டார். அவர் எதிர்தரப்பினருக்காக இறைமன்றாடல்களுடன் செயற்பட்டார். புதிய ஏற்பாட்டில் இயேசு சபிப்போருக்கும் இகழ்ந்து பேசுவோருக்கும் இறைவனிடம் வேண்டுங்கள் (லூக்கா 6:28) என எமக்கு வழிகாட்டியுள்ளதை இங்கு நாம் நினைவு கூறலாம்.

நீங்களும் இன்று சமூகத்தில் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கும் இகழ்வுக்கும் உள்ளாகி இருப்பீர்கள். அவ் வேளைகளில் அவர்களுக்குத் துன்பம் கொடுக்காது, அவர்களுக்காக மன்றாடுங்கள்.

''இவ்வாறு நாங்கள் மதிலைத் தொடர்ந்து கட்டினோம். எல்லா மதில்களும் பாதி உயரத்திற்கு எழும்பி விட்டன. மக்களும் பணி செய்வதில் முழு உள்ளத்துடன் ஈடுபட்டனர்''.

நெகேமியா 4:6

இறைமன்றாட்டுகளில் துணிவுபெற்ற நெகேமியா பிறரின் உள்ளங்களைத் துணிவுபடுத்தினார்.

''நாங்களோ எங்கள் கடவுளை வேண்டினோம். அவர்களிடமிருந்து காத்துக்கொள்ள, இரவும் பகலும் காவலர்களை அமர்த்தினோம்''.

நெகேமியா 4:9



மதில் கட்டுதல்

ஆண்டவரில் உறுதியான விசுவாசத்துடன் செயற்பட்ட நெகேமியா, மக்கள் மனதிலும் இறை விசுவாசத்தை வலுப்படுத்தினார். அதுமட்டுமல்ல முயற்சி மற்றும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டார்.

''அந்நாள் முதல் என் பணியாளர்களில் பாதிப் பேர் வேலை செய்தனர். மற்றப் பாதிப் பேர் ஈட்டி, கேடயம், வில், மார்புக்கவசம் இவைகளை அணிந்து கொண்டு நின்றனர். மக்கள் தலைவர்கள் யூதா வீட்டார் அனைவரையும் மேற்பார்வை செய்தனர்''.

நெகேமியா 4:16

இவ்வாறு எதிரிகளின் சூழ்ச்சிகளை அறிந்த யூதர், அந்த சவாலின் முன் ஒன்றிணைந்து செயற்பட்டு வெற்றி பெற்றனர். ஒரு குழுவினர் வேலை செய்ய மற்ற குழுவினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். எதிரிகளின் சூழ்ச்சியானது மதில் கட்டும் பணிக்கு இடையூறாக அமையவில்லை.

இறைவனிடமிருந்து தூர விலகி செயற்பட்ட மக்களுடன் நெகேமியா இறை திட்டத்தை செயற்படுத்தினார். விண்ணப்பம், விசுவாசம், அர்ப்பணிப்பு என்பனவற்றால் செய்ய முடியாதவை ஒன்றுமில்லை என நெகேமியா எமக்கு எடுத்துக் காட்டியுள்ளார். இஸ்ரயேல் மக்களின் உலகியல் பாதுகாப்பை உறுதிப்படுத்திய நெகேமியாவின் அடுத்த படிமுறை அவர்களின் ஆன்மீக வாழ்வை வலுப்படுத்துவது ஆகும்.

u©x \÷Põuµ ©UP Í õÀ ö|÷Pª ¯õÄUS HØ£mh \ÁõÀP Ð® A ÁØøÓ öÁØÔ P s h • øÓP Ð®

வாசிப்போம்
நெகேமியா 5:1 - 5

நெகேமியாவுக்கு பிறர் மூலமாக ஏற்பட்ட சவால்களைப் போன்று தனது சொந்த மக்கள் சமூகத்தாலும் சவால்கள் ஏற்பட்டன. அவற்றுள் சில சவால்கள் பின்வருமாறு,

1. உணவுப் பற்றாக்குறை
2. உணவை விலை கொடுத்து வாங்கப் பணமில்லாமை
3. செல்வந்தரின் எதிரில் அடிமையாக செயற்பட நேர்ந்தமை
4. தாங்க முடியாத அளவில் வரிச் சுமை அதிகரித்தமை

இஸ்ரயேல் மக்களின் மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளுக்கு முன்னால் நெகேமியா அதைரியம் அடையவில்லை. அவர் நன்றாகச் சிந்தித்து தனது மக்களின் பலவீனத்தை வெளிபடுத்திக் காட்டினார். தவறுகளைத் திருத்திக்கொள்ளும் வண்ணம் அவர்களுக்கு அறிவுரை வழங்கினார். யூத சட்டத்துக்கு ஏற்ப இறை பயம் நிறைந்த வாழ்வைக் கட்டியெழுப்ப மக்களுக்கு வழிகாட்டினார்.

1. மேலதிக வட்டியுடன் கடன் வழங்குதலை நிறுத்தல்
2. அடிமைகளுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தல்
3. ஆண்டவருக்கு அஞ்சி வாழ்தல்

எருசலேம் மதிலைக் கட்டிய மக்களின் உலகியல் வாழ்வைப் பாதுகாத்த நெகேமியா அவர்களது ஆன்மீக வாழ்வையும் வலுப்படுத்த முயற்சி செய்தார். ஆண்டவருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் இடையே உருவான உடன்படிக்கைக்கு ஏற்ப வாழ்வதற்கு மக்கள் நெகேமியாவின் முன் திரும்பவும் வாக்குறுதி அளித்தனர். ஆண்டவரின் உடன்படிக்கைக்கு ஏற்ற வண்ணமாக வாழ்பவர் கடவுளால் பாதுகாக்கப்படுவர் என நெகேமியா மக்களுக்கு எடுத்துக் காட்டினார்.

C ì µ÷¯À ©UP Î ß uø»ÁÚõQ¯ ö|÷Pª¯õ

இஸ்ரயேல் மக்களின் தலைமைத்துவத்துக்கும் சமூகத் தலைவர்களுக்கும் இடையே வேறுபாடு காணப்பட்டது. இஸ்ரயேல் தலைவர்களின் செயற்பாடுகள் எரியும் தீபவிளக்கை ஒத்தது. விளக்கில் வெளிச்சம் பெற எண்ணெயும் திரியும் அவசியம். அவைகள் குறைவு பட வெளிச்சம் தோன்றுகின்றது.

இஸ்ரயேல் தலைவர் தமது வாழ்வை அர்ப்பணித்துத் தமது மக்களின் வாழ்வை மேம்படுத்த செயற்பட்டனர்.

இஸ்ரேயல் தலைவர்களின் வாழ்வின் பண்புகள்

- அவர்கள் ஆண்டவரால் தெரிவு செய்யப்பட்டவர்கள்

- தலைவரான ஆண்டவருக்குக் கீழாக நின்று இறைவிருப்பத்தை நிறைவேற்று பவர்கள்.

- எப்போதும் இறை தொனிக்கு கீழ்ப்படிபவர்கள்
- நாட்டு மக்களின் பணியாளனாகச் செயற்படுபவர்கள்
- இறைவாக்கினர் மற்றும் குருக்களின் அறிவுரைகளை ஏற்றுக்கொள்பவர்கள்
- தமது மக்களின் குரலுக்குச் செவிகொடுப்பவர்கள்
- செல்வத்தையும் அதிகாரத்தையும் சேகரித்து வைக்காதிருப்பவர்கள்
- தன்னிடம் உள்ளவைகளை பிறர் நலனுக்குப் பயன்படுத்துபவர்கள்

நெகேமியா இஸ்ரயேல் மக்களின் நேர்மையான தலைவன் ஆவர். ஆண்டவரின் பாதுகாப்பில் விசுவாசம் வைத்து தன்னிடம் உள்ளவை அனைத்தையும் ஒப்புவித்தார் என்பதைப் பின்வரும் திருவிவிலயப் பகுதி மூலமாக அறியலாம்.

வாசிப்போம்
நெகேமியா 5:14-19

பாபிலோனிய சிறைவாசத்துக்குப் பின்னர் தமது நாட்டுக்குத் திரும்பிய இஸ்ரயேல் மக்கள் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுத்தனர். இக் காலகட்டத்தில் இஸ்ரயேல் மக்களின் சுமைகளைத் தாங்கிய நெகேமியா மக்களுக்குச் சுமையாக அமையவில்லை. அதற்காக அவர் பலதரப்பட்ட அர்ப்பணிப்புடன் தியாகத்தையும் செய்தார். இஸ்ரயேல் சமூகத்தின் ஆளுநருக்கு உரித்தான வரப்பிரசாதங்கள் மற்றும் உரிமைகளை நெகேமியா தமது மக்களுக்காக அர்ப்பணித்த சில விடயங்கள் பின்வருமாறு:

- ♦ ஆளுநருக்கு உரித்தான உணவு, பானங்களைக் கைவிடுதல்
- ♦ ஆளுநருக்கு மக்களால் உரிமையாகும் பொன் நாணயங்களை வசூலிக்காதிருத்தல்
- ♦ தனது அதிகாரத்தால் மக்களுக்குத் துன்பம் விளைவிக்காதிருத்தல்
- ♦ பலாத்காரமாக எந்தவொரு இடத்தையும் உரிமையாக்கிக் கொள்ளாதிருத்தல்

\‰P |» Ý UPõP ö|÷Pª ¯õ ¤ß£ØÔ¯ öPõÒøPPÒ

- தனது ஒரு வேளை உணவைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளல்
- தனது பணியாளர்களை மதில் கட்டுவதில் ஈடுபடுத்தல்
- தனது பணத்தில் பணியாளருக்குச் சம்பளம் வழங்குதல்
- மதில் கட்டுவதற்காக தனது முழு சிரமத்தையும் அர்ப்பணித்தல்

இஸ்ரயேல் மக்கள் எதிர் நோக்கிய சவால் நிறைந்த சந்தர்ப்பத்தில் இறைபலம் எனும் ஆயுதத்தால் நெகேமியா வெற்றி கண்டார். நாள்தோறும் வாழ்வில் பல்வேறு சவால் களை எதிர்நோக்கும் நாம் நெகேமியாவின் வாழ்விலிருந்து பெற்றுக்கொள்ளும் முன்மாதிரிகள் சில பின்வருமாறு:

- அவிசுவாசம் மற்றும் கீழ்ப்படிவற்ற நிலை பரவிக் காணப்படும் சமூகத்தில் இறைவிருப்பத்தைச் செயற்படுத்தல்
- இருள் சூழ் காலத்திலும் நெகேமியாவைப் போன்று விசுவாசத்துடன் பயணித்தல்
- தமது எதிரிகளுக்காக இறைவேண்டுதல் செய்தல்
- எமது அனைத்து செயல்களையும் இறைவனுடன் இணைந்து நிறைவேற்றல்
- எதிர்காலத்தை இறைவனிடம் ஒப்புவித்து தியாகத்துடனும் மகிழ்வுடனும் வாழ்தல்
- அதிகாரம், செல்வம் என்பனவற்றைத் தேவையற்ற வகையில் பாவிக்காதிருத்தல்
- பணியாளர் தலைமைத்துவத்தைப் பின்பற்றல்
- ஆண்டவரிடம் ஒப்படைத்துள்ள சிறு மக்கள் மூலமாக அவர் பெரிதான செயல்களைச் செய்வார் என்பதை ஏற்றுக்கொள்ளல்.

ஒரு நபரின் செயற்பாட்டால் முழு சமூகமும் இறைவனால் மாற்றம் அடைந்ததை நெகேமியாவின் வாழ்வின் கதையினூடாக வெளிப்படுகின்றது. அன்று மட்டுமல்ல இன்றும் சமூகத்தில் இறைவன் செயற்படுகின்றார்.

சிந்திப்போம்

- ♦ இறைபாதுகாப்பில் விசுவாசம் வைத்து சமூகப் பணியில் ஈடுபடுவோம்.
- ♦ எமது நற் செயல்களால் நாம் வாழும் சமூகத்தில் நல் மாற்றம் ஏற்படுத்த முயற்சிப்போம்.

ö\ ¯Ø£õk

1. மதில் கட்டும் செயற்பாட்டில் நெகேமியா எதிர்நோக்கிய சவால்கள் 2 குறிப்பிடுக.
2. நெகேமியாவில் நீர் காணும் தலைமைத்துவப் பண்புகள் 5 குறிப்பிடுக.
3. உமது வகுப்பறையில் சகோதர சகோதரிகளில் நல்ல மனப்பான்மைகளை உருவாக்க நெகேமியாவை முன்னுதாரணமாகக் கொண்டு நீர் செயற்படக் கூடிய சந்தர்ப்பத்தை விபரிக்குக.

23 ÁÀ»ø© {øÓ¢u ÁõÌÄ G÷µª¯õ

இயேசு இவ் உலகுக்கு வருமுன்னர் பல்வேறு கால கட்டங்களில் இறைவனின் விருப்பை மக்களுக்கு அறிவிப்பதற்கு அழைக்கப்பட்டவர்கள் இறைவாக்கினர் என அழைக்கப்பட்டனர்.

இப்பாடத்தில் இறைவாக்கினர் எரேமியாவையும் அவரது இறைவாக்குப் பணியையும் அறிந்து, அவற்றால் எமது வாழ்விற்குக் கிடைக்கும் பயன்களை ஆராய்வோம்.

CøÓÁõUQÚº £ o

இறைவனால் அழைப்புப் பெற்று அவரது செய்திகளை மக்களுக்கு அறிவிப்பவர்கள் இறைவாக்கினர் என அழைக்கப்படுகின்றனர். இறைவாக்கினர் என்பதற்கு எபிரேய மொழியில் 'நபி' என்னும் சொல்லும் கிரேக்க மொழியில் ''ப்ரொபெடெஸ்'' என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டன. அதன் பொருள் ''இறைவனுக்காகக் கதைப்பவன்'' என்பதாகும்.



உரு 23:1 மக்களுக்கு வழிகாட்டிய இறைவாக்கினர்

இறைவாக்கினர் எரேமியா திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ள பிரதான இறைவாக்கினர்களுள் ஒருவர். எரேமியா என்பதன் பொருள் 'ஆண்டவர் உயர்த்துவார்' என்பதாகும். இறைவாக்கினர் எரேமியாவின் தந்தை இலிக்கியா பென்ஜமீன் குலத்தைச் சேர்ந்த குருவானவர் ஆவர். இதனால் எரேமியா சிறுவயது முதல் சமயச் சூழலில் வளர்ந்து வந்தார்.

இறைவாக்கினர் எரேமியா கி.மு 7ஆம் ஆண்டின் இறுதி அரைக் காலப் பகுதியில் பணிக்குக் கடவுளால் அழைக்கப்பட்டார். இறைவாக்கினர் எசாயாவின் மரணத்தின் பின்னர் நீண்டகால அமைதிக்குப் பின்னர் இறைவாக்கினர் பணிக்காக எரேமியா அழைக்கப்பட்டார். இஸ்ரயேல் மக்கள் இறைவனை விட்டு தூர விலகிச் சென்ற காலகட்டத்தில் எரேமியாவின் அழைப்பு இடம்பெற்றது. இறைவன் எரேமியாவுடன் ஏற்படுத்திய தனிப்பட்ட உரையாடல் மூலமாக இந் நிகழ்வு இடம்பெற்றது.

1. ***அழைப்பு*** -

> எனக்கு அருளப்பட்ட ஆண்டவரின் வாக்கு தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன். நீ பிறக்கு முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன். மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத் தினேன்.
>
> **எரேமியா 1:4-5**

- எரேமியாவின் அழைப்பானது தாயின் வயிற்றில் அவர் பிறக்கு முன்னரே திட்டமிடப்பட்டது என கடவுள் அறிவிக்கின்றார். இறைவனின் திட்டத்தை நிறைவேற்ற அழைக்கப்படுபவர், அவரது தொனிக்குச் செவிமடுத்துக் கீழ்ப்படிதல் அவசியமாகும்.

இன்று ஒவ்வொருவரையும் ஏதாவதொரு பணிக்காக ஆண்டவர் அழைத்துள்ளார். இயேசுவுக்கும் சிறு வயதிலேயே தனது பணி குறித்த அறிவு காணப்பட்டது என்பதைத் திருவிவிலியம் எடுத்துக் காட்டுகின்றது. நாமும் இளம்வயது முதல் இறையழைப்புக்கான அவதானத்துடன் இருத்தல் அவசியம்.

2. ***தனது இயலாமையை அறிவித்தல்***

> நான் ''என் தலைவராகிய ஆண்டவரே எனக்குப் பேசத் தெரியாதே, சிறு பிள்ளைதானே '' என்றேன்.
>
> **எரேமியா 1:6**

இறைவாக்கினர் எரேமியா இறையழைப்புக்குப் பொருத்தமானவர் அல்ல எனத் தாழ்வாகக் கூறினார். தனது பலவீனத்தைக் கூறி விருப்பமின்மையை வெளிப்படுத்தினார். இருப்பினும் எரேமியா தனது அழைப்பை ஏற்றுச் செயற்பட்டார்.

- இறையழைப்புக்கு உரிய மாறுத்தரம் காட்டுதல் அவசியம். இளம் வயது முதல் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து செயற்பட முயல்வோம். எமது பலவீனத்தை ஆண்டவரிடம் ஒப்படைத்து அவர் எம்மை அழைத்த பணிக்காகப் பலப்படுத்துவார் என விசுவாசிப்போம்.

3. ***ஆண்டவரால் தைரியப்படுத்தப்படல்***

> ''ஆண்டவர் தம் கையை நீட்டி என் வாயைத் தொட்டு என்னிடம் கூறியது இதோ பார்! என் சொற்களை உன்வாயில் வைத்துள்ளேன்''
>
> **எரேமியா 1:9**

ஆண்டவர் எரேமியாவின் வாயைத் தொட்டு அவரை துணிவடையச் செய்தார். அதன் மூலமாக ஆன்மீக சக்தி பெற்று அழைப்பை ஏற்றுக்கொண்டார். ஆண்டவர் தமது பணியாளர்களைப் பலப்படுத்தி ஆசி வழங்குகின்றார். அப்போது சவால்களை எதிர்நோக்கி இறைதிட்டம் நிறைவுபெற செயற்பட முடியும்.

- ஆண்டவர் தமது அழைப்பை நிறைவேற்ற அவசியமான வழிகாட்டலும் பலமும் அளிக்கின்றார். ஆண்டவர் எமக்கு அளிக்கும் ஆன்மீக பலத்தால் பணியில் ஈடுபட முயல்வோம்.

4. ***பணியில் ஈடுபடுதல்***

> பிடுங்கவும் தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நடவும் இன்று நான் உன்னை மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன்.
>
> **எரேமியா 1:10**

இது சவால் நிறைந்த பணியாகப் புலப்படுகின்றது. ஆண்டவர் தான் தெரிவு செய்யப்பட்ட இறைவாக்கினருக்குப் பலம் அளித்து, பொறுப்புக்களை நிறைவேற்ற அழைக்கின்றார் என்பதும் புலப்படுகின்றது. ஆண்டவரை மறந்து பயணம் செய்த இஸ்ரயேல் மக்களுக்கு உடன்படிக்கைக்கு ஏற்ப வாழாவிட்டால் எதிர்காலத்தில் இஸ்ரயேல் மக்களுக்கு பல்வேறு துன்பங்களை எதிர்நோக்க வரும் என எரேமியா எடுத்துக் காட்டினார்.

வழிதவறிச் சென்ற சமூகத்தை ஆண்டவரிடம் மீண்டும் கொண்டு வரும் பொறுப்பானது கிறிஸ்தவர்களாகிய எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எரேமியாவின் அழைப்பில் நாம் பெறும் வழிகாட்டல்

- வாழ்வின் எந்தவொரு வேளையிலும் எமக்கு அழைப்புக் கிடைக்கும்.
- இளம் வயது முதல் எமது அழைப்புக்குக் கீழ்ப்படிந்து செயற்பட வேண்டும்.
- தமது அழைப்பை ஏற்றுவாழ எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.
- இறை வழிகாட்டலில் விசுவாசத்துடன் இருக்க வேண்டும்.

எரேமியா கண்ட காட்சிகள்

வாசிப்போம்
எரேமியா 1:11-15

1. வாதுமை மரக்கிளை

- என் வாக்கை செயலாக்க நானும் விழிப்பாயிருப்பேன்.

இஸ்ரயேல் மக்களின் தண்டனை முன்னதாக இடம்பெற விருப்பதை இது அடையாளப் படுத்துகின்றது.



உரு 23:2 முன்கனிகொடுத்த வாதுமை மரம்

2. வடக்கிலிருந்து சாய்ந்திருக்கின்றன கொதிக்கும் பானை

- நாட்டில் குடியிருப்போர் அனைவர் மீதும் வடக்கிலிந்தே தீமை பாய்ந்து வரும்



உரு 23:3 கொதிக்கும் பானை

இக் காட்சிகளின் மூலமாக இஸ்ரயேல் மக்கள் தீய செயல்களை விட்டு நல் வழிக்கு வரத் தவறினால் அவர்களுக்கான தீர்ப்பு நிகழும் என்பதாக ஆண்டவர் வெளிப்படுத்தினார்.

''என் பெயர் விளங்கும் இந்தக் கோவில் உங்கள் பார்வையில் கள்வரின் குகையாகிவிட்டதோ? நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்'' என்கிறார் ஆண்டவர்.

எரேமியா 7:11

இஸ்ரயேல் மக்களின் பற்றுறுதியின்மையை ஆண்டவர் அறிவார் என எரேமியா அவர்களுக்கு அறிவித்தார். கொலை செய்தல், களவு செய்தல், பிற தெய்வங்களை வழிபடுதல், துன்புறுவோரை ஒதுக்குதல் போன்ற இஸ்ரயேலரின் தீய செயல்களைக் கூறலாம். தீய செயல்களில் ஈடுபட்டு கோவிலுக்கு வந்து நல்ல நபராக அவரை வழிபடுவதற்கு எதிராகத் தமது தீர்ப்பை அறிவித்தார். இறைவனுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையை உடைத்து மக்களால் கோவில் நிரம்புதல் திருடர்களின் குகையோ என வினவினார். இஸ்ரயேல் உடன்படிக்கையை மீறிச் செயற்பட்டனர் என்பதால் புது உடன்படிக்கை உருவாக்கப்பட்டது என இறைவாக்கினர் கூறினார்.

''அந் நாள்களுக்குப் பிறகு இஸ்ரயேல் வீட்டாரோடு நான் செய்யவிருக்கும் உடன்படிக்கை இதுவே. என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன். அதை அவர்களது இதயத்தில் எழுதி வைப்பேன். நான் அவர்களின் கடவுளாய் இருப்பேன். அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள்'' என்கிறார் ஆண்டவர்.

எரேமியா 31:33

இங்கு இறைவாக்கினர் எரேமியா இஸ்ரயேல் மக்களிடம் ஏற்படுத்திய புது உடன்படிக்கையை வெளிப்படுத்துகின்றார். இதன் ஊடாக மக்கள் தனிப்பட்ட வகையில் ஆண்டவருடன் தொடர்பு கொண்டு சட்டதிட்டங்களுக்காக அல்ல தமது உள்ளத்தால் இறைவனுடன் உருவாக்கும் உடன்படிக்கை எனக் குறிப்பிடுகின்றார்.

ஆண்டவர் இறைவாக்கினர் எரேமியாவுக்கு ஒப்படைத்த பொறுப்புக்களை அவர் உரிய முறையில் நிறைவேற்றினார். மக்கள் அவரை மறுத்தனர். குருக்கள், அரசர் எரேமியாவை இறைவனை அவமானம் செய்கிறவன் எனச் சமூகத்திலிருந்து ஒதுக்கினர். இஸ்ரயேல் மக்களுக்கு எதிர் காலத்தில் நிகழவிருக்கும் ஆபத்துக்களை எரேமியா வெளிப்படுத்தினார். சிறப்பாக கோவில் மற்றும் எருசலேம் நகரின் அழிவு குறித்து மக்களுக்கு அறிவுறுத்தினார். ஒரு சந்தர்ப்பத்தில் அவரைக் கிணற்றில் வீசி வாழ்வை அழித்துவிட முயன்றனர். (எரேமியா 38.1) ஆனாலும் அதைரியம் அடையாமல் தமது பணியை அர்ப்பணிப்புடன் செய்து வந்தார். இவ்வாறு நல்ல சமூகத்தை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்ட எரேமியா எமக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து வழிகாட்டுகின்றார்.

இறைவாக்கினர் எரேமியாவைப் போன்று நல்ல சமூகத்தை உருவாக்க பங்களிப்பு வழங்கும் நாம் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்:

- தாம் வாழும் சமூகம் குறித்து நன்கு அறிந்து செயற்படல்.
- சமூகத்தின் நன்மை, தீமை செயல்களை அறிந்திருத்தல்.
- தீய செயல்களுக்கு எதிராகச் செயற்படல்.
- தீய செயல்களைச் சமூகத்திலிருந்து நீக்கத் துணை புரிதல்.
- இடையூறுகள், சவால்கள் மத்தியில் துணிவுபெற்றுச் செயற்படல்.
- இறை தொனிக்குக் கீழ்ப்படிந்து இறைவிருப்பை நிறைவேற்றல்.
- இறை அபிப்பிராயங்களை இவ் உலகில் நிறைவேற்றப் பங்களிப்பு வழங்குதல்

ö\¯Ø£õk

1. இஸ்ரயேல் சமூகத்தில் இறைவாக்கினர் ஆற்றிய பணிகள் யாவை?
2. இறைவாக்கினர் எரேமியாவின் அழைப்பில் உமக்குக் கிடைக்கும் வழிகாட்டல்கள் யாவை?
3. இன்று சமூகத்தில் காணப்படும் தீய செயல்கள் நான்கு குறிப்பிட்டு அவைகளைத் தவிர்க்க உம்மால் எடுக்கக் கூடிய நடவடிக்கைகளை எழுதுக.